திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
ஏப்ரல் 2026,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:09, Pages:56
April-2026, Price Rs.20/-



**ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாஸ பரிணயம் - திருமலை**
**25-04-2026 முதல் 27-04-2026 வரை**

## ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி பிரம்மோத்ஸவம் - நாகுலாபுரம்

**30-04-2026 முதல்**
**09-05-2026 வரை**



30-04-2026, வியாழன்
சேனாதிபதி உத்ஸவம்,
அங்குரார்ப்பணம்

01-05-2026, வெள்ளி
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

02-05-2026, சனி
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

03-05-2026, ஞாயிறு
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

04-05-2026, திங்கள்
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வ பூபால வாகனம்

05-05-2026, செவ்வாய்
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட சேவை

06-05-2026, புதன்
பகல் : ஹனுமத் வாகனம்
மாலை வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

07-05-2026, வியாழன்
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

08-05-2026, வெள்ளி
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

09-05-2026, சனி
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

## ஸ்ரீ கோனேடிராய ஸ்வாமி பிரம்மோத்ஸவம் - கீலபட்லா

**23-04-2026 முதல் 02-05-2026 வரை**

23-04-2026, வியாழன்
சேனாதிபதி உத்ஸவம்,
அங்குரார்ப்பணம்

24-04-2026, வெள்ளி
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரியசேஷ வாகனம்

25-04-2026, சனி
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

26-04-2026, ஞாயிறு
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

27-04-2026, திங்கள்
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

28-04-2026, செவ்வாய்
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருடசேவை

29-04-2026, புதன்
பகல் : அனுமத் வாகனம்
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

30-04-2026, வியாழன்
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

01-05-2026, வெள்ளி
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

02-05-2026, சனி
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



ப$_4$யாத்$_3$ரணாது$_3$பரதம்
மம்ஸ்யந்தே த்வாம் மஹாரத$_2$ா:।
யேஷாம் ச த்வம் ப$_3$ஹுமதோ
பூ$_4$த்வா யாஸ்யஸி லாக$_4$வம்॥



எவருடைய பார்வையில் நீ
முன்னர் மிகவும் பெருமை பெற்றவனாக இருந்து
விட்டு, இப்பொழுது தாழ்வை அடைவாயோ,
அந்த மகாரதிகள் உன்னை பயத்தினால் யுத்தத்
திலிருந்து பின்வாங்கியவனாக நினைப்பார்கள்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–35*



தேறியமா ஞானமுடன் றிருக்கோ ளூரிற்
சித்திரையிற் சித்திரைநாள் வந்து தோன்றி
யாறியநல் லன்புடனே குருகூர் நம்பிக்
கனவரத மந்தரங்க வடிமை செய்து
மாறனையல் லாலென்று மறந்துந் தேவு
மற்றறியே னெனுமதுர கவியே நீமுன்
கூறியகண் ணிநுண்சிறுத்தாம் பதனிற் பாட்டுக்
குலவுபதி னொன்றுமெனக் குதவு நீயே.

திருக்கோளூர் என்னும் திவ்யதேசத்தில், சித்திரை மாதத்துச் சித்திரைத் திருநக்ஷத்ரத்தில், தெளிந்த நிறைந்த அறிவுடன் வந்து அவதரித்து, பண்பட்ட சிறந்த பக்தியுடன், திருக்குருகூருக்கு ஸ்வாமியான நம்மாழ்வாருக்கு, இடைவிடாது அந்தரங்க கைங்கர்யம் செய்து, நம்மாழ்வாரை அன்றி, எக்காலத்தும், தவறியும், வேறு தெய்வத்தை அறியேன் என்று கூறிய, மதுர கவியே! நீ முன்பு அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு என்று தொடங்கும் பிரபந்தத்தில், விளங்குகின்ற பதினொரு பாசுரங்களையும், நீ எனக்கு அருள்வாயாக.

*– சுவாமி வேதாந்த தேசிகர்*

# பங்குனி உத்திரத் திருநாளில்...





தமிழ் மாதங்களில் இறுதியான, பங்குனி மாதத்தில் தெய்வத் திருமணங்கள் நடைபெறுவது ஒரு சிறப்பானது ஆகும். மஹாலக்ஷ்மித் தாயார் பாற்கடலிலிருந்து உதித்த நாளே பங்குனி மாதத்தில் வரும் உத்திர நட்சத்திரமாகும். பெரிய பிராட்டியான ரெங்கநாயகித் தாயாரின் திருவவதார திருநட்சத்திரமும் பங்குனி உத்திரம் ஆகும். அனைத்து உயிர்களுக்கும் அன்னையாக, கருணைப் பெருங்கடலாக, நாம் செய்யும் தவறுகள் அனைத்தையும் போக்கி புருஷகாரம் செய்பவளாகத் திகழ்பவளே பெரிய பிராட்டியார். பங்குனி உத்திரம் என்றவுடனே ஸ்ரீரங்கத்தில் விசேஷமாக கோலாகலமாக நடைபெறும் மட்டையடி உத்ஸவம், பிரணய கலஹ மஹோத்ஸவம் இறுதியாக தாயாருடன் நம்பெருமாளுக்கு நடைபெறும் சேர்த்தி உத்ஸவமே நினைவுக்கு வரும். ஏறக்குறைய வைணவ ஆலயங்களில் இந்த நந்நாளில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்தில் படிதாண்டா பத்தினியாக, பட்டத்து மகாராணியாக ஸ்ரீபுண்டரீகவல்லித் தாயாருக்கும், ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமிக்கும் பிரணய கலஹ மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெறும். பிரம்மோத்ஸவங்களில், மற்றும் பிற உத்ஸவங்களில் ஸ்ரீதேவி, பூதேவியருடன் ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி திருவீதி வலம் வருவது நமக்கு தெரிந்த விஷயமே. இவ்வாலயத்தில் எத்தனை உத்ஸவங்கள் நடைபெற்றாலும், பங்குனி உத்திரம் அன்று நடைபெறும் இவ்வுத்ஸவம் அனைத்து உத்ஸவங்களுக்கும் சிகரமாகத் திகழ்கிறது எனலாம்.

புண்டரீக வல்லித் தாயாருக்கு காலையில் சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள் நடைபெறும். மாலை நேரத்தில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமிக்கும் புண்டரீகவல்லித் தாயாருக்கும் பிரணய கலஹ மஹோத்ஸவம் முடிந்த பிறகு, ஆலய மண்டபத்தில் கோவிந்தராஜ ஸ்வாமி ஸ்ரீபுண்டரீகவல்லித் தாயார் சமேதரராக பக்தர்களுக்குக் காட்சியளிப்பர். நைவேத்தியம், தீபாராதனைகள் ஆனபின்னர் ஸ்வாமி தனது கருவறைக்குத் திரும்புவார். வேதங்கள் ஓத, பிரபந்தங்களைப் படிக்க, இசைக் கலைஞர்களின் இனிய நாதத்துடன் தாயாருக்குச் சிறப்பு ஊஞ்சல் சேவை நடைபெறும்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்




# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஏப்ரல் 2026 மலர் 05 இதழ் 09



சிறப்பு ஆசிரியர் :
திரு. முத்தாட ரவிச்சந்திரா, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்.
பிரதான ஆசிரியர் (முழு கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,
அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி.,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்


## உள்ளுறை


| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| ஸ்ரீவராகனும் ஸ்ரீநிவாசனும் | - பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 7 |
| சோழ மண்டல கருட சேவைகள் | - திரு. சதா. ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம். | 10 |
| நல்லோரைக் காக்கும் வல்லம் நரசிம்மர் | - திரு.டி.ஆர்.மனோகர், தஞ்சாவூர். | 14 |
| ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும் | - திரு. ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. | 16 |
| அன்புச் சீடன் அனந்தாழ்வான் | -திரு.கே.இராமநாதன், சேலம். | 18 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : ஸ்ரீசீதா தேவியும் ஜீவாத்மாவின் பயணமும் | - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 21 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் | - டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர். | 24 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: ஸ்ரீவத்சத்துடன் திருவாழ்மார்பன் | - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 25 |
| செஞ்சுலக்ஷ்மி திருக்கல்யாணம் (அகோபிலம்) | - திரு.அத்தி. ரங்கராஜன், திருப்பதி. | 31 |
| தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை | - முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை. | 34 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருஅயோத்தி | - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 37 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்: அருளாளப்பெருமாள் எம்பெருமானார் | -ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,சென்னை. | 40 |
| ஆரோக்கியம் காப்போம்: சூரியனும் ஆரோக்கியமும் | -ஆயுர்வேத மருத்துவர் டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை. | 44 |
| சித்திரை மாதத்தில்... | - முனைவர் பா.காயத்ரி, சென்னை. | 46 |
| ராசிபலன்கள் : ஏப்ரல் 2026 | - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 47 |
| நீதிக்கதை : போதும் என்பதே பொன் செய்யும் மருந்து | -திரு.இரா.அருண்குமார், புதுச்சேரி. | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | | 49 |
| சித்திரக்கதை : திட்டமிட்ட வாழ்க்கை | | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை .

பின்னட்டை : ஸ்ரீபத்மாவதித் தாயார், திருச்சானூர்.



# அவதாரம் – வாழ்வியல் வழிகாட்டி

வசந்த உற்சவம் என்பது வசந்த காலத்தின் (சித்திரை–வைகாசி) வருகையை வரவேற்கும் விதமாகவும், கோடை வெப்பத்தைத் தணிக்கும் வகையிலும் இறைவனுக்கு நடத்தப்படும் சிறப்பு விழாவாகும். இது பூக்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் குளிர்ந்த நீரால் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்து, குளிர்ச்சியூட்டி மகிழும் ஒரு வசந்த கால கொண்டாட்டமாகும். வசந்தம் – புதுப்பிறப்பு. இறைவன் – நித்திய சக்தி. அதாவது, வாழ்க்கையில் சோர்வு நீங்கி, ஆன்மீகப் புத்துணர்ச்சி பெற வேண்டும் என்பதைக் குறிக்கிறது. எளிமையாகச் சொன்னால் இயற்கை புதுப்பிக்கும் காலத்தில், இறைவனின் அருளையும் புதுப்பித்து அனுபவிக்க செய்வதற்காகவே கோயில்களில் வசந்த உற்சவம் நடத்தப்படுகிறது. மலர்கள் பூத்துக் குலுங்கும் காலத்தில் நடைபெறும் இவ்விழாவில், இறைவனுக்குப் பலவகை மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்படுகிறது.

அதேபோன்று பிரம்மோற்சவத்தின் போது தெரிந்தும் தெரியாமலும் ஏற்படும் குறைபாடுகள் (தோஷங்கள்) நீங்கவும், இயற்கை பேரிடர்களில் இருந்து உலகைக் காத்து, நலம் பெறவும், மூலவர் மற்றும் உற்சவர்களுக்கு பல்வேறு மலர்களால் புஷ்பயாகம் (மலர் அபிஷேகம்) நடத்தப்படுகிறது. பிரம்மோற்சவ நாட்களில் நடக்கும் பல்வேறு சேவைகள், வழிபாடுகளில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கி, பரிபூரண பலனைப் பெற இந்த யாகம் செய்யப்படுகிறது. பலவகைப்பட்ட நறுமண மலர்களால் இறைவனுக்குப் பூஜை செய்து, அவனது அருளைப் பெற்று, உலகிற்கு அமைதியை நிலைநாட்டுவதே இதன் முக்கியக் காரணம்.

உயர்ந்த வாழ்க்கை தத்துவ முறைகளைக் கொண்ட சனாதன தர்மம் வேத காலத்தில் இருந்து உண்மை, கர்மாவின் கொள்கை, தர்மத்தின் நடைமுறை ஆகியவற்றின் அடிப்படையில் தொடர்ந்து வரும் ஒரு வாழ்வியல் முறையாகும். வேதங்கள், உபநிடதங்கள், பகவத் கீதை, இதிகாசங்கள் ஆகியவை சனாதன தர்மத்தின் அடித்தளங்கள் ஆகும். ஆன்மாவின் இயல்பு, பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சி, முக்தியை அடைவது ஆகியவை இதன் முக்கிய குறிக்கோள்கள் ஆகும். சமூகத்தையும் பிரபஞ்சத்தையும் நிலை நிறுத்தக்கூடியவைகளான தர்மம், அகிம்சை, கருணை, தானம், தூய்மை, புலன் கட்டுப்பாடு மற்றும் அறிவினைப் பெருக்குதல் ஆகியவை முதன்மையான சூத்திரங்கள் ஆகும்.

இந்த தர்மத்தினைக் காத்திட எம்பெருமான் மட்டுமல்ல பல ஞானிகளும் அவதாரம் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் மானிடர்களின் அக இருளைப் போக்கி நல்வழிக்காட்டிடவும், தர்மத்தை நிலைநாட்டிடவும், ஞானத்தைப் போதித்திடவும் அவதரித்தார்கள். அவ்வகையில் இம்மாதத்தில்தான் எம்பெருமான் மகாவிஷ்ணு பிரளய காலத்திலும் தர்மத்தைக் காத்திட மத்ஸ்ய அவதாரமும், தீயவர்களிடமிருந்து நிலத்தினை (பூதேவியை)க் காத்து வராக சரம சுலோகத்தை உபதேசித்து வராக மூர்த்தியாகவும், நாம பாராயணம் நம்மை உடனே காத்திடும் என்பதை உணர்த்திட நரசிம்ம மூர்த்தியாகவும், தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பதை உணர்த்திட பரசுராமராகவும், ஒரு மனிதன் ஒழுக்க நெறிகளோடு சிறந்த மகனாகவும், கணவனாகவும், சகோதரனாகவும் மற்றும் அரசனாகவும் வாழ்ந்து அனைத்து உயிர்களும் சமமானது என்பதை உலகிற்குகற்பிக்க இராமனாகவும் அவதாரம் எடுத்து உணர்த்தினார்.

இக்கலி காலத்திலும் சனாதன தர்மத்தினை நிலைநாட்டிட எட்டெழுத்து மந்திர பாராயணம் மோட்சத்தை அளிக்கும் என்பதை அருளிய இராமானுஜரும், ஆத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்பதை போதித்த சங்கராசாரியாரும், பரமாத்மாவை எளிதில் அடைந்திட குருவே சிறந்த வழிகாட்டி என்பதை உணர்த்திட்ட மதுரகவி ஆழ்வாரும், அனந்தாழ்வானும், முதலியாண்டானும், கலியுக மக்களை காத்திட திருமலையில் திருவேங்கடமுடையான் எழுந்தருளக் காரணமாக இருந்த பிருகு மகரிஷியும் அவதரித்த மாதமாகும் இது. இவர்கள் மட்டுமின்றி திருமாலின் பெண் பக்தையான தரிகொண்ட வெங்கமாம்பாவும் அவதரித்த மாதமாகும்.

இவ்வாறாக தமது அவதாரங்களின் மூலம் நம் வாழ்வியலுக்கு வழிகாட்டிய எம்பெருமானையும், ரிஷிகளையும், மகான்களையும் நினைவில் கொள்வதே அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

# ஸ்ரீவராகனும் ஸ்ரீநிவாசனும்

– பேராசிரியர்
எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

ஏப்ரல் மாதம் பங்குனியும் சித்திரையும் கலந்த மாதம். சிசிர ருது முடிந்து வசந்த ருது ஆரம்பிக்கும் காலம். பல ஆலயங்களில் வசந்த உற்சவத்தைச் செய்வார்கள். திருமலையில் வசந்த உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும்.

இது தவிர சித்திரையில் வராக அவதாரச் சிறப்பும் வரும். இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் (7.4.2026) செவ்வாய்க்கிழமை பஞ்சமி திதியில் வராக ஜெயந்தி உற்சவம் வருகிறது.

அதனை ஒட்டி இக்கட்டுரையில் வராகப் பெருமானையும் மலையப்ப ஸ்வாமியையும் இணைத்து விஷயங்களை அனுபவிப்போம். திருமாலின் மூன்றாவது அவதாரம் வராக அவதாரம். பூமியை அபகரித்து கடலுக்கடியில் கொண்டு சென்ற இரணியனின் தம்பி இரண்யாட்சன் என்ற அசுரனிடமிருந்து பூமியையும், பூமிப் பிராட்டியையும் காக்க, வராக அவதாரமெடுத்த பகவான் மகாவிஷ்ணு, ஆயிரம் ஆண்டுகள் போரிட்டு அசுரனை வென்று பூமா தேவியைக் காத்தார் என்பது வரலாறு.

*பாசிதூர்த் துக்கிடந்த பார்மகட்கு பண்டொருநாள்*
*மாசுடம்பில் நீர்வார மானமிலாப் பன்றியாம்*
*தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்*
*பேசி யிருப்பனகள் பேர்க்கவும் பேராவே*

என்று ஆண்டாள் நாச்சியார் வராகப் பெருமானைக் கொண்டாடுகிறாள் . 'மானமிலாப் பன்றி' என்பதை உபமானம் இல்லாப் பன்றி என்பர். அதாவது ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருமான் என்று ஆசாரியர்கள் வியாக்கியானம் செய்தார்கள்.

பொதுவாகவே உலகத்தை அளந்த திரிவிக்ரம அவதாரத்தை மிகப்பெரிய அவதாரமாகச் சொல்வார்கள். ஆனால் அவர் அளந்த உலகமானது, வராகப் பெருமானின் மூக்கில் ஒட்டிக் கொண்ட சோற்றுப் பருக்கை போல் இருந்ததாம். ஏழு கடல்களும் அவருடைய கால் பாதத்தைக் கூட நனைக்கவில்லை என்றெல்லாம் சாஸ்திரங்கள் விளக்கும் போது வராகப் பெருமான் எவ்வளவு பிரம்மாண்டமான வடிவம் என்பதையும், அவருடைய விஸ்வரூப தரிசனம் எத்தனை உயர்வானது என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.



ஆண்டாள் பாடுவதில் இன்னொரு விசேஷமும் உண்டு. அரங்கநாதனை வராகப் பெருமாளாக ஆண்டாள் கொண்டாடு கிறாள். அந்த ரங்கநாதப் பெருமாள் திருவரங்கத்தில் எழுந்தருள்வதற்கு முன்னால், திருமலையில் நின்றவன் என்பதால், வராகப் பெருமாள்தான் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக, திருமலையில் நிற்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

வராகர் பூமியை உத்தாரணம் செய்த விஷயத்தை, நம்மாழ்வார் திருவாய் மொழியில் பாடுகிறார்.

*கோல மலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ!*
*நீல வரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்ததொப்ப கோல*
*வராகமொன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்!*
*நீலக்கடல் கடைந்தாய்!உன்னைப்பெற்று*
*இனிப்போக்குவனோ?*

இந்தப் பூமியை உத்தாரணம் செய்தவன் வராகப் பெருமான். அதே பூமியைக் காப்பதற்காக கண்கண்ட தெய்வ மாக நிற்பவர் மலையப்ப ஸ்வாமி. இருவருடைய நோக்கமும் இந்த உலகத்தைக் காப்பதுதான். நாடு முழுவதும் வராகப் பெருமானுக்குப் பல கோயில்கள் இருந்தாலும் திருமலையில் உள்ள வராகப் பெருமானின் கோயில் மிகவும் விசேஷமானது. திருமலைத் தலம் ஆதியில் வராகத் தலமாகவே இருந்து உள்ளது. அங்கே இருக்கக்கூடிய புஷ்கரணிக்கு ஸ்வாமி புஷ்கரணி என்று பெயர். அதன் கரை மேல் அமைந்துள்ளது ஆதி வராக ஸ்வாமி திருக்கோயில். அன்று முதல் இன்று வரை முதல் பூஜை வராகப் பெருமானுக்குத்தான்.

*ஸ்ரீ வேங்கட வராஹாய ஸ்வாமி புஷ்கரணி தடே*
*சர்வணர்ஷே துலா மாஸே ப்ராதுர்பூதாத்மனே நம*

“திருவேங்கட மலையில் உள்ள ஸ்வாமி புஷ்கரணியில் ஐப்பசி மாதம் திருவோண நன்னாளில் தோன்றிய வராகப் பெருமாளுக்கு வணக்கம்” என்பது இந்த சுலோகத்தின் பொருள்.

பாத்ம புராணத்தில் திருமலை வராகத் தலமாக விளக்கப்பட்டுள்ளது. புராணத்தில் வேங்கடேசப் பெருமாள் தங்க இடம் வேண்டுகிறார். அவருக்கு வராகப் பெருமாள் இடம் வழங்கியதாக கதை உண்டு. வராகப் பெருமாளிடம் “இம் மலையில் உம்மைக் காணும் பாக்கியம் பெற்றேன். கலி யுகம் முடியும் வரை இங்கேயே நான் வசிக்க வேண்டும் என்கிற ஆசை உள்ளது. எனக்கு வசிக்க இடம் அளிக்க வேண்டும்” என்று கேட்கிறார்.

அதற்கு வராகரும், “சரி.அதற்கு பிரதி உபகாரம் என்ன? அதைச் சொல்லிப் பெற்றுக் கொள்ளும்” என்று கூற, வேங்கடேசப் பெருமாளும் “இத்தலத்தில் உம்மையே எல்லோரும் முதலில் வணங்கு வர். பால் திருமஞ்சனமும், நைவேத்திய மும் உமக்கே நடைபெறும்” என்று கூற, வராகப் பெருமானும் சீனிவாசனுக்கு சில அடிகள் இடத்தைக் கொடுத்தார் என்று புராணத்தில் வருகிறது.

திருமலையில் உள்ள மலையப்ப ஸ்வாமிக்கு, பூஜைகள் தொடங்குவதற்கு முன்பு வராகப் பெருமாளுக்குப் பூஜை செய்யப்பட வேண்டும் என்பதே நியதி. யாத்திரை செல்பவர்கள் வராகத் தீர்த்தத் தில் நீராடி, வராக ஆனந்த விமானத்தை வணங்க வேண்டும்.

வராகப் பெருமானுக்கு இராமாநுஜர் ஒரு உத்ஸவ மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்துள்ளார். அவருக்கு ஒரு நாள் அத்யயன உத்ஸவம், வராக ஜெயந்தி உத்ஸவம் நடத்தினார்.

பொதுவாக மற்ற திருத்தலங்களில் சித்திரையில் வராக ஜெயந்தி அனுசரித் தாலும், திருமலையில் வராகர் தோன்றிய ஐப்பசி திருவோணத் தினத்தன்று சிறப்பாக உத்ஸவம் நடத்தி அருளினார். இன்றும் அப்படியே நடைபெற்று வருகிறது.

மேலும், இன்றும் வராகரை வணங்கி விட்டே மலையப்பனை வணங்க வேண்டும் என்பது நியதியாக உள்ளது. அப்பொழுது தான் திருமலை பெருமாளின் வழிபாடு பூரணத்துவம் பெறும். ஸ்ரீமுஷ்ணம் பூவராக ஸ்வாமி கோயிலில் வராக ஜெயந்தி, சித்திரை மாதத்தில், தேய்பிறை பஞ்சமி திதியில் கொண்டாடப்படுகிறது. இது, பூமி தேவியை இரண்யாட்சன் என்ற அசுரனிடம் இருந்து மீட்டெடுத்த வராக அவதாரத்தின் நாள் (பூமிக்கு வந்த நாள்) ஆகும். இந்த நாளில், பூவராகப் பெருமாளுக்குச் சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெறும்.

இந்த ஆலயத்தில் இன்னொரு விசேஷம் உண்டு. எப்படி திருமலையில்,

முதலில் வராகப் பெருமானைத் தரிசித்து விட்டு சீனிவாசப் பெருமாளைத் தரிசிக்க வேண்டுமோ, அதைப் போலவே ஸ்ரீமுஷ்ணத்தில், ராஜ கோபுரத்தின் அருகில், மலை போன்ற மேடான பகுதியில் அமைந்துள்ள சீனிவாசன் சன்னதியில், சீனிவாசனைத் தரிசித்து விட்டு வராகப் பெருமானைத் தரிசிப்பது சிறப்பு.

இனி திருமலையின் வராகப் பெருமாளையும் திருவேங்கடவனையும் இணைத்து, திருமழிசை ஆழ்வார் பாடிய திருச்சந்த விருத்தப் பாடல் ஒன்றை அனுபவிப்போம்.

*குன்றில் நின்று வானிருந்து நீள்கடல் கிடந்து, மண்*
*ஒன்று சென்றது ஒன்றை உண்டது ஒன்று இடந்து*
*பன்றியாய்,*
*நன்று சென்ற நாள் அவற்றுள் நல்லுயிர் படைத்தவர்க்கு,*
*அன்று தேவ மைத்து அளித்த ஆதி தேவன்அல்லையே?*

–திருச்சந்த விருத்தம் 48

வேங்கடக் குன்றில் நின்றாய், வானில் (பரம பதம்) நின்றாய், கடலில் (பாற்கடல்) கிடந்தாய், மண்ணில் நடந்தாய், மண்ணை உண்டாய், மண்ணைப் பன்றியாகிக் கிண்டினாய் – இப்படி ஆதி தேவன் ஆயினான் என்கிறார் ஆழ்வார்.



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



**பூர்ணஸ்ஸதே$_3$வ்யாஸ்த$_2$ ஜக$_3$ாம ரங்க$_3$ம் தச்சாபி**
**வ்ருத்தம் ஸ நிசம்ய ருஷ்ட:।**
**ராமாநுஜார்யோ கு$_3$ருப$_4$க்திபூர்ணஸ்ஸ்வதே$_3$**
**விகாம் மாத்ருக்$_3$ருஹம் நிநாய ॥** (49)

அதற்குப்பின் பெரியநம்பி தமது மனைவியை அழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கம் சென்று விட்டார். (ஸ்ரீபெரும்பூதூரிலிருந்து திரும்பி வந்து) அச்செய்தியைக் கேள்விப்பட்ட ஆசார்ய பக்திமிக்க இராமாநுஜரும் மிகக் கோபங்கொண்டவராய், தமது மனைவியைத் தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டார்.

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது



திருமலையில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் திருமலையில் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அனைவரையும் "கோவிந்தா" என்றே அழையுங்கள். இல்லங்களில் இருந்தாலும் "கோவிந்த நாம" பாராயணம் செய்தல் நன்று.

இந்தப் பாசுரத்தில், "பன்றியாய் இடந்து" என்று வராக அவதாரத்தைச் சொல்லி, "குன்றில் நின்று" என்று சீனிவாசப் பெருமாளின் அவதாரத்தையும் இணைத்துப் பாடுகிறார்.

திருவேங்கடப் பெருமாளும் வராகப் பெருமாளும் இணைந்து அருளும் இடம் திருவேங்கடம் என்பதை இந்தப் பாசுரத்தில் அழுத்தமாகப் பதிவு செய்கிறார்.

அதனால்தான் *''ஞானபிரானை அல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே''* என்று பாடிய நம்மாழ்வார், அந்த ஞான பிரான் தான் மலையப்ப ஸ்வாமியாக நிற்கிறார் என்பதைத் தெரிவிக்க *''புகல் ஒன்றும் இல்லா அடியேன் உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே''* என்று மலையப்ப ஸ்வாமியிடம் சரணாகதி செய்கிறார். வராகப் பெருமானை *''கோலமா மலர் பார்வைக்கு அன்பன்''* என்று பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு அவரைப் போற்றினார்.

மலையப்ப ஸ்வாமியிடம் சரணாகதி செய்கின்ற பொழுது, *''அகல கில்லேன் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா''* என்று பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு சரணடைந்தார். இப்படிப் பல கோணங்களில், ஆழ்வார்கள் பார்வையிலும் ஆசாரியர்கள் பார்வையிலும், மலையப்ப ஸ்வாமியும் வராகப் பெருமானும் இணைந்து காட்சி தருகிறார்கள். அதுதானே நமக்கும் வேண்டும்.

# சோழ மண்டல கருட சேவைகள்

வைணவ திருக்கோயில்களில் பெருமாள் சன்னதிக்கு நேர் எதிரில் எழுந்தருளி சுவாமியை வணங்கி மகிழும் வண்ணம் உள்ள கருடனைப் பெரிய திருவடி என்று அழைப்பார்கள்.

பெருமாளின் திருவடியினைத் தனது கைகளில் தாங்கிக் கொண்டிருப்பதால் அவர் திருவடியில் இருந்து கமழும் வேதமானது கருடனின் உடல் முழுதும் பரவியிருப்பதால் கருடனை வேதஸ்வரூபி என்று கூறுவர். கருடனின் சிறகசைவில் சாமவேதத்தின் தொனி உருவாவதாக கருட பஞ்சாசத்தில் ஸ்வாமி தேசிகன் போற்றுகிறார்.

கச்யபர் மகரிஷி – விந்தை ஆகிய இருவருக்கும் பிறந்த மழலைகள் கருடன் மற்றும் அருணன் ஆவார்கள். (அருணன் சூரியனின் தேரோட்டியாவார் என்பது கூடுதல் சிறப்பாகும்). அருணனின் புதல்வர் களான ஜடாயுவும், சம்பாதியும் இராமாயண இதிகாச காவியத்தில் வலம் வரும் பக்ஷி ராஜாக்கள் ஆவர்.

கஜேந்திர மோக்ஷத்தின் போது பெருமாளுக்கு அங்கவஸ்திரம் அணிந்து கொள்ளக் கூட நேரம் இன்மையால், அதை ஏந்தியவாறே கருடனும் பறந்து வந்துவிட்டாராம். அதனால்தான் கருட சேவையின் போது கருடனின் கைகளில் அங்கவஸ்திரம் சாற்றப்பட்டிருக்கும் என்பது ஐதீகம்.

பெரியாழ்வார் கருடனின் அம்சம் என்பதாலும், ஆண்டாளின் தந்தை என்பதாலும் ஸ்ரீவில்லிபுத்தூர் ரங்கமன்னார் திருக்கோயிலில் கர்ப்ப க்ருஹத்திலேயே கருடனும் எழுந்தருளியுள்ளார். அது போல் திருவெள்ளியங்குடி தலத்தில் மூலமூர்த்தியான ஸ்ரீகோல வில்லி ராமர் சன்னதி எதிரில் அமர்ந்தக் கோலத்தில் சங்கு, சக்கரம் ஏந்திய வண்ணம் கருட பகவான் எழுந்தருளி உள்ளது கூடுதல் சிறப்பாகும்.

கருட புராணம் மற்றும் பல இதிகாச புராணங்கள் சிறப்பிக்கும் கருட மூர்த்தியின் மீது (வாகனத்தில்) பெருமாள் எழுந்தருள நடைபெறும் கருடசேவை விழா வானது உலகளவில் மிகப் பிரசித்தம். அதுவும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் (சோழ மண்டலத்தில்) சில குறிப்பிட்ட ஊர்களில் நடைபெறும் சிறப்பு மிக்க கருட சேவைகளைப் பற்றி அனைவரும் அறிய வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.



வருடம் தோறும் வைகாசி மாதம் திருவோண நட்சத்திர தினத்தன்று தஞ்சை மாநகரில் 24 கருட சேவையும், அட்சய திரிதியை அன்று கோயில் மாநகரமான கும்பகோணத்தில் நடக்கும் பன்னிரண்டு கருட சேவையும் மற்றும் தை அமாவாசைக்கு மறுநாள் நடக்கும் (நாகை மாவட்டம்) திருநாங்கூர் (11) கருடசேவையும் குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. சதா. ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம், 94882 41383

**கும்பகோணத்தில் நடைபெறும் அட்சய திருதியை நாள் கருடசேவைகள் சிறப்பு**

கோயில் நகரமான கும்பகோணத்தில் ஆண்டுதோறும் சித்திரை மாதம் வளர்பிறையில் அமாவாசைக்குப் பிறகு வரும் 3வது திதியான அட்சய திருதியை தினத்தில் இப்பகுதியில் அமைந்துள்ள 12 வைணவ ஆலயங்களில் இருந்து (இன்னும் சில ஆலயங்களில் இருந்தும்) உற்சவ பெருமாள்கள் குடந்தை நகரின் முக்கிய வீதியான டி.எஸ்.ஆர். பெரிய தெருவில் அமைக்கப் பெற்றுள்ள அலங்காரப் பந்தலில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்கள்.

அட்சய திருதியை விழாவையொட்டி அருள்மிகு ஸ்ரீசாரங்கபாணி சுவாமி, ஸ்ரீசக்கரபாணி சுவாமி, ஸ்ரீராமசுவாமி, ஸ்ரீஆதிவராக சுவாமி, கடைத்தெரு இராஜ கோபால சுவாமி, பாட்ராச்சாரியார் தெரு ஸ்ரீகிருஷ்ணசுவாமி, வெங்கட்ராயர் அக்ரஹாரம் ஸ்ரீபட்டாபிராம சுவாமி , சோலையப்பன் தெரு இராமசுவாமி, தோப்புத்தெரு இராஜகோபால சுவாமி, மல்லுகச் செட்டித்தெரு ஸ்ரீசந்தான கோபாலகிருஷ்ண சுவாமி, புளியஞ்சேரி ஸ்ரீவேணுகோபால சுவாமி, கொட்டையூர் ஸ்ரீநவநீத கிருஷ்ண சுவாமி, மேலக்காவேரி ஸ்ரீவரதராஜப் பெருமாள், அகோபிலமடம் ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி மற்றும் பிரமன்கோயில் தெருவில் இருந்து ஸ்ரீவரதராஜப் பெருமாள், ஸ்ரீவேத நாராயண பெருமாள், ஸ்ரீவெங்கடேச பெருமாள் ஆகிய கோயில்களின் உற்சவ மூர்த்திகள் கருட வாகனத்தில் எழுந்தருளி சேவை சாதிப்பார்கள். இவ்விழாவில் நேர் எதிர் சேவையில் கடைத்தெரு ஸ்ரீஆஞ்சநேயர் எழுந்தருள கருடசேவை விழா மிகச்சிறப்பாக நடைபெறும். இந்த கருடசேவையைத் தரிசனம் செய்தால் சகல ஐஸ்வர்யம் பெருகும் என்பது ஐதீகம்.

**வைகுண்ட ஏகாதசி தினத்தன்று சிவாலயத்தில் நடைபெறும் கருடசேவை விழா**

காக்கும் கடவுளான ஸ்ரீமகாவிஷ்ணு பகவான் திருக்கோயில்களில் நடைபெறும் கருடசேவை போன்று கோயில் நகரம் என அழைக்கப்படும் கும்பகோணத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீபிரஹன்நாயகி சமேத ஸ்ரீ நாகேஸ்வரர் சிவாலயத்தில் (மகா சிவராத்திரி முதல் காலம் ஆதிசேஷன் வழிபட்ட நாக தோஷ பரிகாரத் தலம்) ஆண்டுதோறும் வைகுண்ட ஏகாதசி அன்று கருட வாகனத்தில் வேணுகானம் இசைக்கும் ஸ்ரீ வேணு கோபாலர் வீதியுலா திருக்காட்சி உற்சவம் நடைபெற்று வருகிறது. இதனை போல் வேறு எந்த சிவாலயங்க ளிலும் கருடசேவை இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## காலம் அழியேல்

**புதிய ஆத்திசூடி 14**



நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?

“வீணை” என்று பாரதியார் நம்மையும், நம் வாழ்க்கையையுமே குறிப்பிடுகிறார். ஏனென்றால் உலகத்தில் உள்ள செல்வங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டினால் கூட இழந்து விட்ட கால நேரத்தைத் திரும்பப் பெற இயலாது.

நாம் நமது வாழ்வில் மூன்றில் ஒரு பகுதி தூக்கத்தில் செலவிடுகிறோம். மூன்றில் அடுத்த ஒரு பகுதி பிற வேலைகளில் ஆடல், பாடல், கேளிக்கை, விளையாட்டு எனச் செலவிடுகிறோம். மீதமிருக்கும் ஒரு பகுதியை மட்டுமே நாம் உழைப்பதற்காகப் பயன்படுத்துகிறோம்.

அவ்வாறு வீணாக்கி நம் வாழ்வின் பெரும் பகுதியை இழந்து விடக் கூடாது என்பதைத்தான் பாரதியார் இவ்வாறு கூறுகிறார். எட்டு எட்டாக மனித வாழ்வைப் பிரித்துக் கொள் எனும் பாடல் வரி கூட இதை அடிப்படையாக வைத்தே எழுதப்பட்டது. நாம் எடுத்த காரியம் யாவற்றையும் திட்டமிட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும். இமைப்பொழுது நேரத்தையும் வீணடிக்கக்கூடாது. ஏனென்றால் காலம் போனால் திரும்பி வராது. கால நேரத்தைப் போற்றிப் பாதுகாத்து செயல்கள் முடித்திட வேண்டும். இருக்கும் காலத்திற்குள் நாம் நமது வீட்டிற்கும், ஏன் நாட்டிற்கும் நன்மை பயக்கும் காரியங்களைச் செய்ய வேண்டும். காலத்தை வீணாக்காமல் “தோன்றின் புகழொடு தோன்றுக” என்ற குறளை மெய்ப்பிக்கும் வகையில் காலத்தை வீணாக்காமல் பயனுள்ள வகையில் செலவிடுங்கள் குழந்தைகளே!

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938





அருள்மிகு ஸ்ரீவேணுகோபாலர் கருடசேவை
குடந்தை கீழ்கோட்டம் சிவாலயம்



அருள்மிகு இராமசுவாமி ஆலயம்
கும்பகோணம்

### புராண வரலாறு

இவ்வாலயத்தில் அமையப் பெற்றுள்ள ஆனந்த சபாபதி சபையில் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் தாளமிட, ஸ்ரீவேணுகோபால சுவாமி புல்லாங்குழல் வாசிக்க ஆனந்தமாக திருநடனம் ஆடும் ஸ்ரீநடராஜப் பெருமானை **"குடந்தை கீழ்க் கோட்டக் கூத்தனாரே"** என்று அப்பர் பெருமான் பதிகம் அருளி மகிழ்ந்தார் என புராணங்கள் கூறுகின்றன.

சிவ வைணவம் இணைந்து அருளும் இத்தலத்தில் ஸ்ரீஹரிஹர தத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் வண்ணம் ஆண்டுதோறும் விஷ்ணு அம்சமான அருள்மிகு ஸ்ரீ வேணுகோபாலசுவாமி கருட வாகனத்தில் கருடசேவை சாதிப்பது கூடுதல் சிறப்பாகும்.

### ஸ்ரீசாரங்கபாணி ஆலயத்தில் கோமளவல்லித் தாயார் எழுந்தருள நடைபெறும் கருடசேவை

108 திவ்ய தேசங்களில் தாயார் கருட வாகனத்தில் எழுந்தருள கருடசேவை நடைபெறும் ஒரே தலம் இதுவாகும்.

கும்பகோணம் பூலோக வைகுண்டம் என அழைக்கப்படும். அருள்மிகு ஸ்ரீகோமளவல்லித் தாயார் சமேத ஸ்ரீசாரங்கபாணி எழுந்தருளியுள்ள திருக்கோயிலில் நடைபெறும் கோமளவல்லித் தாயார் பங்குனி உத்திர பிரம்மோற்சவத்தின் நான்காம் நாள் விழாவில், சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீ கோமளவல்லித் தாயார் கருட வாகனத்தில் எழுந்தருளி கருடசேவை சாதிப்பார்.



அருள்மிகு ஸ்ரீகோமளவள்ளி தாயார்
கருடசேவை - கும்பகோணம்

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட அளவில் திருநாகையில் அருள்மிகு ஸ்ரீசௌந்திரவல்லி சமேத ஸ்ரீசௌந்தராஜப் பெருமாள் ஆலயத்தில் நடைபெறும் ஆனி தாயார் பிரம்மோற்சவத்தின், நான்காம் திருநாளில் கருட வாகனத்துடன் புறப்பாடு காண்பார் என்பதும், ராஜமன்னார்குடி இராஜ கோபால சுவாமி ஆலயத்தில் தாயார் சன்னதி எதிரில் சிலை வடிவுடன் கருட சன்னதி உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், கும்பகோணம் அருகிலுள்ள நாச்சியார் கோவில் அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் மூலஸ்தானத்திலுள்ள கல்கருடனே உற்சவத்திற்கு எழுந்தருள்வார். இந்த கல்கருடசேவை வருடம் இருமுறை நடைபெறும். பங்குனி மாத பிரம்மோற்சவத்தின் போதும், மார்கழி மாதம் உற்சவத்தின் போதும் நடைபெறும். இது போல் கல்கருட சேவை வேறு எங்கும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை சிறப்புமிக்க இவ்விழாக்களைக் காணக் கண் கோடி வேண்டும். இவ்விழாவில் கலந்து கொண்டு கருடசேவையைக் காணும் பக்தர்களுக்கு எந்நாளும், நந்நாளே என்று சொன்னால் அது மிகையாகாது.

# குறுக்கெழுத்துப் புதிர் -117

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | | 3 | 4 | | | ■ | ■ | 5 |
| | | ■ | ■ | 6 | | | 7 | | | | |
| | | | ■ | | | 8 | | | | | |
| | | | | | | | ■ | ■ | | | |
| | | | | | | 9 | | | | | |
| | | | | | | | ■ | ■ | 10 | 11 | |
| | | | | | | | | | | | 12 |
| | ■ | 13 | | | 14 | | | | ■ | 15 | |
| | 16 | ■ | | ■ | | | | ■ | ■ | | |
| | | ■ | 17 | ■ | | | 18 | ■ | ■ | | |
| | | | | | | | | | | 19 | |
| 20 | | | | | | | | | | | 21 |

தொகுப்பு : திருமதி எஸ். இராஜகுமார், கொளத்தூர்.

புதிருக்கு விடை அறிய 26ஆம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

01. பேரருளாளனுக்கு திருவாலவட்டம் வீசியவர்...(9)
07. விராட பருவத்தில் தருமரின் பெயர்...(4)
08. பீஷ்மரைப் பழி வாங்கியவர்...(4)
09. ஏழு மோட்ச புரிகளில் ஒன்று...(3)
14. புண்ணிய நதிகளில் ஒன்று...(4)
20. நம்மாழ்வாரின் சாமவேத சாரமாக இருக்கும் திவ்ய பிரபந்தம்...(6)

## வலமிருந்து இடம்

12. இராமரிடம் சரணாகதி அடைந்த இராவணனின் சகோதரர்...(5)
19. நவக்கிரகங்களில் சூரியனை ...(10) என்று குறிப்பிடுவர்
21. திருமால் நான்கு திருக்கோலங்களில் சேவை சாதிக்கும் தலம்...(6)

## மேலிருந்து கீழ்

01. தாமே தோன்றிய திவ்ய தேசங்களில் ஒன்று...(7)
02. துவாபரயுகத்தில் ஸ்ரீமஹாலட்சுமியாக அவதரித்தவர்...(7)
03. பாடலாத்ரி நரசிம்மர் இருக்கும் தலம்...(10)
04. தசாவதாரத்தில் நான்காவது அவதாரம்...(10)
05. ஸ்ரீராமானுஜர் தீர்த்த கைங்கர்யம் செய்த திவ்ய தேசம்...(6)
06. மஹாவிஷ்ணுவின் திருமார்பில் உதைத்தவர்...(7)
15. பீமன் கொன்ற அரக்கன்...(3)
16. சீதையின் கணவர்...(3)

## கீழிருந்து மேல்

10. தட்டொளி என்று ஆண்டாள் எதை கூறுகிறார்...(4)
11. பாண்டவர்களில் ஜோதிடத்தில் தேர்ச்சி பெற்றவர்...(5)
13. இந்திரனின் தம்பியான வாமனரை...(6) என அழைப்பர்.
17. ஒரே நாளில் 17 முறை நைவேத்யம் படைக்கப்படும் தலம்...(7)
18. ஆண்டாள் ஏழாவது பாசுரத்தில் நாராயண மூர்த்தியை ...(4) அழைக்கிறாள்.
20. திருப்பாணாழ்வாரின் அவதாரத் தலம்...(5)
21. ஸப்த ஸ்தான தலங்களில் ஒன்று...(5)

### பிழைதிருத்தம்

கடந்த மார்ச் 2026 ஸப்தகிரி மாத இதழ் பக்கம் எண்.51-ல் கணித விளையாட்டு பகுதியில் புத்தகத்தில் உள்ள கணித வினா மற்றும் எழுதுகோளின் எண்ணிக்கை என்பதற்கு பதிலாக வில்லில் உள்ள கணித வினா, அம்பின் மேல் உள்ள விடை எனத் திருத்தி வாசிக்கவும்.

# நல்லோரைக் காக்கும் வல்லம் நரசிம்மர்



பட்டுக்கோட்டை திரு.டி.ஆர்.மனோகர்,
தஞ்சாவூர், 9942644807.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள வல்லம் நகர் மிகப் பழமையான வரலாற்றைக் கொண்ட ஊராகும்.

இவ்வூரில் தமிழ் பல்கலைக்கழகம் அகழாய்வு மேற்கொண்டு ஒரு நூலினை வெளியிட்டுள்ளது. "வரலாற்றில் வல்லம்" என்ற அந்த நூலில், வல்லத்தில் உள்ள நரசிம்மப்பெருமாள் விக்கிரகம் 'சோழ விண்ணகராழ்வார்' என்று சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக செய்தி உள்ளது.

இக்கோயிலில் பொது வருடம் 1128ஆம் ஆண்டு கல்வெட்டும் கண்டறியப்பட்டு உள்ளது.

**தல வரலாறு**

சப்த ரிஷிகளில் ஒருவரான கௌதம முனிவர் இங்கு ஆசிரமம் அமைத்து நாள்தோறும் பூஜைகள் செய்து வாழ்ந்து வந்தார். ஆசிரமத்தின் அருகில் தீர்த்தக்குளம் ஒன்றை உருவாக்கியிருந்தார். அத்திருக்குளத்தில் நீரெடுக்க வந்த சிலர் குளத்தை மாசுபடுத்தவே, அவர்களை கௌதமர் கடிந்து கொண்டார். அதனால் அவர் மீது ஆத்திரம் கொண்ட அவர்கள், கௌதம முனிவரை ஆசிரமத்தை விட்டு விரட்டி விட விநாயகரை வேண்டி விசேஷ பூஜைகள் செய்தனர்.



அவர்களின் வேண்டுகோளுக்காக விநாயகர் இரண்டு பசுக்களின் வடிவில் தோன்றினார். அத்துடன் ஆசிரமத்தில் கௌதமர் பயிரிட்டிருந்த விளைச்சல்களை மேய்ந்தார். அதைக் கண்ட கௌதமர் ஒரு தர்ப்பையை எடுத்து அந்தப் பசுக்களின் மீது வீசினார். அதன் காரணமாக பசுக்களின் உடலில் இருந்து கணபதி மறைந்து விட்டார். உடனே இரண்டு பசுக்களும் இறந்ததைப் போல வீழ்ந்து விட்டன.

அதைக் கண்ட பொறாமைக்காரர்கள், கௌதம முனிவர் பசுவதை செய்து விட்டதாகக் குற்றம் சாட்டி அவரை விரட்டி விட்டனர். தன் மீது ஏற்பட்ட பசுவதை பாவம் தீர்வதற்காக சிவனை நோக்கி கௌதமர் தவமிருந்தார்.

கௌதமருக்குக் காட்சியளித்த சிவனார், உமது ஆசிரமத்திற்கு "நரசிம்மர் விரைவில் எழுந்தருளுவார்" என்று கூறி மறைந்தார். அதன் பிறகு கௌதமர், தனது ஆசிரமத்தில் இருந்த மாதவப்



பெருமாள் விக்ரகத்தை வழிபடத் தொடங்கினார். அவ்விக்ரகம் இந்திரனால் கௌதமருக்கு அளிக்கப் பட்டதாகும். மாதவம் புரிந்தோர்க்குக் கிட்டாத பேறு தனக்குக் கிட்டியதால் மகிழ்ந்த கௌதமர், அப் பெருமாளுக்கு "மாதவப்பெருமாள்" என்ற திருநாமம் சூட்டி, தனது ஆசிரமத்தில் வைத்து வழிபடலானார்.

சிவனார் கூறிய நரசிம்மர் வருவார் என்ற வார்த்தைகள் பலிக்கும் நேரம் வந்தது. நரசிம்ம அவதாரம் எடுத்தத் திருமால், இரண்யனை அழித்தப் பிறகு அசுரர்களின் பிடியிலிருந்து அகிலத்தைக் காத் திட வலம் வந்தார். அப்போது "வல்லாசுரன்" என்ற அசுரன், மக்களை துன்புறுத்துவதை அறிந்த நரசிம்மப் பெருமாள் அவனை அழித்து விட்டு, கௌதமரின் ஆசிரமத்தில் யோகத்தில் அமர்ந்தார்.

நரசிம்மரால் வதம் செய்யப்பட்ட சமயத்தில் வல்லாசுரன் கேட்ட வரத்தின்படியே இவ்வூர் "வல்லம்" என்ற பெயர் கொண்டு விளங்குகிறது.

### ஆலய அமைப்பு

தஞ்சாவூர் திருச்சி சாலையை ஒட்டியுள்ள அலங்கார வளைவு வழியே வடக்கு நோக்கி சிறிது தூரம் சென்றால், ராஜ கோபுரம் இன்றி மொட்டை கோபுரமாக உள்ள நுழைவாயிலைக் காணலாம்.

கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் ஒரே சன்னதி யில் இரண்டு தும்பிக்கையாழ்வார் (விநாயகர்)கள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், ஸ்ரீராமாநுஜர், சுவாமி தேசிகன் ஆகியோரும், அதற்கு அடுத்த சன்னதியில் ஸ்ரீ ஆஞ்சநேயரும், அவருக்கு எதிர் சன்னதியில் ஸ்ரீராமரும் உள்ளனர்.

ஆலயத்தின் மேற்குப் பிரகாரத்தில் கமல வல்லித் தாயார், ஆண்டாள் நாச்சியார், ஐயப்பன் ஆகியோரை தனித்தனி சன்னதிகளில் தரிசிக்கலாம். கிழக்குப் பிரகாரத்தில் கொடி மரம், பலிபீடம், பரமபத வாசல் ஆகியவை உள்ளன. மேலும், ஒரு மண்டபம் உள்ளது. திருக்கோயிலின் தென் கிழக்குப் பகுதியில் மடப்பள்ளிக்கு அருகேயுள்ள பிரகாரத்தை வலம் வந்தபின் பிரதான நரசிம்மப் பெருமாளும், ஸ்ரீமாதவப் பெருமாளும் தெற்கு நோக்கிய சன்னதி மேடையில் திருமாலின் திருவடிகள் உள்ளன. வெளிப்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் கௌதம முனிவர் உண்டாக்கிய "கௌதம தீர்த்தம்" என்கிற திருக்குளம் திகழ்கிறது. கடந்த பிப்ரவரி மாதம் மஹாசம்ப்ரோக்ஷணமும் இந்த ஆலயத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்

### சிறப்பு பூஜைகள்

சித்திரை மாத சுவாதி நட்சத்திர நாளில் ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, ஆடிப்பூர நாளில் ஆண்டாள் நாச்சியாருக்கு திருக்கல்யாண உத்ஸவம் ஆகிய வைபவங்கள் நடத்தப்படுகின்றன.

### பிரார்த்தனை பலன்கள்

வல்லத்து ஸ்ரீமாதவ யோக நரசிம்மரை வழிபடுவோர்க்கு வல்லமை மிக்க மக்கள் செல்வம் கிடைக்கும். எதிரிகளின் தொல்லை, வீட்டில் தீய சக்திகளின் ஆதிக்கம் ஆகியவை அகலும். குடும்பத் தில் வறுமை நீங்கி செல்வம் பெருகும் என்பவை பக்தர்களின் நம்பிக்கையாகும்.

### ஆலய இருப்பிடம்

தஞ்சாவூர் திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 6 கி.மீ. மற்றும் பழைய பேருந்து நிலையத்திலிருந்து 12 கி.மீ. தூரத்திலும், திருச்சியில் இருந்து 40 கி.மீ.தூரத்திலும் வல்லம் உள்ளது. இவ்வூருக்கு அதிகமாக பேருந்து வசதியுள்ளது. வல்லம் பேருந்து நிலையத்திலிருந்து தஞ்சாவூர் செல்லும் சாலையில் சுமார் நூறு மீட்டர் தூரத்தில் ஆலயம் அமைந்து உள்ளது.


**தி.தி.தே. ஆலயங்களில் புஷ்ப யாக மஹோத்ஸவம்**

02-04-2026
ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி, வாயல்பாடு – திருப்பதியிலிருந்து 92 கி.மீ.

04-04-2026
ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி, ஒண்டிமிட்டா – திருப்பதியிலிருந்து 116 கி.மீ.

23-04-2026
ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி, திருப்பதி – பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ.




**யோ** நித்ய மச்யுத பதாம் புஜயுக்ம ருக்ம
வ்யா மோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே।
அஸ்மத்குரோர் பகவதோ஽ஸ்ய தயைக ஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

பூதம் ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகி வாஹாந் ।
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ர மிச்ராந்
ஸ்ரீமத் பராங்குச முநிம் ப்ரணதோ஽ஸ்மி நித்யம் ॥



# ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும்

திரு.ஏ.கே.கோபி,
கள்ளக்குறிச்சி,
94438 79592.

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணன் ஆதி சேஷன் அவதாரமாக பகவத் ஸ்ரீராமாநுஜரை பூலோகத்திலே திருவவதாரம் செய்வித்தருளி வேதங்களும் உபநிஷத்துக்களும் உணர்த்தும் உண்மையான அர்த்தங்களையும், பரம்பொருள் நிர்ணயத்தினையும், ஜீவாத்மாக்களின் பிறவாப் பெருநிலையான மோட்சத்திற்கான சரியான உபாயத்தினையும் ஆழ்வார்கள், ஆசாரியர்கள் திருவுள்ளக்குறிப்பின் வழி நின்று, உலகோர் அனைவரும் உய்வடையும்படி உணர்த்தி உபதேசித்து ஸ்ரீவைஷ்ணவ சரணாகத பிரபத்தி மார்க்கமான விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை உலகிலே நிலைநாட்டியருளினார்.

வீடாக்கும் பெற்றியறியாது மெய்வருத்திக்
கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர் -
வீடாக்கும்
மெய்ப்பொருள்தான் வேத முதற்பொருள்தான்
விண்ணவர்க்கு
நற்பொருள்தான் நாராயணன்

–நான்முகன் திருவந்தாதி –13

எம்பெருமானார் ஸ்ரீரங்கத்திருப்பதியில் நெடுங்காலம் வாழ்ந்திருந்து திருவரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்து, திருவரங்கத்திலே நடைபெறும் திருவிழாக்கள் உற்சவாதிகளெல்லாம் முறைமைப்படுத்தி அருளினார்.

சிஷ்யர்கள் கோஷ்டியுடனே பரசமய நிரசனம் வேத உபநிஷத் வாக்கியங்களின் விசிஷ்டாத்வைதபரமான அர்த்தங்கள் அருளுதல், ஸ்ரீபாஷ்யம் முதலான கிரந்தங்களை இயற்றுதல், திருவாய்மொழி உள்ளிட்ட பிரபந்தப் பாசுரங்கள் அருளும் பரம்பொருள் அனுபவம் வெளியிடுதல், புராணங்கள் ராமாயணம் மகாபாரதம் பகவத்கீதை முதலானவை உணர்த்தும் ரஹஸ்யார்த்தங்கள் இவற்றையெல்லாம் காலக்ஷேபம் செய்தருளினார்.

சரணாகதி தத்துவத்தை ஸ்வாமி நம்மாழ்வார் ஆசாரியார்களின் திருவுள்ளப்படி பொலிவுரும்படி செய்து, சேதனர்கள் அனைவருக்கும் ஜெகதாசாரியராகத் திகழ்ந்து திருவரங்கன் திருவடி நிழலிலே குளிர்ந்திருந்தார்.

*அஹமஸ்ம்யபராதா நாமாலயோஸ*

*கிஞ்சநோஸகதி:*

*த்வமேவோபாய பூதோமேபவதி ப்ரார்த்தநாமதி*

*ஸரணாகதிரித் யுக்தாஸா தேவேஸஸ்மிந்*

*ப்ரயுஜ்யதாம்*

–அஹிர் சம்ஹிதை 37–30

"அடியேன் குற்றங்களுக்கு இருப்பிடமாக உள்ளேன். அவற்றின் பலன்களில் இருந்து காத்துக் கொள்வதற்கு ஒரு உபாயமும் அற்றவனாக இருக்கிறேன். தேவரீரை தவிர்த்து வேறு கதியற்றவனாக இருக்கிறேன். தேவரீரே அடியேனுக்கு உபாயமாக இருக்க அருள் புரியவேண்டும்" என்று பகவானிடம் அத்யந்த பிரார்த்தனை செய்வதே சரணாகதியாகும்.

ஒரு பங்குனி உத்திர நன்னாளில் நம்பெருமாள் ஸ்ரீரங்கநாச்சியாருடன் சேர்த்தியாக சேவை தந்தருளும்போது, ஸ்வாமி இராமாநுஜர் திவ்ய தம்பதிகளின் சேர்த்தியைத் தரிசித்து உகந்திருக்கையில் ஸ்ரீவைஷ்ணவர்கள் செய்த பாக்கியத்தின் பயனாய் எம்பெருமானார் திவ்ய தம்பதிகளின் திருவுள்ளக்குறிப்பினை அவர்களின் திருமுக மண்டலத்திலே வெளியிட்டருளியதை சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீவைகுண்டகத்யம் என்பதாக மூன்று கத்யங்களை வெளியிட்டருளினார். அர்ச்சுனனுக்கு கீதை உபதேசம் ஸ்ரீகிருஷ்ணனால் நிகழ்ந்ததுபோலவே ஸ்ரீவைஷ்ணவர்களுக்காக பெருமாளும் பிராட்டியுமாக எம்பெருமானார் மூலமாக கத்யத்ரயத்தை சேதனர்களுக்கு பரம கிருபையாலே அருளினர்.

சரணாகதி கத்யம் **"அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறைமார்பா"** என்பதாக துவய மந்திரத்தின் அர்த்தத்தினையும், புருஷகார பூதையான பிராட்டியின் சேர்த்தியின் போதே எம்பெருமானின் திருவடிகளிலே சரணம் புகுவதான மார்க்கத்தினையும் அருளுவதாக பூர்வர்கள் திருவுள்ளம். ஸ்ரீரங்க கத்யத்தில் ஸௌலப்யத்தின் எல்லை நிலமான ஸ்ரீரங்கத்திலே சேவை சாதிக்கும் திருவரங்கன் திருவடிகளிலே சரணாகதி அனுஷ்டிக்க வேண்டும் என்பதாக எம்பெருமானார் அருளுகிறார்.

ஸ்ரீவைகுண்டகத்யத்தில் பரத்வத்திற்கு எல்லை நிலமான ஸ்ரீவைகுண்டநாதனை சரணம் புக வேண்டும் என உபதேசம் செய்தருளுகிறார் எம்பெருமானார். இந்த கத்யம் ஆறு சூர்ணைகளால் அருளப்பட்டுள்ளது. இந்த ஆறு சூர்ணைகளில் எம்பெருமானாரின் திருக்கண்களுக்கு காட்சியான ஸ்ரீவைகுந்த அனுபவமும், ஆழ்வார்கள் அனுபவமான ஸ்ரீவைகுந்த பாசுரங்களும் ஒருங்கமைந்து இருப்பது ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் உணர்ந்துணர்ந்து அனுபவிக்கவல்லது.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுக்கு பரமபத அனுபவத்தை ஸ்ரீவைகுண்டநாதன் அருளி அருளிச்செயல் பாசுரங்களாக ஆழ்வார்களின் திருவாக்காக வெளியிட்டருளினான். எம்பெருமானாருக்கும் அதே பரமபத அனுபவத்தை அருள ஸ்ரீவைகுண்டகத்யம் ஸ்ரீபகவத் ராமாநுஜரால் அருளப்பட்டது. எம்பெருமானாரின் அத்யந்த சிஷ்யரான ஸ்வாமி கூரத்தாழ்வான் தம்முடைய திருக்கண்களால் எம்பெருமானை சேவிக்கும் பேறு கிடைக்கப் பெறாத தவிப்பில் தம்முடைய ஆர்த்தி முழுதும் தீருகின்றபடிக்கு ஞானக் கண்களால் எம்பெருமானை ஸ்ரீவைகுண்டத்திலே தரிசனம் செய்து ஸ்ரீவைகுண்டஸ்தவம் சுலோகங்களிலே எம்பெருமானின் ஸ்வரூப ரூப திருக்கல்யாண குணங்களை அனுபவித்து அருளுகிறார்.

வைகுண்ட தரிசனம் தொடரும்...


## தற்போது விற்பனையில் தி.தி.தே. தமிழ் பஞ்சாங்கம்

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வருடந்தோறும் பஞ்சாங்கம் வெளியிடப்படுகிறது. பராபவ வருட (2026–2027) பஞ்சாங்கம் விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது. இந்த பஞ்சாங்கத்தில் தினசரி திதி, நக்ஷத்திரம், வாரம், யோகம், கரணம், ஹோரைகள் போன்ற விஷயங்களுடன், பொதுவான பஞ்சாங்கம் சார்ந்த விஷயங்கள், முகூர்த்த நாட்கள், திருமலை ஆலயம் மற்றும் அதைச் சார்ந்த தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் குறித்த பட்டியல்கள் போன்ற அரிய விஷயங்களுடன் தற்போது விற்பனையில்...

**மேலும் விவரங்களுக்கு :**
**துணை செயலாட்சித்தலைவர்,**
**தி.தி.தே. பதிப்பகம் மற்றும் விற்பனையகம்,**
**தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி.சாலை,**
**திருப்பதி-517 501. தொ.எண்.0877-2264209**

# அன்புச் சீடன் அனந்தாழ்வான்

திரு. கே. இராமநாதன், சேலம்,
94433 22202

உண்மையான அன்பை வாய்ச் சொல் வெளிப்படுத்தாது, சேவைதான் வெளிப்படுத்தும். அன்பு கருங்கல்லையும் பிளக்கச் செய்யும் – காந்தியடிகள்.

### குருவின் ஆணை

இராமாநுஜரின் சீடர்கள் பலர். அவர்களில் அவரது பேரன்பு பெற்ற சீடர்களில் அனந்தாழ்வான் தலையானவர் ஆவார். இராமாநுஜர் ஒரு முறை தன் சீடர்களிடையே உரையாற்றிக் கொண்டு இருந்தார். அப்போது அவர் சீடர்களை நோக்கி, திருமலையில் கோயில் கொண்டுள்ள திருவேங்கடமுடையானுக்குக் கைங் கர்யம் செய்திட உங்களில் யார் முன் வருகிறீர்கள்? என்று வினவினார். அது கேட்ட சீடர்கள், உயர்ந்த மலை, அங்கே நிலவும் மிகுந்த குளிர் மற்றும் காட்டில் சுற்றித் திரியும் பல கொடூர மிருகங்கள் ஆகியவற்றை எண்ணி அப்பணியைச் செய்யத் தயக்கம் காட்டினர். அப்போது ஒருபக்கம் ஒதுங்கி நின்றிருந்த அனந்தாழ்வான் இராமாநுஜரின் அருகில் வந்து மிகுந்த பணிவுடன், மதிப்பிற்குரிய குருவே, தாங்கள் எனக்கு அனுமதி தந்தால் நான் என் மனைவியுடன் திருமலை சென்று தங்கள் ஆணையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன் என்றார்.

### பெற்ற பணி

அன்புச் சீடனே! உன் சம்மதம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. திருமலைக்குச் சென்று வேங்கடவனின் வழிபாட்டிற்கு வண்ண மலர்கள் கொண்ட பூந்தோட்டத்தை அமைத்து, அதில் கிடைக்கும் மலர்களைக் கொண்டு தினமும் மாலை தொடுத்து வேங்கடவனுக்குச் சமர்ப்பிக்கும் பணியைச் செய்வாயாக என்று ஆணையிட்டார்.

### திருமலையில் அனந்தன்

குருவின் ஆணையை ஏற்ற அனந்தாழ்வான் தன் மனைவியுடன் திருமலை வந்தடைந்தார். அங்கே அவர் தன் கடின உழைப்பால் ஒரு குளத்தை அமைத்தார். வண்ண மலர்ச் செடிகள் கொண்ட ஒரு மலர்த் தோட்டம் அமைத்தார். அன்றலர்ந்த வண்ண மலர்களைத் தேர்ந்தெடுத்து மாலையாக்குவதையும், பின்னர் அதை வேங்கடவனுக்குச் சூட்டி வழிபாடு செய்வதையும் வழக்கமாகச் செய்து வந்தார்.

### ஆண்டவன் ஆணை

அனந்தாழ்வானின் சேவையால் வேங்கடவன் மிகவும் மனம் மகிழ்ந்தார். இந்நிலையில் ஒருமுறை வேங்கடவன் அனந்தாழ்வானின் குருபக்தியைச் சோதிக்க எண்ணினார். அதன்படி ஒருநாள் காலையில் தன் கோயில் பணியாள் ஒருவனை அழைத்து, நீ இப்போதே அனந்தாழ்வானைச் சந்தித்து நான் அழைத்ததாகச் சொல்லி உடனே வரச் சொல் என்றார். அந்தப் பணியாள் அனந்தாழ்வானை தோட்டத்தில் சந்தித்தான். அப்போது அவர் மாலை தொடுத்துக் கொண்டிருந்தார்.

பணியாள், வேங்கடவன் அவரை உடனே அழைத்து வரச் சொன்ன செய்தி






யைக் கூறினான். அது கேட்ட அவர், நான் இப் போது வேங்கடவன் சூடுவதற்கு மாலை தொடுத்துக் கொண்டிருக்கிறேன். எனவே நான் என் வேலையை முடித்து விட்டு வருகிறேன். இச்செய்தியைச் சொல்லிவிடு என்று கூறி அனுப்பி வைத்தார். பணியாள் மூலமாக அனந்தனின் பொறுப்பற்ற பதில் கேட்டு, தான் அழைத்தும் உடனே வராத செயலால் வேங்கடவன் கோபம் கொண்டார்.

**அனந்தனின் வருகை**

சிறிது நேரம் சென்றபின் அனந்தாழ்வான் தான் தொடுத்த மாலையை எடுத்துக் கொண்டு வேங்கடவனுக்குச் சூட்டுவதற்காக வந்தார். அதைப் பார்த்த வேங்கடவன் தன் கோபத்தை வெளிப்படுத்த நினைத்து திரைச் சீலையால் வாசலை மூடிவிட்டு உள்ளே சென்று விட்டார். இருப்பினும் அனந்தாழ்வானோ திரைச் சீலையை விலக்கி உள்ளே சென்றார். அப்போது வேங்கடவன், அனந்தா! நீ அங்கேயே நில். இனி ஒரு அடி கூட முன்னால் வைக்காதே. இது என் ஆணை என்றார்.

**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்தியம் வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்கள் வாழ்வில் நடத்திய திருவிளையாடல்கள் அதாவது தங்களுக்கு ஸ்வாமியின் திருவருள் கிடைத்த விதத்தினை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

*எங்கள் முகவரி :*

**பிரதான ஆசிரியர்,**
**"ஸப்தகிரி" அலுவலகம், 2வது தளம்,**
**தி.தி.தே. அச்சகக் கட்டிடம்,**
**கபிலத்தீர்த்தம் சாலை,**
**திருப்பதி - 517 507.**

**அஞ்சாத அனந்தன்**

ஆனால், அனந்தாழ்வானோ அதைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல் முன்னோக்கி வந்தார். அதைக்கண்ட வேங்கடவனுக்கு கோபம் மிகுந்தது. அவர், அனந்தா! என் ஆணையை மீறும் துணிவு சிவனுக்கும் பிரம்மாவுக்கும் கூட இல்லை. நீயோ ஒரு எளிய சேவகன். உனக்கு அவ்வளவு துணிச்சலா? இனிமேல் எனக்கு உன் மாலையும் வேண்டாம். உன் சேவையும் வேண்டாம். நீ இப்போதே இந்தக் கோயிலில் இருந்து வெளியேறி விடு. வேங்கடவனின் கோபத்தைக் கண்டும், அவர் கூறிய சொற்களைக் கேட்டும் அனந்தாழ்வான் சிறிதும் அச்சமோ கலக்கமோ கொள்ளவில்லை.

மாறாக அவர் மிகுந்த துணிவுடன் வேங்கடவனை நோக்கி, நற்குணம் மிக்க திருமால் தன் மனைவி அலமேலுவுடன் இங்குள்ள திருக்குளத்தில் வந்து தங்கியுள்ளார் என்று எல்லோரும் கூறும் கூற்றை நீங்கள் கேட்டதில்லையா?

இந்தக் கூற்றின் உண்மைப் பொருள் என்ன வென்றால் இந்த இடம் தங்களின் உரிமை பெற்ற இடமல்ல. மாறாக நீங்களும் என்னைப் போல இங்கே வந்து தங்கியிருக்கின்றீர்கள். இந்த நிலையில் என்னை இங்கே இருந்து விலக்கி வைக்கும் உரிமை உங்களுக்கு இல்லை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். மேலும், நான் உங்களின் அழைப்பை ஏற்று இந்தத் திருமலைக்கு வரவில்லை. என் மதிப்புமிக்க குரு இராமானுஜரின் ஆணையை ஏற்றுத்தான் இங்கே வந்துள்ளேன் என்றார்.

இங்குள்ள பூந்தோட்டத்தில் அன்றலர்ந்த மலர்களைத் தேர்ந்தெடுத்து மாலையாக்கி உங்களுக்குச் சூட்ட வேண்டும் என்பதுதான் என் குரு எனக்கு இட்ட ஆணை. எனவேதான் தாங்கள் அழைத்ததும் உடனே என்னால் வர இயலாமல் போய்விட்டது. உங்கள் அழைப்பை ஏற்று நான் உடனே உங்களைக் காண வந்திருந்தால் மாலை தொடுப்பது நின்று போயிருக்கும். மேலும், குருவின் ஆணையை மீறிய குற்றமும் ஏற்பட்டிருக்கும். இந்த மாலை என் குருவின் ஆணைப்படி தங்களுக்காகத் தொடுக்கப்பட்ட மாலை. இதைச் சூடுவதும்

மறுப்பதும் தங்கள் விருப்பம் என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

### பக்தியால் பெற்ற வரம்

அனந்தனின் பதில் கேட்ட வேங்கடவன், அவர் உள்ளத்தில் ஆழமாய் பதிந்திருக்கும் குரு பக்தியின் சிறப்பை உணர்ந்து வியப்படைந்தார். கோயிலை விட்டு திரும்பிச் சென்று கொண்டிருந்த அனந்தனைக் கண்ட அவர், தடுத்து நிறுத்தி அவரது குரு பக்தியைப் புகழ்ந்தார். பின்னர் அனந்தனிடம், வேண்டும் வரம் தருகிறேன் கேள் என்றார். அது கேட்டு மகிழ்ந்த அனந்தாழ்வான், நான் தங்களுக்குச் செய்து வரும் இப்பணி என் வாழ்நாள் முழுவதும் தடையின்றித் தொடர அருள் புரிய வேண்டும் என்றார். வேங்கடவனும் மகிழ்வோடு அதை ஏற்று அவர் வேண்டியவாறே அருள் புரிந்தார்.

### திருக்குளமும் பூந்தோட்டமும்

தன் குருவின் ஆணையை ஏற்று அன்புச் சீடன் அனந்தாழ்வான் திருமலையில் அமைத்த திருக்குளம் இராமாநுஜர் திருக்குளம் என்ற பெயரால் இன்றும் விளங்கி வருகிறது. அவர் அமைத்த பூந்தோட்டம் இன்றும் அனந்தாழ்வான் பூந்தோட்டம் என்ற பெயரால் விளங்கி வருகிறது. இவை இரண்டும் இன்றும் திருமலையில் தென்மேற்கு மாடவீதியில் பக்தர்களுக்குக் காட்சி தந்து பெருமை சேர்க்கின்றன. மேலும், திருமலைக் கோயிலின் பிரதான நுழைவு வாயிலில் திருக்குளம் அமைக்க அனந்தாழ்வான் பயன்படுத்திய கடப்பாரை பக்தர்கள் காணும் வகையில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது. அது அவரது அரும் பணியைப் போற்றும் வகையில் அமைந்துள்ளது.

### பெற்ற பெருமை

அனந்தாழ்வானின் ஆழ்ந்த பக்தியுடன் அர்ப்பணிப்புப் பணியினைப் போற்றிடும் வகையில் தி.தி.தேவஸ்தானம், திருமலை ஆலயத்தின் தென் மேற்கு மாட வீதியில் அவர் அமைத்த பூந்தோட்டத்தில் ஆண்டுதோறும் விழா கொண்டாடுகிறது. அந்த நாளில் திருமலையப்ப ஸ்வாமி உபய தேவியருடன் இங்கு எழுந்தருள்கிறார். அப்போது அங்குள்ள மகிழ மரத்திற்குச் சிறப்பு வழிபாடு, சடாரி மற்றும் அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. இவ்வழிபாடு அனந்தாழ்வானின் அரும்பெரும் சேவையைப் போற்றும் ஒரு செயல் என்பது மிகையல்ல.

அனந்தாழ்வானின் அருஞ் செயல் இறைவனுக்கு அர்ப்பணிப்பு உணர்வுடனும், ஆழ்ந்த பக்தி உணர்வுடனும் வழிபாடு செய்பவர் அழியாப் புகழ் பெறுவர் என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.

## ஸப்தகிரி பிப்ரவரி 2026 விடைகள்

1. கஜேந்திர தாசர்.
2. இராமாநுஜர்.
3. வள்ளலார்.
4. ஸ்ரீராமன்.
5. புஷ்ப கைங்கர்யம்.
6. மாணிக்கவாசகர்.
7. திருஅருட்பா.
8. திருக்கச்சி நம்பிகள்.
9. புனர்வசு.
10. கோவிந்த பெருமாள்.
11. குலசேகர ஆழ்வார்.
12. சத்ருக்னன்.
13. அகோபிலம்.
14. கோவிந்த பெருமாள்.
15. மணவாள மாமுனிகள்.






## போட்டி எண். 42

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றிப் பெற்றவர்கள்**

1. செல்வி க.ரம்யா
   பொன் அண்ணாமலை நகர், விழுப்புரம்.
2. செல்வி அ.ஆதித்தியா
   உக்கடம், கோவை.
3. செல்வி அ. அம்ரிதா,
   வரதாம்பாளையம், ஈரோடு.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தேவர்களின் சரணாகதியை ஏற்று அரக்கர் குல வேந்தனை அழிப்பதற்காக இப்பூவுலகில் ஸ்ரீராமபிரானாக அயோத்தி மாநகரில் அவதாரம் செய்தருளினார்.

"அகலகில்லேன் இறையும்" என்று நம்மாழ்வார் பாடியதைப் போன்று எம்பெருமானை ஒரு சிறிதும் பிரிந்திராத மஹாலட்சுமித் தாயார் சீதாதேவியாக மிதிலாபுரியில் அவதாரம் செய்தருளினார். ஜனகர் வைத்த போட்டியின் நிபந்தனைப்படி சிவ தநுஸை வளைத்த ஸ்ரீராமபிரான் சீதாதேவியை மணம் புரிந்தார்.

சில வருடகாலம் அயோத்தியில் ஆனந்தமாக வாழ்ந்திருந்த அந்தத் திவ்யதம்பதிகள் சூழ்நிலையின் காரணமாக வனவாசம் செல்ல நேரிட்டது. பல்வேறு அனுபவங்களைத் தந்த வனவாசத்தின் இறுதியில் தீயோனாகிய இலங்கை வேந்தன் எம்பெருமானால் வதம் செய்யப்பட் டான். எம்பெருமானும், பிராட்டியும் மீண்டும் ஒன்றிணைந்து, புஷ்பக விமானம் ஏறி அயோத்தி மாநகருக்கு எழுந்தருளி பட்டாபிஷேகம் கண்டருளினர்.



ஸ்ரீமத்ராமாயணத்தின் பால காண்டம் முதல் யுத்தகாண்டம் வரையிலான மேற்கண்ட நிகழ்வுகள் ஸ்ரீராமபிரானின் திவ்யசரித்திரத்தை நேரடியாக உரைக்கின்றன. "அல்லவை போக்கி, நல்லவை நாடுதல்" என்ற மாபெரும் வாழ்வியல் தத்துவத்தின் நேரிடை விளக்கமாக ஸ்ரீமத் ராமாயணம் என்னும் மகாகாவியம் அமைந்து இருக்கின்றது.

இது மட்டுமா. பரமாத்மா ஜீவாத்மா இருவருக்கும் இடையிலான பந்தம் பிரிக்க இயலாதது என்ற பேருண்மையும் இவ்விதிகாசத்தினூடே இழை யோடியதை நம்மால் காண முடிகின்றது. அறிவு மயமான ஜீவாத்மா, மாயையில் சிக்குண்டு புலன்கள் செல்லும் வழியில் திசை திரும்பி நடப்பதால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதும், எம்பெருமான் தன்னுடைய பிரதிநிதியாக ஓர் ஆசாரிய புருஷனை அனுப்பி வைத்து அந்த ஜீவாத்மா வுக்கு ஆறுதலளிப்பதுடன், துக்கச் சுழலிலிருந்து அதனை விடுவித்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு அருள்புரிவதும் ஸ்ரீமத்ராமாயணம் என்னும் புனிதமான சரித்திரத்தில் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தைப் பொறுத்த வரையில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருள். இப்பிரபஞ்சத்திலுள்ள ஜீவாத்மாக்கள் அனைத்திற்கும் அவற்றின் பாவ புண்ணியக் கணக்குகளுக்கு ஏற்ற பலன்களை அருள்வது டன், பிறவிச்சுழலிலிருந்து மீள விரும்பும் ஜீவாத்மாக்களுக்கு முக்தி அளிப்பதும் அப்பெருமா னின் திருவருளேயாகும். பார பட்சமற்ற பார்வை கொண்ட எம்பெருமான் பாவம் புரியும் ஜீவாத்மாக்களைத் தண்டிக்கத் தவறுவதில்லை.

அலசுவோம்...
அறிவோம்...
ஆதிகாவிய நாயகர்களை ...

# ஸ்ரீசீதாதேவியும் ஜீவாத்மாவின் பயணமும்

திரு.எஸ். ஸ்ரீதுரை,
காஞ்சீபுரம்,
9486139685

அவனுடைய திவ்ய மஹிஷியாகிய ஸ்ரீமஹா லட்சுமித் தாயாரோ தன்னுடைய குழந்தைகள் பாவம் புரிந்தாலும் மன்னித்து விட வேண்டும் என்று எம்பெருமானிடம் பரிந்துரைத்துக் கொண்டே இருக்கின்றாள். இச்செயலானது வடமொழியில் புருஷகாரத்துவம் என்று அழைக்கப்படுகின்றது.

ஸ்ரீமத்ராமாயணத்திலோ ஜீவாத்மாக்களுக் காகப் புருஷகாரத்துவம் செய்யும் அந்த பிராட்டியே சாதாரண ஜீவாத்மாவைப் போன்று வேடம் தரித்து மாயைக்கு மயங்க வேண்டாம் என்ற போதனையை நமக்கெல்லாம் வழங்கி அருள்கின்றாள்.

ஜீவாத்மா என்பது அறிவுடையது என்ற பொரு ளில் 'சித்' என்று அழைக்கப்படுகின்றது. எம்பெருமான் தனக்கு வழங்கியுள்ள அறிவின் துணைக்கொண்டு புலன்களை அடக்கி ஆளத் தெரிந்த ஜீவாத்மாவுக்கு எந்த ஒரு துன்பமும் வருவ தில்லை. அவ்வாறின்றிப் புலன்கள் செல்லும் வழி யில் செல்பவர்கள் துன்பத்திற்கு ஆட்படுவார்கள்.

இயல்பிலேயே நல் ஞானம் நிரம்பப் பெற்றவ ளும், ஸ்ரீராமபிரானின் துணைவியுமாகிய ஸ்ரீசீதா தேவி, தன்னுடைய ஐம்புலன்களில் ஒன்றாகிய கண் முன்பு தோன்றிய பொன்மயமான மாரீசமானைக் கண்டு மதிமயங்கியதுடன், அதனை உடனே பிடித்துக் கொண்டு வந்து தன்னிடம் தர வேண்டும் என்று ஸ்ரீராமபிரானைக் கேட்டுக் கொண்டாள்.

ஜீவாத்மாவின் இயல்பான ஞானமானது இந்திரியத்தின் வழிகாட்டுதலால் மயக்கம் அடைந்து, பொய்யான இன்பத்தை நாடுவதை இந்த நிகழ்வு நமக்கெல்லாம் உணர்த்துகின்றது.

மெய்ம்மையே உருவான தாம் அருகில் இருக்கும்பொழுது பொய்யானத் தோற்றத்தைக் கண்டு மயங்கும் ஜீவாத்மாவுக்குப் பாடம் கற்பிப்பதன் பொருட்டு எம்பெருமானும் சற்று விலகி நிற்க முற்படுகின்றான் என்பதையே, மாயமானை வேட்டையாடச் சென்ற ஸ்ரீராமபிரானுடைய செய்கை நமக்கு உணர்த்துகின்றது. கண் என்னும் இந்திரியத் தின் வசப்பட்டு மாரீசனாகிய மாயமானை விரும்பிய ஸ்ரீசீதா தேவியாகிய ஜீவாத்மா, அந்த மாரீசன் வெளிப்படுத்திய ஹே சீதா!, ஹே லட்சுமணா! என்ற சப்தங்களைக் கேட்டு மேலும் குழம்பி விடுகின்றாள். இதனால் சர்வ வல்லமை பொருந்திய தன்னுடைய நாதனாகிய ஸ்ரீராமபிரானுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டது என்று பதற்றம் கொள்கின்றாள்.

இது எதைக் காட்டுகிறது என்றால் "தங்களுடைய புலன்களின் தூண்டுதலால் அவற்றைத் திருப்திப் படுத்த விரும்பும் ஜீவர்கள், எல்லாம் வல்ல எம்பெருமானாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்து வத்தைப் பற்றிய உண்மையை மறந்து மேன்மேலும் துன்பத்திலும் குழப்பத்திலும் உழல்வார்கள் என்பதையே காட்டுகின்றது" எனலாம். இது மட்டுமா "புலன்வழிச் செல்பவர்கள் இதற்கும் ஒருபடி மேலாகச் சென்று, புதியதாகச் சில பாவச் செயல் களைப் புரியவும் வாய்ப்புள்ளது".

ஆம். ஏற்கெனவே கண் என்னும் இந்திரியத்தின் வசப்பட்டு மாயமானுக்கு ஆசைப்பட்டு அதைப் பிடித்து வருவதற்காக எம்பெருமானை அனுப்பிய ஸ்ரீசீதாதேவி, அம்மாரீசன் எழுப்பிய கூக்குரலால் மேலும் மயங்கினாள். தனக்குக் காவலாக நிற்கும் மைத்துனர் லட்சுமணனிடம் மைத்துனரே, உங்கள் தமையனாருக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது. உடனடியாக நீர் அவருடைய உதவிக்குச் செல்ல வேண்டும் என்று கூறினாள்.

தாயே, எங்கள் தமையனாகிய ஸ்ரீராமபிரான் சர்வ வல்லமை பொருந்தியவர். அவருக்கு யாராலும் எவ்வித ஆபத்தும் நேராது. நீங்கள் பயப்படாதீர்கள்! என்று லட்சுமணரும் பணிவுடன் கூறினார். ஏற்கெனவே பதற்றத்தில் இருந்த சீதாதேவி மேலும் குழப்பமும் கோபமும் அடைந்தவளாய், திட்டம் இட்டே இவ்வாறு செய்கிறீரா? என்று யோசிக்காமல் ஒரு கடுஞ்சொல்லைக் கூறிவிட்டாள்.

இச்சுடுசொல்லின் மூலம், பரமபாகவதராகிய லட்சுமணரின் மனத்தைப் புண்படுத்திய பாகவத அபசாரத்தையும் சீதை செய்துவிட்டாள்.

இவ்வார்த்தையால் மனம் புண்பட்ட லட்சுமண ரும் உடனடியாக ஸ்ரீராமபிரான் சென்ற திசையில் தாமும் வில்லேந்திச் சென்றார். ஒரே நேரத்தில் எம்பெருமானைப் பிரிந்ததுடன், பரமபாகவதராகிய லட்சுமணரின் பாதுகாப்பையும் அவள் இழந்து இருந்த நேரம் பார்த்து அவ்விடத்திற்கு வந்த இலங்கை வேந்தனால் கவரப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்படுகிறாள். புலன்களால் உந்தப்பட்டு பகவத், பாகவதத் தொடர்பு களைக் கை விடத்



துணிபவர்களுக்கு என்ன கதி நேரும் என்பதையே இந்நிகழ்வு உணர்த்துகின்றது.

எல்லாம் சரி. தனக்குச் சொந்தமான பொருளை இழந்தவன் அதனைத் திரும்பவும் அடைய முயற்சி செய்யாமல் இருப்பானா என்ன? எம்பெருமானுக்கு வடமொழியில் 'ஸ்வாமி' என்ற பெயர் உண்டு. ஸ்வம் என்றால் சொத்து. அச்சொத்துக்கு உரியவனே ஸ்வாமி.

ஜீவாத்மாக்களாகிய நாம் அனைவரும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் சொத்துக்கள் ஆவோம். எனவே அந்த எம்பெருமான் நமக்கு ஸ்வாமி ஆகிறான். இவ்வகையில், சீதாதேவி என்னும் தன்னுடைய சொத்தினைத் தாற்காலிகமாக இழக்க நேர்ந்த உரிமையாளனாகிய ஸ்ரீராமபிரான் உடனடியாக அதனைத் தேடிக் கண்டுபிடித்துத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும் முயற்சிகளைத் தொடங்குகின்றான். அம்முயற்சிகளே சுக்ரீவனின் நட்பு, வாலிவதம், நான்கு திசைகளிலும் சுக்ரீவனின் வானரப் படைகளைக் கொண்டு தேடுதல் ஆகியவையாக வெளிப்படுகின்றன.

இப்பூவுல கில் எம்பெருமானுக்கு அடுத்தபடியாக ஒரு ஜீவாத்மாவுக்கு நன்மையைச் செய்பவர் ஆசாரியர்புருஷர் மட்டுமே. அவரால் மட்டுமே நம்பிக்கையிழந்த ஜீவாத்மாவுக்குப் பெரியதொரு நம்பிக்கையை ஊட்டி, அந்த ஜீவனை எம்பெருமானுடன் இணைத்து வைக்க இயலும். எம்பெருமானும் தான் இழந்த சொத்தினை மீட்டுக் கொள்வதற்கு அந்த ஆசாரிய புருஷரையே பெரிதும் நம்புகின்றான். ஸ்ரீமத் ராமாயணத்தில் அத்தகைய ஆசார்ய புருஷராக ஸ்ரீஆஞ்சநேயர் உருவகிக்கப்படுகின்றார்.


சீதாதேவியை நிச்சயம் கண்டுபிடித்து சந்திக்கக் கூடியவர் ஆஞ்சநேயரே என்று ஸ்ரீராமபிரான் நம்பியதன் காரணமாகவே அவரிடம் தனது கணையாழியைக் கொடுத்து அனுப்புகின்றார். ஸ்ரீராம பிரானின் கணையாழியைக் கொடுத்து ஸ்ரீசீதாதேவிக்கு நம்பிக்கை ஊட்டிய ஆசாரியபுருஷராகிய ஆஞ்சநேயர், அவள் வழங்கிய சூடாமணியை ஸ்ரீராமபிரானிடம் கொடுத்ததுடன், "கண்டேன் சீதையை" என்று கூறியதன் மூலம் உமது சொத்தாகிய சீதாதேவி விரைவில் உமக்குத் திரும்பக் கிடைப்பாள் என்று எம்பெருமானுக்கும் நம்பிக்கையூட்டுகின்றார்.

அதன் பின் அனைத்துக் காரியங்களும் வெகு விரைவில் நடந்தேறுகின்றன. எம்பெருமான் இலங்கைக்குப் படையெடுத்து சென்று, கண் என்னும் புலன் வசப்பட்டதனால் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து சீதாபிராட்டியை விடுவிக்கின்றான்.

பின்னர், பரம உத்தமரும், பாகவத சிரேஷ்டருமாகிய ஸ்ரீலட்சுமணப் பெருமாளின் மனதைப் புண்படுத்திய பாகவதபசாரத்திற்கான பிராயச்சித்தமாக அக்னி பரிட்சை என்னும் தண்டனையைக் கொடுத்து, அதன் மூலம் சீதாதேவியின் புனிதத்தன்மையையும் உலகுக்கு வெளிப்படுத்துகின்றார். அதைத் தொடர்ந்து தம்முடைய சொத்தும், தம்முடைய உயிரினும் மேலானவளுமாகிய சீதாதேவியைத் தம்முடன் மீண்டும் இணைத்துக்கொண்டு புஷ்பக விமானத்தில் அயோத்தி மாநகரை வந்தடைந்து பட்டாபிஷேகம் செய்து பெருமகிழ்வு அடைகின்றார் ஸ்ரீராமபிரான்.

இங்ஙனம், இருள்தருமாஞாலமாகிய இப்பூவுலகில் பிறப்பெடுக்கும் ஜீவாத்மாக்கள் புலன்வசப்பட்டு மாயையில் வீழ்வதையும், பின்னர் எம்பெருமான் அனுப்பி வைக்கும் ஆசாரியருடைய உபதேசத்தாலும், எம்பெருமானின் பேரருளாலும் மாயையிலிருந்து மீண்டுவந்து பரஞான இன்பத்தை அடைவதையும் ஸ்ரீராமபிரானும் சீதாதேவியாரும் ஒரு முழுநேர நாடகமாகவே நடத்தியருளியதை ஸ்ரீமத்ராமாயணம் என்னும் மாபெரும் இதிகாசம் நமக்கு உணர்த்துகின்றது.

மனித உருவில் அவதரித்து ஜீவாத்மாக்களுக்கெல்லாம் வழிகாட்டி அருளிய அந்த திவ்யதம்பதிகளை மனமுருகி வழிபட்டு மேன்மை அடைவோமாக!



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

**தெலுங்கு மூலம் :**
**பேராசிரியர் கே.சர்வோத்தம ராவ்.**
**தமிழாக்கம் :**
**டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.**

சென்ற மாத இதழின் தொடர்ச்சி...

பிருகு முனிவர் சத்யலோகத்திலிருந்து கைலாயத்திற்கு வந்தார். கைலாயத்தில் பார்வதி தேவியும் பரமேஸ்வரனும் தனிமையில் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். நேராக அவர்களை நோக்கி நடந்தார்.

தாங்கள் ஏகாந்தமாக இருக்கும் சமயத்தில் உலக தர்மத்தைக் கூட கண்டுகொள்ளாமல் முனிவர் வருவதைப் பார்த்து பரமசிவன் கோபத்தோடு கணவனும் மனைவியும் தனிமையில் இருக்கும்போது அந்தப்புரத்திற்கு வரலாமா என்று தன் மனதிலேயே சொல்லிக் கொண்டு முனிவரிடம் முகம் கொடுத்தும் பேசாமல் இருந்தார். அப்போது பிருகு முனிவர் சிவபெருமானின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டு இவர் தமோகுணம் உடையவர் எனும் முடிவுக்கு வந்தார். இவர் முக்தி அளிக்கும் வல்லமை உள்ளவர் அல்ல என நினைத்துக் கொண்டு இவர் பூலோகத்தில் உருவ வழிபாடு இன்றி லிங்க மூர்த்தியாகப் பூஜிக்கப்படுவார் என்றார். அதன் பிறகு வைகுண்டம் சென்றார்.

வைகுண்டத்திற்கு வந்த பிருகு முனிவரை பிராட்டியோடு இருந்த ஸ்ரீநிவாசன் கவனிக்காமல் போகவே, கோபம் கொண்ட முனிவர் தன் காலால் ஸ்ரீநிவாசனின் திருமார்பின் மீது எட்டி உதைத்தார். எதிர்பாராத இச்செயலால் ஸ்ரீஹரி உடனே எழுந்து முனிவரை வரவேற்று அவரை வணங்கி, உதைத்த பாதங்களை தன்னுடைய தொடைமேல் வைத்துக் கொண்டு புன்னகை செய்தவாறு பிருகு முனிவரைப் பார்த்து இவ்வாறு கூறினார்.

முனிவரே தாங்கள் வருவதை நான் கவனிக்க வில்லை. உறங்கிக் கொண்டிருந்தேன். உம்மிடத்தில் மரியாதை குறைவாக நடந்து கொண்டேன். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். உங்களிடத்தில் மரியாதை குறைவாக நடந்து கொண்டதற்காக தண்டித்தீர்கள். இது எனக்கு உகந்ததே. என் மார்பில் உதைத்ததினால் உம் பாதங்கள் நோவு கண்டதோ? எனக்கு மட்டும் வலி ஒன்றும் இல்லை. உங்கள் பாதம் மலர் போன்றது. இளம் தளிரைப் போன்று மிருதுவாக இருக்கிறது என்று கூறி அவர் பாதங்களைக் கழுவி அந்த நீரை தலையில் தெளித்துக் கொண்டார்.

மேலும், இனிமையான குளிர்ச்சியான வார்த்தைகளைப் பேசினார். அதைக் கேட்டு பிருகு முனிவர் சற்று அமைதி அடைந்தார்.

மேலும், ஸ்வாமி மும்மூர்த்திகளில் தாங்களே சத்குண மூர்த்தியாக விளங்குகிறீர். உம்மைப் போற்றுவதற்கு வார்த்தைகளே இல்லை என்று கூறி அங்கிருந்து புறப்பட்டு கங்கைக் கரையில் உள்ள முனிவர்களிடம் வந்தார். முனிவர்களே! பிரம்மா முதலான மும்மூர்த்திகளின் குணநலன் களை ஆராய்ந்து பார்த்ததில் ஸ்ரீ ஹரி ஒருவர் மட்டுமே சுத்த சத்வகுணம் நிறைந்தவர் என்ற முடிவுக்கு வந்தேன் என்று கூறினார்.

பெருமை அறிவோம்...

சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# ஸ்ரீவத்சத்துடன் திருவாழ்மார்பன்





படிமக் கலைஞர்
திரு. ப.சரவணன்,
குடந்தை,
9443171383

**வை**ணவ ஆலயங்களில் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் திருமாலாகக் காட்சியளிக்கிறார். இவர்களைப் பூ மடந்தை புவி மடந்தை என அழைக்கின்றனர். புராண வரலாற்றுப்படி ஆதியில் அன்னை ஸ்ரீதேவி – பூதேவியாக மகாலட்சுமி, ஸ்ரீலட்சுமி என்னும் இரண்டு வடிவுடன் திருமாலை அடைந்து அவருக்குத் தேவியானாள். இதில் ஒரு கூறு பூமியின் வளத்தைப் பெருக்கியது. இதையொட்டி அவள் பூதேவி என அழைக்கப்பட்டாள். மற்றோர் கூறு பூமியில் விளைந்த பொருட்களுக்கு அதிபதியானாள். இதனையொட்டி இவள் ஸ்ரீதேவி என அழைக்கப்படு கிறாள்.


மகாவிஷ்ணுவின் வலது பக்க மார்பை விட்டு என்றும் நீங்காதவளாக அன்னை ஸ்ரீமகாலட்சுமி ஸ்ரீவத்சம் எனும் வடிவுடன் வீற்றிருக்கின்றாள். இதையொட்டி "நின் வலமார்பில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டே" என்று வைணவச் சமயச் சான்றோர்களால் வாழ்த்தப்படுகிறாள். இதனால் திருமால் திருமறுமார்பன், திருவாழ்மார்பன் என அழைக்கப்படுகிறார்.

வளங்களை அள்ளித் தரும் அஷ்டமங்கல வழிபாடு திருக்கோயில்கள் தோறும் நடைபெறும். கும்பாபிஷேக விழா யாகசாலையில் திருமகளின் மறு வடிவங்களான ஸ்வதிகம், வெண்கவரி (இரட்டைச் சாமரங்கள்), பூர்ணகும்பம், அடுக்குதீபம், இடபம், வலம்புரிச் சங்கு, ஸ்ரீவத்சம், குடை ஆகிய அஷ்ட மங்கலங்களைப் பிரதிபலிக்கும் வகையில் சித்திரங்கள் தீட்டி வைத்து சகல வளங்களையும் நல்க வேண்டி திருமகளை வழிபடும் வழிமுறையாகும்.

### ஸ்ரீவத்சம்

மேற்காணும் அஷ்டமங்கலத்தில் ஒன்று ஸ்ரீவத்சம் ஆகும். இதனைத் "திருமறு" என்றும் கூறுவர். ஆதியில் லட்சுமியின் வடிவத்திற்குப் பதில் இரண்டு யானைகளுக்கு இடையே அமைந்த முக்கோணம் போல் உள்ள குறியீட்டினை அமைத்து வழிபட்டு






வந்தார்கள். இதுவே பின்னாளில் இரு யானைகளுடன் கஜலட்சுமியாக உருவம் பெற்று வழிபாட்டில் உள்ளது. மேலும், பல கிராமப் புறங்களில் அமையப் பெற்றுள்ள மிகத் தொன்மையான விசிறிப்பாறை (ஸ்ரீவத்சங்கள்) என்ற பெயரில் தாய் தெய்வமாக இன்றும் வணங்கப்படுகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

## குறுக்கெழுத்துப்புதிர் 117க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | 2 ரு | க் | க | ச் | 3 சி | 4 ந | ம் | பி | | | 5 தி |
| ரு | க் | | | 6 பி | ங் | ர | 7 க | ங் | க | ன் | ரு |
| வே | ம | ன் | | ரு | க | 8 சி | க | ண் | டி | வ | க் |
| ங் | ணி | ர | கை | கு | பெ | ம் | | | ணா | தே | க |
| க | தா | தி | ர | மு | ரு | 9 ம | து | ரா | ண் | கா | ச் |
| ட | யா | ந் | வா | னி | மா | அ | | | 10 க | 11 ச | சி |
| ம் | ர் | பே | து | வ | ள் | வ | ன் | ண | ஷ | பீ | 12 வி |
| ழி | | 13 உ | ச | ர் | 14 கோ | தா | வ | ரி | | 15 ப | று |
| கோ | 16 ரா | | ட் | | யி | ர | ச | | | க | யா |
| க் | ம | | 17 மோ | | ல் | ம் | 18 கே | | | ன் | வை |
| ரு | ன் | க | ய | நா | க | ர | கி | க் | வ | 19 ந | ரு |
| 20 தி | ரு | வா | ய் | மொ | ழி | லை | ம | ர் | நீ | ரு | 21 தி |

மேற்காணும் அருள்மிகு மகாலட்சுமி சமேத பிரயோக சக்கரத்துடன், வலது மார்பில் ஸ்ரீவத்சத்துடன் எழுந்தருளியுள்ள திருவாழ்மார்பன் எனும் பெருமாளின் சிற்பம் (சிலை) மிக அரிதான கோலமுடைய வடிவாகும்.

இச்சிற்பம் தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், நாச்சியார் கோவில் அருகிலுள்ள வல்லமங்கலத்தில் ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் மிளிரும் மிகப்பழைமையான அருள்மிகு சௌந்திரநாயகி சமேத சேதுபுரீஸ்வரர் சிவாலயத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.



ஸப்தகிரி வாசகர்களுக்கும், முகவர்களுக்கும்,
எழுத்தாளர் பெருமக்களுக்கும் எங்களுடைய
உளங்கனிந்த இனிய பராபவ நாம தமிழ் வருடப் பிறப்பு
(14.04.2026) நல்வாழ்த்துகள்!

தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும்
பிரம்மாண்ட நாயகனான, ஸப்தகிரி வாசனான
திருவேங்கடமுடையானின் திருவருள் பரிபூரணமாகக்
கிட்டி, வாழ்வில் சகல சம்பத்துக்களும் பெற்று வாழ
திருமலைவாசனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்!

– பிரதான ஆசிரியர்

அனந்தாழ்வான் அருளிச்செய்த

# இராமாநுஜ சதுஸ்லோகீ



அகிலாத்ம குணாவாஸம் அஜ்ஞான திமிராபஹம்।
ஆச்ரிதாநாம் ஸுசரணம் வந்தே நந்தார்ய தேசிகம் ॥

திருமகள் கேள்வனான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநலம் அருளினான். ஆழ்வார்கள் எம்பெருமானுடைய கல்யாண குணங்களை அனுபவித்தார்கள்.

அந்த அனுபவங்களையே தமிழ் பாசுரங்களாக அருளிச் செய்தார்கள். அந்த ஆழ்வார்கள் கோஷ்டிக்கு தலைவராய் விளங்குபவர் குருகூர் சடகோபன் என்று கொண்டாடப்படும் ஸ்வாமி நம்மாழ்வார்.



ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்களுக்கு, அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அர்த்தங்களை அருளிச்செய்தார்கள் வைணவ ஆசார்யர்கள். அந்த ஆசார்யர்களுக்கு நடுவில் நடுநாயகமாய் விளங்குபவர் நம் இராமாநுஜர். நம்மாழ்வார் திருவடிகளில் மிகுந்த அன்பு கொண்டவர். *''மாறன் அடிபணிந்து உய்ந்த நம் இராமாநுஜன்''* என்று திருவரங்கத்து அமுதனார் இராமாநுஜ நூற்றந்தாதியில் அருளிச் செய்கிறார்.



நம்மாழ்வார் அருளிய திருவேங்கடமுடையான் விஷயமான பாசுரங்களை இராமாநுஜர் தம் காலக்ஷேப கோஷ்டியில் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்து வந்தார்.

புஷ்ப மண்டபமான திருமலையில் நித்யவாஸம் செய்து, சிந்து பூ மகிழும் திருவேங்கடத்தானுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்வார் உண்டோ? என்று இராமாநுஜர், ஒருநாள் தம் காலக்ஷேப கோஷ்டியில் வினவினார். அனைவரும் இராமாநுஜரை பிரிய மனம் இல்லாமல், பேசாமல் இருந்தார்கள். “அடியேன் செல்கிறேன்” என்று ஒருவர் கூறினார். சித்திரை மாதம் சித்திரை நக்ஷத்ரத்தில் அவதாரம் செய்தவர். அவரே அனந்தாழ்வான் என்ற ஆசார்யர். இவரை ஆண்பிள்ளை என்று இராமாநுஜன் பாராட்டினார். திருமலை அனந்தாழ்வான் என்று கொண்டாடப்படும் இவர், இராமாநுஜரை கொண்டாடி, அவருடைய பெருமைகளையெல்லாம் நன்றாக விளங்குமாறுச் செய்தார். அவர் அருளிச்செய்த ஸ்தோத்ர நூல் “ஸ்ரீராமாநுஜ சதுஸ்லோகீ” எனப்படும். இராமாநுசருக்குப் பல்லாண்டு பாடி, 4 சுலோகங்களை அருளினார். அந்த ஸ்தோத்ரத்தின் எளிமையான அர்த்தங்களை இனி நாம் அநுபவிப்போம்.

கோயில்



அநிசம் ப$_4$ஜதா மநந்ய ப$_4$ாஜாம்
சரணாம்பே$_4$ாருஹமாத$_3$ரேண பும்ஸாம்।
விதரந் நியதம் விபூ$_4$திமிஷ்டாம்
ஜய ராமாநுஜ! ரங்க$_3$ த$_4$ாம்நி நித்யம்॥

உபயவிபூதியையும் நிர்வாஹம் செய்யும் பேறு பெற்ற உடையவரே! செவ்வி மாறாது இருப்பவை உமது திருவடிகள். சிவந்த தாமரை போன்றவை உமது திருவடிகள். தாமரையில் பெருகும் தேனைப் பருக வரும் வண்டுகள் போன்றவர்கள் உம்முடைய அடியார்கள். அவர்கள் உம்முடைய திருவடித் தாமரைகளை எப்போதும் விடாதே பற்றியிருப்பவர்கள். உம்முடைய திருவடிகளில் காதலாகி, கசிந்து, கண்ணீர் மல்கி, பக்தி செய்பவர்கள். உம்மையும், உம்முடைய திருவடிகளைத் தவிர, வேறு புகல் இல்லாதவர்கள். அந்த அடியார்கள் தேவரீர் இடத்தில், தங்கள் விருப்பம் எதுவோ அதை பிரார்த்திப்பார்கள். அவர்கள் எதை விரும்பினார்களோ, அது எப்படிப்பட்டதாய் இருந்தாலும், அவர்கள் எப்படி விரும்பினார்களோ அப்படியே, அவர்களுக்கு அதை அளித்திட வேண்டும். அடியார்களின் வேண்டுதலை பூர்த்தி செய்து கொண்டு, எப்பொழுதும் பல்லாண்டுகள் விஜய ஸ்ரீயாக விளங்கவேண்டும். நம்பெருமாள் அபிமானித்த திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளி உமது அடியார்களை கடாக்ஷிக்க வேண்டும்.

பு$_4$வி நோ விமதாந் த்வதீ$_3$யஸூக்தி:
குலிசீபூ$_4$ய குத்$_4$ருஷ்டிபி$_4$ஸ் ஸமேதாந்।
சகலீகுருதே விபச்விதீ$_3$ட்$_3$யா
ஜய ராமாநுஜ! சேஷசைலச்ருங்கே॥

திருமலையில் சேவை சாதிப்பவன் திருவேங்கடவனே! என்று பறைசாற்றி அப்பனுக்கு சங்காழி அளித்த எம்பெருமானாரே! தேவரீர் அருளிச்செய்த ஒன்பது ஸ்ரீஸூக்திகளும் நவரத்னங்கள் போன்றவை. எம்பெருமானுடைய மேன்மையைப் பறைசாற்றும் திவ்யாயுதங்கள் போன்றவை. வேதங்களுக்கு ஆபத்து வராமல் காப்பாற்றும் அரண் போன்றவை. வஜ்ராயுதங்கள் போல் சக்தி வாய்ந்தவை. வஜ்ராயுதம் எதிரிகளைப் பொடி பொடியாகச் செய்துவிடும். அதேபோல், உம்முடைய ஸ்ரீஸூக்திகளும் பெருமை கொண்டவை. வேதத்திற்குப் புறம்பான மதங்கள் எல்லா வற்றையும், உம்முடைய ஸ்ரீஸூக்திகள் பொடிப் பொடியாகச் செய்தது. வேதத்திற்குத் தவறான அர்த்தங்கள் கூறிய மதங்கள் எல்லாவற்றையும், உம்முடைய ஸ்ரீஸூக்திகள், தவிடு பொடியாகச் செய்தது. இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்த தேவரீர், பல்லாண்டு! பல்லாண்டு! விஜயஸ்ரீயுடன் எழுந்தருளியிருக்க வேண்டும். திருவேங்கடவன் நித்யவாசம் செய்யும், திருவேங்கட மாமலையின், உச்சியில் விளங்க வேண்டும்! வெற்றியோடு விளங்க வேண்டும்!

ச்ருதிஷு ஸ்ம்ருதிஷுப்ராமண தத்த்வம்
க்ருபயா(அ)லோக்ய விசுத்$_3$ த$_4$யா ஹி
பு$_3$த்$_3$த்$_4$யா।
அக்ருத$_2$ாஸ் ஸ்வத ஏவ ப$_4$ாஷ்யரத்நம்
ஜய ராமாநுஜ! ஹஸ்தித$_4$ாம்நி நித்யம்॥

ஸ்ரீபாஷ்யம் அருளிச்செய்து, ஸ்ரீபாஷ்ய காரர் என்ற திருநாமத்தைப் பெற்ற எம்

திருமலை



இராமாநுசரே! ஸ்ரீமந்நாராயணனே ஜகத்காரணன் என்று, ப்ரமாணங்கள் நிச்சயமாகக் கூறுகின்றன. இந்த ப்ரமாணங்களை, ஸ்ருதிகளிலும், ஸ்ம்ருதிகளிலும் பல இடங்களில் காணலாம். ஆனால் இந்த ப்ரமாணங்களுக்குப் பொருந்தாத அர்த்தங்களையும், தவறான விளக்கங்களையும் மற்றவர்கள் கூறினார்கள். ஆனால், இராமாநுசரே! உம்முடைய நிர்ஹேதுக கருணையினால், இந்த ப்ரமாணங்களை எல்லாம் ஆராய்ச்சி செய்தீர். ஞானத்திற்கு இருப்பிடமாய் விளங்கும் நீர், ஸ்ருதிகளையும், ஸ்ம்ருதிகளையும், பாரபட்சம் இல்லாமல், நன்றாக படித்து, தேர்ச்சி பெற்றீர். அதனால், எல்லாரும் போற்றி வணங்கும் ஸ்ரீபாஷ்யத்தை அருளிச்செய்தீர். பாஷ்யங்கள் எல்லாவற்றிற்கும் நீர் அருளிச் செய்த ஸ்ரீபாஷ்யமே ஸாரமாக விளங்குகிறது, தலைசிறந்ததாக அமைகிறது. இப்படிப்பட்ட ஞானத்திற்கு இருப்பிடமான தேவரீர், ஸ்ரீஹஸ்த கிரியில் எப்பொழுதும் ஜயத்தோடு விளங்க வேண்டும்! பல்லாண்டு நிலைப் பெற்றிருக்க வேணும்.

*ஜய மாயிமதாந்த$_{4}$ காரப$_{4}$ாநோ*
*ஜய ப$_{3}$ாஹ்யப்ரமுக$_{2}$ாடவீக்ருசாநோ |*
*ஜய ஸம்ச்ரிதஸிந்து$_{4}$ சீதப$_{4}$ாநோ*
*ஜய ராமாநுஜ! யாத$_{3}$வாத்$_{3}$ரிச்ருங்கே$_{4}$ ||*

ஆம் முதல்வன் என்று ஆளவந்தாரால் கடாக்ஷிக்கப்பெற்ற, ஆதிசேஷன் அவதாரமான இளையாழ்வாரே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்! வேதங்களுக்கு விபரீதமான அர்த்தங்களைக் கற்பித்த மாயாவாதிகளின் மதங்களை இருள் அடையச் செய்த ஆதித்யனே!

பெருமாள்கோயில்



வேதங்களுக்கு தவறான விளக்கங்களை கூறிய மற்ற மதங்களை எல்லாம் எரித்து, நிர்மூலமாக்கிய அக்னி போன்றவரே! உமக்கு வெற்றி உண்டாகட்டும்! கடல் எல்லா இடங்களிலும் பரந்து இருப்பதைப் போல், உமது அடியார்களும் உலகம் எங்கிலும் உம்மை வணங்குகிறார்கள். அடியார்களின் மனதில் ஆனந்தத்தை உண்டாக்கும் சந்திரனாய்த் திகழ்பவரே! உமக்கு மங்களம் உண்டாகட்டும்! யதிகளுக்கு அரசராய் யதிராஜராய் விளங்கும் எதிராஜ ஜீயரே! உம்முடைய மானசீக புத்ரரான யதிராஜ சம்பத்குமாரர் சேவை சாதிக்கும் திருநாராயணபுரத்தில் வெற்றியோடு பல்லாண்டு விளங்க வேண்டும்.

*ராமாநுஜ சதுச்ச்லோகீம் ய:*
*படே$_{2}$ந்நியதஸ் ஸத$_{3}$ா |*
*ப்ராப்நுயாத் பரமாம் ப$_{4}$க்திம்*
*யதிராஜபத$_{3}$ாப்$_{3}$ ஜயோ: ||*

யதிராஜரின் அந்தரங்கராய், கைங்கர்யமே வடிவெடுத்தவரான அனந்தாழ்வான் அருளிச்செய்த, இந்த ஸ்துதி இராமாநுஜ சதுஸ்லோகி எனக் கொண்டாடப்படுகிறது. இந்த சதுஸ்லோகியை, ச்ரத்தையோடும், பக்தியோடும் எப்போதும் பாராயணம் செய்வது மிகவும் உகந்தது. அப்படி பாராயணம் செய்பவர்களுக்கு, எம்பெருமானாருடைய தேனே மலரும் தாமரை போன்ற திருவடிகளில் பரமபக்தி உண்டாகும்.

திருநாராயணபுரம்



**- ஸ்ரீ உ.வே. கிடாம்பி நாராயணன்,**
**சென்னை, 94449 18374**



26-02-2026 முதல் 02-03-2026 வரை திருமலையில் ஸ்வாமி புஷ்கரணியில் நடைபெற்ற தெப்போத்ஸவத்தில் எழுந்தருளிய திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசனம் செய்த தி.தி.தே.பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள், செயலாட்சித் தலைவர் திரு.முத்தாட ரவிச்சந்திரா ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள், தலைமை கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அதிகாரி திரு.முரளிகிருஷ்ணா ஐ.பி.எஸ். அவர்கள் மற்றும் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள்



ஆ.மா.முதலமைச்சரின் சிறப்பு தலைமைச் செயலாளராக இருந்தப்படி, தி.தி.தே. செயலாட்சித் தலைவராக முழு கூடுதல் பொறுப்பினை வகித்து வந்த திரு.முத்தாட ரவிச்சந்திரா ஐ.ஏ.எஸ். அவர்கள் மார்ச் 6ஆம் தேதி அன்று தி.தி.தே. முழுநேர செயலாட்சித் தலைவராகவும், தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுவில் பதவி அடிப்படையில் உறுப்பினராகவும் பதவி ஏற்றபோது. உடன் கூடுதல் செயலாட்சித் தலைவர்



01-03-2026 அன்று திருவேங்கடமுடையானைத் தரிசித்த மேதகு உச்ச நீதிமன்ற தலைமை நீதியரசர் திரு.சூர்யகாந்த் தம்பதியருக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்கும் தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள் உடன் செயலாட்சித்தலைவர் திரு.முத்தாட ரவிச்சந்திரா ஐ.ஏ.எஸ். அவர்கள், கூடுதல் செயலாட்சித்தலைவர்



28-02-2026 அன்று ஸ்ரீபராபவ வருட (2026-27) தெலுங்கு பஞ்சாங்கத்தை வெளியிடும் தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள், செயலாட்சித்தலைவர், கூடுதல் செயலாட்சித்தலைவர், இணைச் செயலாட்சித் தலைவர்கள் மற்றும் தலைமை கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அதிகாரி



அனந்தாழ்வானின் 972வது அவதார தினத்தை முன்னிட்டு 22-02-2026 அன்று அனந்தாழ்வான் தோட்டத்தில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரை நிகழ்த்தும் தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் (ஆரோக்கியம் மற்றும் கல்வி) டாக்டர் எ.சரத் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்கள்

# செஞ்சுலக்ஷ்மி திருக்கல்யாணம்

## (அகோபிலம்)

– திரு.அத்தி.ரங்கராஜன், திருப்பதி,
98490 99246

பெருமாளின் திருக்கல்யாணம் என்பது அகிலாண்டகோடி பிரம்மாண்டத்திற்கெல்லாம் ஒரு சிறப்பான நிகழ்வு. பெருமாள்–தாயாரின் திருக்கல்யாணம் வைபோகமாக நடப்பதே ஒரு காரணத்திற்காக. உலகத்திற்கு ஒரு செய்தியைத் தெரிவிப்பதற்காக, பக்தர்களுக்கு ஒரு உன்னதமான உண்மையை உணர்த்துவதற்காக. நாட்டில் வளமையும், செழுமையும் நிறைத்திடவே இந்தத் திருக்கல்யாணம் வழிவகுக்கும். இந்த கண்கவர் நிகழ்ச்சியைக் கண்டு களிக்கும் பக்தர் பெருமக்களின் கண்களில் நெகிழ்வும் வர்ணிக்க வார்த்தைகள் போதாது.



திருமணம் என்பது இரு உள்ளங்களின் இணைதல் மட்டும் அல்ல. உடலும், உள்ளமும் இணைவதன் பின்னால் கூர்ந்து கவனித்தால், இது ஒரு தெய்வீகச் சேர்க்கை. தேவன் மற்றும் தேவி எனும் இரு ஆற்றல் வாய்ந்த கோளங்கள் சேர்வதன் மூலம் ஏற்படும் சக்திப்பிழம்பு. அது உலக நன்மையைப் பயக்கும் ஒரு கருவியாகக் கருதப்படுகிறது.


அகோபிலத்தில் செஞ்சுலக்ஷ்மித் தாயாருடன் நரசிம்மனின் திருக்கல்யாணம் என்பது ஒரு அபூர்வ நிகழ்வு ஆகும். அகோபிலக் காட்டினிலே செஞ்சு எனும் ஒரு பழங்குடியினர் குடும்பத்தில் செஞ்சிதா என்கிற பெயரில் மஹாலக்ஷ்மித் தாயாரே அவதரித்தார். இரண்யகசிபுவை வதம் செய்ய அந்த ஸ்ரீமந்நாராயணன் இந்தக் காட்டினையே தனது நான்காம் அவதாரத் தலமாகத் தேர்ந்தெடுத்தார் என்று தான் மேலோட்டமாகப் பார்த்தால் தோன்றும்.

ஆனால், இங்கு பிறந்த பிராட்டியின் அவதாரமான செஞ்சுலக்ஷ்மியைத் திருமணம் புரியும் எண்ணமும் சேர்த்து தான் இந்த திருஅவதாரத்தின் குறிக்கோள் எனும் உண்மையை அறிந்தால், முன்பு சொன்னது போல, திருக்கல்யாணம் என்பது ஒரு நிகழ்வு மட்டும் அல்லாமல், ஒரு காரணத்திற்காகத்தான் என்பது புரிகிறது அல்லவா?

### நரசிம்ம அவதாரம்

ஸ்ரீமந்நாராயணனின் அவதாரங்களிலேயே மிகவும் சிறப்பான, வலிமையான அவதாரம் என்றால் அது நரசிம்ம அவதாரமே. அதன் பின் இன்னொரு சுவாரஸ்யமான விஷயமும் உள்ளது.

பெருமாள் எடுத்த அவதாரங்களிலேயே குறைந்த கால அவகாசத்தில் எடுத்த அவதாரமும் இதுவே. இராமன், கண்ணன் போல ஒரு தாய் வயிற்றில் கருவாய் தோன்றி, பத்து மாதத்திற்குப் பின் பிறந்து வளர்ந்து, பின் அவதாரத்தின்



உத்தேசமான அரக்கனின் வதம் இங்கு நடக்கவில்லை. ஒரு நொடிப்பொழுதில் எடுக்கப்பட்ட முடிவு தான் இந்த நரசிம்ம அவதாரம். தான் தோன்ற வேண்டிய இடம், உருவம், நேரம் எதுவுமே முன் கூட்டியே அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இரண்யகசிபு, ஹரி பக்தனான தனது மகன் பிரகலாதனிடம் ஹரி எங்கு இருக்கிறான் கூறு, என்று அதட்டும் போது, அச்சிறுவன் சஞ்சல மற்ற மனதுடன் "அந்த ஹரி எங்கும் இருப்பவன்" என்று கூறுகிறான்.

இரண்யன் அருகில் இருந்தத் தூணைக்காட்டி "இதில் இருப்பானா?" என்று வினவ, பிரகலாதனோ எவ்வித சந்தேகமுமின்றி "ஆம், இதில் இருப்பான்" என்று அசைக்க முடியாத நம்பிக்கையுடன் கூறினான். உடனே அந்தத் தூணை தனது கதாயுதத்தால் உடைத்தான். ஒரு நொடிப்பொழுதில் மனித உடலும், சிங்கத்தின் முகமுமாக ஒரு விசித்திர உருவத்தைக் கொண்டு அந்த உடைந்தத் தூணிலிருந்து ஒரு கர்ஜனையுடன் வெளியேறி இரண்யனை அழித்தார்.

இது பக்தனின் நம்பிக்கையைக் காக்கும் ஒரு செய்கை. எனது கடவுள் என்னை காக்க இந்தத் தூணில் இருந்து வெளிவருவான் என்று ஒரு கணமும் யோசிக்காமல் பிரகலாதன் நம்பிய பொழுது, இறைவன் அந்த நேரத்தில் அந்தத் தூணில் இருந்து வெளியேற வில்லை என்றால் பக்தனின் நம்பிக்கை என்னாவது? கடவுள் மீது பக்தர்கள் மிகுந்த பக்தி மட்டும் அல்ல, அசைக்க முடியாத நம்பிக்கையும் வைத்திருப்பார்கள். அந்தத் தூய்மையான பக்தியும், அசைக்கமுடியாத நம்பிக்கையும் உண்மை எனில் அந்த நம்பிக்கையைக் காக்கும் வகையில் கடவுளே இறங்கி வருவான் என்று இதன் மூலம் நரசிம்ம பகவான் உலகத்திற்குக் காட்டியிருக்கிறார்.

இரணியனை வதம் செய்த பின்பும் உக்கிரம் தாளாமல் சிங்கமுகத்தோனான நரசிம்மன் சீறிக் கொண்டிருந்தான். தேவர்களே அவரை நெருங்க திணறிய நிலையில், சிறுவனான பிரகலாதன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அந்த பெருமானை சாந்தம் அடையும்படி வேண்டி



னான். தான் காக்க வந்தது இந்தச் சிறுவனைத்தான் என்பதை உணர்ந்த அந்த எம்பெருமானும் உடனே சாந்தம் அடைந்து அச்சிறுவனை ஆரத்தழுவி அரவணைத்தான். அவனது உக்கிரமும் தணிந்தது.

### செஞ்சுலக்ஷ்மித் தாயார்

விசித்திரமான உருவத்துடன் அந்த அடர்ந்த காட்டினிலே திரிந்துகொண்டிருந்த நரசிம்மனைக் கண்டு காட்டுவாசிகள் எல்லோரும் பயந்து நடுங்கினர். ஆனால், அந்த காட்டுவாசிகளின் தலைவர் சூரசேனன் மகளான செஞ்சிதா எனும் செஞ்சுலக்ஷ்மியைக் கண்டதும் நரசிம்மனுக்கு அவள் தான் மஹாலக்ஷ்மி என்பது விளங்கியது. உடனே ஜ்வாலா நரசிம்மன் எனும் உக்கிர உருவத்தைத் துறந்து, சாந்தமான முகம் கொண்ட மனிதனாக உரு மாறினார். அந்த சாந்த சொரூபியானவனைத்தான் இன்று கீழ் அகோபிலம் கோயிலில் பிரகலாத வரதனாக (பிரகலாதனைக் காத்தவன் என்ற பொருள்பட) நாம் வணங்குகிறோம்.

அகோபிலம் காடுகளில் உள்ள கருடாச்சலம் என்ற மலைப்பகுதியில் வாசம் செய்து கொண்டிருந்த நரசிம்மன் செஞ்சிதாவை காணும் சந்தர்ப்பம் கிட்டியது. வனதேவதை ஆலயத்திற்குச் சென்று கொண்டு இருந்த செஞ்சிதாவின் அழகு, தன்னடக்கம் மற்றும் வனதேவதை மீது கொண்டிருந்த அளவு கடந்த பக்தி அவனைக் கவர்ந்தது.

1513ஆம் வருடத்தில் அகோபில மடத்தின் 7வது பீடாதிபதியான ஸ்ரீ சடகோப யதீந்திர மஹாதேசிகன் ஸ்வாமி அருளிச்செய்த “வாசந்திகா பரிணயம்” என்கிற நரசிம்மனின் திருக்கல்யாணத்தை வர்ணிக்கும் நாடகத்தில் செஞ்சிதாவை அவர் வாசந்திகா என்று குறிப்பிடுகிறார். இந்த நாடகம் நரசிம்மரின் திருக்கல்யாணத்தை மட்டுமல்லாமல், அன்றைய காலகட்டத்தில் அகோபிலம் பகுதியில் வசிக்கும் ‘செஞ்சு’ என்கிற பழங்குடியினரின் பழக்கவழக்கங்களையும், கோயிலின் மேம்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் அவர்களது பங்களிப்பையும் காட்டுகிறது.

இந்த நாடகத்தில் நரசிம்மனின் பெருமையைப் போற்றுகையில் கிராத (வேடர்) வீட்டில் பிறந்தாலும், அவளின் அன்பும், சாந்தகுணமும் நரசிம்மனை ஈர்த்தது. இறைவனுக்கு அவள் மேல் கொண்ட காதல் குறையவில்லை. நரசிம்மனைப்போலவே, செஞ்சிதாவும் தனது மணாளனின் உருவத்தை கனவில் கண்டு இருக்கிறாள். நாராயணனின் உருவான அவனுக்கு அகோபிலேசன் என்ற பெயர் சூட்டி, அவனையே மனதில் நினைத்து ஏங்கி இருக்கிறாள்.

அந்த நரசிம்மனே அகோபிலேசன் உருவத்தில் நேரடியாக வந்து தன் காதலை வெளிப்படுத்திய பொழுது அந்த மங்கை வெட்கி தலை குனிந்தாள். தான் என்றும் காணாத, பெயர் கேட்காத, ஆனால் அவள் நெஞ்சத்தில் நிறைந்த இடம் பிடித்த தன் மனத்துக்கினியான் எதிரில் வந்து தன் கையைப் பற்றிய போது அவள் மெய்சிலிர்த்து போனாள். நாணத்தை மறைத்தபடியே ஒரு புன்னகை பூத்து தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். நரசிம்மன் அவளது பெற்றோர்களை சந்தித்து அவர்களின் ஒப்புதலையும் பெற, திருக்கல்யாணத்திற்கு தேதி குறிக்கப்படுகிறது.

தனது திருமணம் மிகவும் சிறப்பான முறையில் மட்டுமல்ல, காட்டுக்கு வெளியே உள்ள கிராம மக்களின் முன்னிலையில் நடக்கவேண்டும் என்று வேண்டினாள். நெஞ்சில் நின்றவளின் எண்ணத்தை அறிந்த நரசிம்மன் அவளின் ஆசையை நிறைவேற்ற தீர்மானித்தான். பொங்கல் பண்டிகையின் மறுநாள் ஆன காணும் பொங்கல் அன்று அகோபிலத்தில் இருந்து புறப்பட்டான். சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களையெல்லாம் சென்றடைந்து, அந்த ஊர் மக்களை தனது திருமணத்திற்கு அழைப்பு விடுத்து, அவர்கள் எல்லோரையும் கையோடு கூட்டிக் கொண்டு 42ஆம் நாள் அகோபிலம் திரும்பினான். செஞ்சிதா மனம் விரும்பியபடி ஊர்மக்கள் புடைசூழ, மேளதாளங்கள் முழங்க அந்த அகோபிலேசனை கைப்பற்றினாள். அவளின் திருமணக் கனவு மிகவும் சிறப்பாக நிறைவேறியது.

இந்த நிகழ்வைத்தான் இன்றும் நாம் அகோபிலத்தில் காணலாம். காணும் பொங்கலன்று ‘பார்வேட்டை உற்சவம்’ என்கிற பெயரில் ஜ்வாலா நரசிம்மன் மற்றும் பிரகலாத வரதன் சிலைகளை ஒரு அலங்கரித்த பல்லக்கில் அகோபிலம் சுற்றியுள்ள 33 கிராமங்களுக்கு 41 நாட்களுக்கு பவனி வரச்செய்து 42ஆம் நாள் ஊர் திரும்புவார்கள். அன்றே செஞ்சுலக்ஷ்மியுடன் நரசிம்மனின் திருக்கல்யாணம் நடைபெறும்.

அகோபிலத்தில் பல்லாண்டு காலமாக வசிக்கும் பழங்குடி மக்களான செஞ்சு சமூகத்தினர் செஞ்சுலக்ஷ்மித் தாயாரை தமது வீட்டுப்பெண்ணாக கருதுவர். தம் வீட்டு பெண்ணை மணம் முடிந்த நரசிம்மனை மாப்பிள்ளையாகப் பார்ப்பார்கள். இன்றைய காலகட்டத்தில், இந்த தலைமுறையினர் நரசிம்மனை பொங்கலுக்கு வீட்டுக்கு வரும் ஒரு மைத்துனனாகக் கருதி ஆரவாரத்துடன் வரவேற்பர். அந்த மக்களின் அன்பும், அளவு கடந்த பக்தியும் நம்மை மெய்சிலிர்க்கவைக்கும். 600 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் இந்த பார்வேட்டை உற்சவத்தின் வெற்றிக்கு இந்த செஞ்சு மக்களின் பங்களிப்பு மிகவும் போற்றப்பட வேண்டிய விஷயம்.

இந்த "செஞ்சுலக்ஷ்மி திருக்கல்யாணம்" நிகழ்வு நமக்கு இறைவனின் இன்னொரு கோணத்தையும் காட்டுகிறது. தன் மனம் கவர்ந்த மங்கைக்காக தனது உக்கிரமான உருவத்தை மாற்றிக்கொண்ட நரசிம்மன், ஒரு படி மேலே சென்று, தான் கைபிடிக்கப் போகும் பெண்ணுக்காக 42 நாட்கள் சுற்றியுள்ள ஊர்களை வலம் வருகிறான். அசுர சம்ஹாரம் எனும் ஒரு காரணத்திற்காக கடுமையான, உக்கிரமான முகம் படைத்து அவதாரம் எடுத்தாலும், அந்த கடவுளின் இதயம் என்றுமே மென்யானது.

கருணையே வடிவான அந்த இறைவன் தன் பக்தனுக்காக சிங்கமுக கடவுள் அவதாரம் எடுத்தான். தன் பிராட்டியின் ஆசைக்கிணங்கி ஊரையே வலம் வந்தான். ஒரு பூவிலிருந்து தேன் ஒழுகுவது போல், திருமாலின் நெஞ்சிலிருந்து கருணை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். அது பக்தனாக இருந்தாலும் சரி, மனையாளாக இருந்தாலும் சரி. நெஞ்சில் நிறைவான பக்தியுடன் பிரார்த்தித்தால் அவன் ஒரு நொடியில் நிறைவேற்றி வைப்பான். கருணையெனும் ஓடையான அந்த நரசிம்மனின் பரந்த உள்ளத்துக்கு கடுமையான தோற்றம் என்பது ஒரு முகத்திரை மட்டுமே என்பது அவனின் தீவிர பக்தர்கள் அறிவர்.

## ஸ்ரீபத்மாவதி – ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவம்



**திருமலையில் பரிணயோத்ஸவம் வைசாக சுத்த தசமியில் நடைபெறும்**

ஸ்ரீபத்மாவதி – ஸ்ரீநிவாச பரிணயோத்ஸவ மஹோத்ஸவத்தின்போது, திருமலையப்ப ஸ்வாமி யானை, குதிரை, கருட வாகனத்திலும், தேவியர் இருவரும் ஒரே பல்லக்கிலும் நாராயணகிரி உத்யானவனத்தை அடைவர். அங்கு திருமணச் சடங்குகள் வேத கோஷங்கள் முழங்க நடைபெறும். மூன்று நாட்களிலும் நான்கு வேதங்களிலிருந்தும் திவ்யமான மந்திரங்களை வேத விற்பன்னர்கள் முழங்குவதுடன், மங்கல வாத்யம், கர்நாடக சங்கீதம், வாத்யக் கச்சேரிகள், ஹரிகதை, நடனம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். ஒவ்வொரு நாளும் தெய்வீகத் தம்பதியரின் கொலுவும், ஊஞ்சல் சேவையும் கண்டு தெய்வீகத் தம்பதிகளின் திவ்ய அருளைப் பெற்றிடலாம்.

அன்று, நம்மால் திருமலைக்குச் செல்ல இயலவில்லை என்றாலும் பத்மாவதி – ஸ்ரீநிவாச திருக்கல்யாண சித்திரபடத்தின் முன் விளக்கு ஏற்றி, நமக்கு வாதிராஜர் மற்றும் புரந்தரதாசர் வரப்பிரசாதமாக அருளிய ஸ்ரீபத்மாவதி – ஸ்ரீநிவாச கல்யாண கீர்த்தனைகளைப் பாராயணம் செய்யலாம். அதனால் அவ்விடத்தில் மங்கலகரமான சூழல் நிலவுவதுடன், அந்த இல்லத்தில் உள்ளவர்களுக்கு காலத்தே கல்யாணம் கைகூடுவதோடு அவர்கள் பதினாறு பேறுகளைப் பெற்று பெருவாழ்வு வாழ்வர்.









# சித்திரை மாதத்தில்...

– முனைவர் பா காயத்ரி, சென்னை.

தமிழ் மாதங்களில் முதலிடம் பெற்றிருக்கும் சித்திரை மாதத்தை சமஸ்கிருதத்தில் 'சைத்ர மாதம்' என்றழைப்பர். இம் மாதத்தில் பல சிறப்பு தினங் களும், திருவிழாக்களும் கொண்டாடப்படும். அவற் றில் சிலவற்றை காண்போம்.

சித்திரை மாதம் என் றாலே அனைவரின் நினைவி லும் வருவது மதுரையில் தேவி மீனாட்சி சுந்தரேஸ் வரர் திருக்கல்யாண வைபவ மான சித்திரைத் திருவிழா தான். மேலும், இம்மாதத்தில் தான் மதுரை கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கி மாண்டுக மகரிஷிக்கு விமோ சனம் தந்த வைபவம் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

சித்திரை மாதத்தில் தான் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நிலை நாட் டிய இராமானுஜாசாரியரின் ஜெயந்தியும் கொண்டாடப் படுகிறது. மேலும், சித்திரை மாதத்தில் தான் காஞ்சி ஸ்ரீ வரதராஜ ஸ்வாமியின் திருக் கோயிலில் நடைவாவி உற்சவம் அதாவது எம்பெருமான் இராமாநுஜருக்கு அருள் செய்த வைபவத்தை நினைவூட்டும் வகையில் நடவாவி எனும் கிணற்றுக்குள் எழுந்தருளும் உற்சவம் நடைபெறும்.

சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமி அன்றுதான் உயிர்களின் கணக்கை எழுதும் சித்திரகுப்தரின் பிறந்தநாள் விழா கொண்டாடப் படுகிறது. அன்றைய தினத்தில் சித்ரகுப்தரை வழிபட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள சித்ராநதி ஸ்நானம் பாவங்களை ஒழிக்கும் என்று கருதப்படுகிறது. மேலும், சித்திரை மாத சித்ரா பௌர்ணமி சந்திர தரிசனமும் சித்ரான்னம் அதாவது நிலாச்சோறு உண்பதும் யாவரும் அறிந்ததே.

சித்திரை மாத வளர்பிறை திருதியையில் தான் அட்சய திருதியையும் வருகின்றது. இந்நாளில் தான் குபேரன் மகாலட்சுமித்தாயாரை வழிபட்டு செல்வம் பெற்றான். கிருஷ்ணர் குபேரனுக்கு செல்வம் அளித்த நாள், பரசுராமர் அவதரித்த நாள் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்நாளில் லட்சுமி குபேர பூஜை செய்து, தான தருமங்கள் செய்தால் நம் இல்லங்களிலும் ஐச்வர்யம் பெருகிடும்

சித்திரை மாதத்தில் சித்ரா நட்சத்திரத்தின் பௌர்ணமி நாளில் தானம் மற்றும் சத் விஷயங்கள் செய்தால் சிறியதாயினும் பன்மடங்கு பலன் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. அதோடு இத்தினத்தில் மதுரை மீனாட்சி கோயிலில் சிறப்பு தேவேந்திர பூஜை நடைபெறும். இத்தினத்தில் சித்ரகுப்த விரதம் மிகவும் விசேஷமானது.

சித்திரை மாதத்தில்தான் காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் நடதாரி உற்சவம் அதாவது எம்பெருமான் பிரம்மாவுக்கு அருள் புரிந்த வைபவத்தை நினைவூட்டும் விதமாக ஸ்ரீ வரதராஜப் பெருமாள் பாலாறு நதிக்கரை ஓரத்தில் திருவீதி உலா செல்லுதல் நடைபெறும். மேலும் திருவண்ணாமலை மாவட்டம் அண்ணாமலையார் கோயிலில் சித்ரா பௌர்ணமி கிரிவலம் மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாகும்.

இத்தனை சிறப்பு வாய்ந்த சித்திரை மாதத்தில் பக்தர்களாகிய நாமும் கோயிலுக்குச் சென்று எம்பெருமானை சேவித்து விரதம் அனுஷ்டித்து கோவிந்தனின் திருவருளைப் பெறுவோம்.

# தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை

முனைவர்
ச. செந்திலாண்டவன்,
சென்னை, 9444582856

### ஆபத்சந்நியாசம்

ஆதிசங்கரர் ஆபத்சந்நியாசம் எடுத்துக் கொள்ள நேர்ந்த நேரத்தில், தன் மகன் எப்படி ஆகினும் உயிருடன் இருந்தால் போதும், இறப்பில் இருந்தும், முதலையின் வாயிலிருந்தும் சங்கரர் மீண்டு வந்தால் போதும்; உயிருடன் அவர் இருந்தால் தன் கடைசி காலம் வரையில் அவரைக் கண்ணாரக் கண்டு மகிழலாமே என்றும் எண்ணி, அவர் தாயார் ஆர்யாம்பாள், அவரை சந்நியாசம் எடுத்துக் கொள்ளச் சம்மதித்தார்.

### ஆதிசங்கரரின் உறுதி

அந்தச் சமயத்தில் ப்ரைஷோச்சுரண மந்திரத்தைக் கூறி, ஆபத்சந்நியாசம் எடுத்துக் கொண்ட ஆதிசங்கர பகவத் பாதாள், தன் வயோதிக நிலையில், தன் ஒரே மகன், தன் ஈமச்சடங்குகளைச் செய்யக்கூட அருகில் இருக்க மாட்டானே என வருந்திய தாய் ஆர்யாம்பாளிடம் சங்கரர் உறுதியளிக்கின்றார்.



### நினைத்தாலே வருவேன்

அன்னையே! "நீங்கள் எப்போது நினைத்தாலும், இரவாக இருப்பினும், பகலாக இருப்பினும் அந்திக் காலமாக இருந்தாலும், விடியல் நேரம் என்றாலும், நீங்கள் நினைவோடு இருந்தாலும், நினைவிழந்த நிலையில் இருந்தாலும், துயருற்ற நிலையில் இருந்தாலும், என்னை நீங்கள் நினைத்த மாத்திரத்தில் மற்ற எப்பணிகள் இருந்தாலும் அவற்றை விட்டு விட்டு, உங்களிடத்தில் ஓடோடி வருவேன் அம்மா. நீங்கள் உயிர் நீத்தால், உங்கள் இறுதிக்கடன்களை நானே செய்வேன் அம்மா. நீங்கள் என்னை நம்பலாம்" என்று உறுதி அளித்தார். அதைக்கேட்டு மனம் தெளிந்து மகிழ்ந்தாள் அன்னை ஆர்யாம்பாள்.

### அன்னையின் மறைவு

சிறிது காலத்திற்குள் தன் தாயார் மறைந்த செய்தியைத் தன் ஞானதிருஷ்டியால் உணர்ந்த ஆதி சங்கரர், தன் தவ மகிமையால், தேவலோக விமானத்தில் வேத வாக்கியங்கள் ஒலிக்கத் தன் தாயைப் புண்ணிய உலகத்திற்கும், மோட்ச பதத்திற்கும் அனுப்பிய பிறகு, தன் தாய் உயிர் நீத்த இடத்திற்கு ஓடோடி வந்து, தன் தாயின் பூத உடலுக்கு, உற்றார் உறவினரின் எதிர்ப்பிற்கு இடையே தனது தாயின் வீட்டின் பின்புறம், வாழை மட்டைகளை அடுக்கித் தன்னுடைய யோக வலிமையால் தீயை உண்டாக்கி இறுதிச் சடங்குகள் செய்தார். பிறகு என்னதான் சந்நியாசியாக இருந்தாலும் அவருக்கும் தாய்ப் பாசம் இருக்கும்தானே?

### மாத்ரு பஞ்சகம் அருளல்

தன் தாய் தனக்குச் செய்த நன்மைளையெல்லாம், நினைத்து நினைத்து, கட்டுக் கடங்காத துயருற்றவராக,

"மாத்ரு பஞ்சகம்" என்ற சுலோகம் பாடி உருகினார். அந்த மாத்ரு பஞ்சகச் செய்திகள் உலகில் உள்ள எல்லாத் தாய்மார்களும் தன் குழந்தையை வளர்க்க எவ்வளவு பாடுபட்டு இருப்பார்கள் என்ற உணர்வையும், தாயிடத்தில் நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு கடமைப்பட்டிருக்க வேண்டும் என்பதையும், இந்த உலகில் சூரியனும் சந்திரனும் உள்ளவரையில் உணர்த்திக் கொண்டே இருக்கும் பெரும்புகழ் பெற்றதாகும்.

வாருங்கள் மாத்ரு பஞ்சகத்தின் மகாவாக்யங்களின் உயர்வினை எண்ணி உயர்வோம்!

### மாத்ரு பஞ்சகப் பாடல்களின் கருத்து

தாயே! என்னைக் கருவாய்த் தாங்கி, இவ்வுலகில் பிறக்கும் வரையில் பத்து மாதம் சுமந்து, உடல்மெலிந்து, நீ பட்ட துயரங்களுக்கெல்லாம் நான் என்ன கைம்மாறு செய்யமுடியும். அம்மா! குழந்தையென உன் மடிதவழ்ந்த, நீ பட்ட துயரங்களை அவளையில் மகிழ்ந்து உச்சி மோந்தாய்; எனக்கு ஏதும் ஒன்றென்றால் இரவெல்லாம் கண்விழித்து என்னை உன் கண்ணின் மணியாகக் காத்தாயே.

அம்மா! என்னால் ஏற்பட்ட மல மூத்திரங்களை முகம் கோணாமல் துடைத்து மகிழ்ந்தாயே! எனக்காகப் பத்தியங்கள் பல இருந்து முகமலர்ச்சியுடன், நீ வாடினாலும் என்னை வாடாமல் காத்தாயே! நீ செய்த – நீ பட்ட



துன்பங்களுக்கு எல்லாம் எத்தனைப் பிறவி எடுத்துக் கைம்மாறு செய்தாலும் அந்தக் கடன் தீராதம்மா. தாயே! உனக்கு எனது உயிரனைய வந்தனங்கள் உரித்தாகுக.

### தாயின் கனவு

நான் குருகுல வாசத்தில் இருந்த போது, நான் சன்யாசம் பெற்றதாக விடியலில் கனவு கண்டு, குருகுலத்திற்கு ஓடிவந்து, என்னை அணைத்துக் கதரினாய். காரணம் அறிந்து அந்தக் குரு குலமே கதறிற்றேயம்மா!. அத்தகைய தாயான உன் திருவழகுகளில் விழுந்து வணங்கிக் கதறுகிறேன் அம்மா! உன் திருவாயில் கங்கைநீர், தரவில்லையே.

எல்லாச் சக்திகளும் அற்றுப்போன உன் அந்திமக் காலத்தில் உயிர்க் காப்பிற்கு உன் வாயில் சிறிது கங்கைநீர் தந்திருந்தால் எனக்கு ஆறுதலாய் இருந்திருக்கும். அந்தப் பாக்யமும் நான் பெறவில்லை! வருடா வருடம் உனது திதியில் முறைப்படி சிரார்த்தம் செய்து, உன் ஆத்மாவைத் திருப்தி செய்விக்கும் பாக்யத்தையும் சந்நியாசியான நான் அடையாது போய் விட்டேன் அம்மா!.

### உனக்கு நமஸ்காரம்

உனது இறப்புக் காலத்தில் தாரக மந்திரத்தை உன் காதில் ஓதி, அதன் மூலம் உன்னை மறுபிறப்பு அற்ற மோட்சத்தை அடைவிக்கும் பாக்யத்தையும், காலந் தாழ்த்தி வந்த காரணத்தால் இழந்து விட்டேனே அம்மா! அப்படிப்பட்ட என்மீதும் கருணை வைப்பாயா அம்மா! உனக்கு நமஸ்காரம்.

### வாய்க்கரிசி போடவோ வந்தேன்?

அம்மா, என்னைக் கூப்பிடும் போதெல்லாம் "கண்ணே! முத்தே! மணியே! என் இராஜா! குழந்தை! நீ நூறாண்டு வாழவேண்டும்!" என்று வாழ்த்திக் கொண்டே இருப்பாயே அம்மா!

அப்படிப்பட்ட உன் வாய்க்கு இன்று நான் வாய்க்கரிசி அல்லவா போடுகிறேன் அம்மா! உனக்கு நமஸ்காரம்.

### கைம்மாறு என்ன செய்வேன்?

அம்மா, நீ, பேறுகால வேதனையில், அம்மா அப்பா! சிவா! கிருஷ்ணா! கோவிந்தா! முகுந்தா! என்று எல்லாம் கதறிய உன் ஒரு கதறலுக்குப் பிரதிபலன் செய்ய முடியுமா? அம்மா! மகோன்னதமான தாயே! உனக்கு நமஸ்காரம்.

### தாயிற் சிறந்த கோயிலுமில்லை

முற்றும் துறந்த சந்நியாசியான ஆத்மாத்ம பரமேஸ்வர அவதாரமான ஸ்ரீ ஆதிசங்கரரையே தாயன்பானது கதறச் செய்தது என்றால், அதற்குக் காரணம், தாயிற் சிறந்த கோயிலுமில்லை என்னும் மகாவாக்கியத்தை உறுதிப்படுத்தத் தோன்றியவர் என்பதை உணர்கிறோம் அல்லவா!.

பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டையும் அவர்கள் உயிரோடு இருக்கும் போதும் போற்றிப் பாதுகாக்க வேண்டும். மறைந்த பிறகும் அவர்க்குரிய சிரார்த்தம் முதலிய நீர்க்கடன்களை மறவாது செய்ய கடமைப்பட்டுள்ளார்களாம்.

### பட்டினத்தார் பாடிய தாயின் பெருமை

ஆதிசங்கரரின் மாத்ரு பஞ்சகத்தோடு பட்டினத்தார், தன் தாயின் இறுதிச்சடங்கை தானே செய்வேன் என்று தாய்க்குக்கூறிய உறுதிமொழி யினால், அவர் தன் தாய்க்குச் செய்த இறுதிச் சடங்கில் தாயின் பெருமையைப் பாடிய பாடல்கள் ஒப்புநோக்கிப் போற்றத் தக்கன! அப்படியே மாத்ரு பஞ்சகம் அமைந்தனை.

*ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்று,*
*பையல் என்றபோதே பரிந்தெடுத்துச் -செய்யஇரு*
*கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை*
*எப்பிறப்பில் காண்பேன் இனி?*

*முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் அளவும்*
*அந்திபகலாச் சிவனை ஆதரித்துத் - தொந்தி*
*சரியச் சுமந்து பெற்றத் தாயார் தமக்கோ*
*எரியத் தழல் மூட்டுவேன்?*

*வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்*
*கட்டிலிலும் வைந்தென்னைக் காதலித்து - முட்டச்*
*சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ*
*விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?*

*நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை*
*தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்*
*கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ*
*மெய்யிலே தீ மூட்டுவேன்?*

*அரிசியோ நான் இடுவேன்? ஆத்தாள் தனக்கு*
*வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்-உருசியுள்ள*
*தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப் பூ*
*மானே! என அழைத்த வாய்க்கு?*

*அள்ளி இடுவது அரிசியோ? தாய்தலைமேல்*
*கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல்மெள்ள*
*முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்*
*மகனே! எனஅழைத்த வாய்க்கு!*

*முன்னையிட்ட தீ முப்புரத்திலே*
*பின்னையிட்ட தீ தென் இலங்கையில்*
*அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே*
*யானும் இட்ட தீ மூள்க! மூள்கவே!*

பட்டினத்தாரும் துறவியாக ஆனபின்பும் அன்னையின் மீது வைத்த பாசத்தினால் தாயின் பெருமையைப் பத்துப்பாடல்கள் பாடினார். விரிவஞ்சி சுருக்கமாகப் பதிவிட்டோம்.

மாத்ரு தேவோ பவ:


## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியில் மாற்றம் இருந்தால் அல்லது அதை முறைபடுத்துவதன் பொருட்டு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தெரியப் படுத்தவும். மேலும், chiefeditortpt@gmail.com எனும் மின் அஞ்சல் (இமெயில்) வாயிலாகவும் தெரிவிக்கலாம்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.







108 திவ்விய தேச வைபவம்



# திருஅயோத்தி

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

## புராணவரலாறு:

பெரிய பெருமாள், நம்பெருமாள் என்கிற அர்ச்சா மூர்த்திகள் அயோத்தி மாநகரில் எழுந்தருளி இருந்தனர். இம்மண்ணுலகில் அயோத்தி, வைகுந்தத்தின் ஒரு பகுதியே என்பதை புராணம் சொல்கிறது. முக்தி தரும் நகரங்கள் ஏழில் ஒன்றான அயோத்தியின் பெருமையைப் பார்வதிக்குப் பரமேச்வரன் கூறுவதுபோல் இவ்வரலாறு அமைந்துள்ளது.

பிரமனின் மைந்தன் சுவாயம்புமனு. உலகினைப் படைக்கும் தொழிலைச் செய்யுமாறு பிரமன் ஆணையிடுகிறான். தான் அத்தொழிலை எவ்விடத்தில் இருந்துகொண்டு செய்வது? என்று மனு கேட்கிறான். அவனையும் அழைத்துக்கொண்டு, பிரமன் எம்பெருமானிடம் சென்று, இதனைத் தெரிவிக்க, பகவான் வைகுந்தத்தின் மையப் பகுதியைப் பிரித்து பிரமனுக்கு வழங்க, பிரமன் மனுவுக்கு வழங்க, மனுவினால் மண்ணுலகிற்குக் கொண்டுவரப் பெற்ற வைகுந்தத்தின் ஒரு பகுதியே, அயோத்தி மாநகர்.

இந்த நகரத்தில் உள்ள புனித தீர்த்தங்கள் பலப்பல. அயோத்தியை ரகு என்ற மன்னன் ஆண்டபோது கௌத்ஸர் என்ற ரிஷி தன் குருவாகிய விசுவாமித்திரருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையாகிய, பதினான்கு கோடி பொற்காசுகளை ரகு மன்னனிடம் கேட்க. ரகு குபேரனை வேண்ட குபேரன் பொன்மழை பொழிய, தனக்கு வேண்டிய பொற்காசுகளை மட்டும் கௌத்ஸர் எடுத்துக் கொண்டாராம். அவ்வாறு பொன்மழை பொழிந்த இடம் "சுவர்ணகனி". இவ்வாறு பொற்கொடை கொடுத்ததால் ரகு அரசன் குழந்தைப்பேற்றை அடைந்ததாகச் சொல்வர்.

இராமனாகத் தம் அவதாரக் கடமைகளை எல்லாம் நிறைவேற்றிய பின், ஸரயூ நதியில் இறங்கி, தன் உடன் வந்தோர் அனைவருக்கும் வைகுந்தப்பேற்றை அருளி, தானும் தன்னடிச் சோதியை அடைகிறான். சரயுவில் இராமன் இறங்கிய இடத்தைச் சுவர்க்கத்துவார தீர்த்தம் என்பர்.

இத்தகைய தீர்த்தங்களின் பெருமையைப் பார்வதிக்குக் கூறிய சிவபெருமான் நிறைவாகப் "புலன்களை வென்று, மனத்தூய்மையுடன் ராம மந்திரத்தைச் சொல்லி வந்தால் வைகுந்தத்தை அடையலாம்" என்று சொல்கிறார்.

இட்சுவாகு குலதெய்வமாகிய திருவரங்கச் செல்வனையும், சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமனையும், பிராட்டியையும், சகோதரர்களையும், சிறிய திருவடியாகிய அநுமனையும் பிரதிஷ்டை செய்து வேதத்தோடு பிரபந்தங்களும் அங்கு ஒலிக்குமாறு செய்தவர் 'அம்மாஜி மந்திர்' என்ற மகத்தான திருக்கோயிலை உருவாக்கியவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த யோகி பார்த்தசாரதி மற்றும் அவர் மனைவியான ஸ்ரீயோகி சிங்கம்மா ஆவர். ஸ்ரீ யோகி சிங்கம்மாவின் பெயரில்தான் "அம்மாஜி மந்திர்" உள்ளது.

**சிறப்புகள்:**

அயோத்தியின் புகழ்பாடும் இலக்கியம் எல்லா மொழிகளிலும் உள்ளன. கம்ப நாட்டாழ்வார் சொல்கிறார்: அயோத்தியை, நிலமகளின் திருமுகம்: திலகம்: கண்கள்: திருமாங்கல்ய மங்கலம்: அணி மார்பில் விளங்கும் முத்துமாலை: உயிர்கள் அனைத்தின் உறைவிடம் என்று பலவாறாகப் புகழ்கிறார்.

*"நிலமகள் முகமோ! திலகமோ! கண்ணோ! நிறை நெடுமங்கலநாணோ! இலகு பூண் முலைமேல் ஆரமோ! உயிரின் இருக்கையோ! யாது என வியப்பாம்?"*

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | ஸ்ரீராமன், சக்கரவர்த்தித்திருமகன், இரகுநாயகன் (வடக்கு நோக்கிய அமர்ந்த திருக்கோலம்). |
| தாயார் | : | சீதாப்பிராட்டி. |
| விமானம் | : | புஷ்கல விமானம் (புஷ்பக விமானம் என்றும் கூறுவர்). |
| தீர்த்தம் | : | பரமபதஷத்ய புஷ்கரணி, சரயூநதி. |
| பிரத்யக்ஷம் | : | பரதன், தேவர்கள், மாமுனிவர்கள். |
| மங்களாசாசனம்: | | நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமங்கையாழ்வார். பெரியாழ்வார். |

திருஅயோத்தி திவ்ய தேச தரிசனம் தொடரும்...

## 2026, மே மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 01 | ஸ்ரீகூர்ம ஜெயந்தி. |
| 02 | அன்னமய்யா ஜெயந்தி. |
| 07–09 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி வஸந்தோத். |
| 12 | திருப்பதி ஸ்ரீகங்கை அம்மன் சித்திரைத் திருவிழா, ஹனுமத் ஜெயந்தி. |
| 23–31 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 28–ஜூ.05 | ரிஷிகேஷ்/நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத். |
| 30 | நம்மாழ்வார் சாத்துமுறை. |
| 11–16 | ரிஷிகேஷ் பார்வதி தேவி சமேத ஸ்ரீ சந்தர மௌலீஸ்வர ஸ்வாமி பாஞ்சாஹ்னிக கல்யாணோத்ஸவம். |



## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

73. பகவத் விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேணும் என்னும் ஆஸக்தி கொண்ட அனைவரையும் கேவலம் அவருக்குள்ள க்ருபை மற்றும் தயை குணத்தால் உத்தரிக்க வேணும் என்று ஸங்கல்பித்த ஆசார்யரை எவ்வாறு அழைக்கின்றனர்?

க்ருபாமாத்ர ப்ரஸன்னாசார்யர், பகவத் ராமாநுஜ ஸ்வாமி என்று அழைப்பர்.

74. ஸ்வாமி குருகைகாவலப்பன் அஷ்டாங்க யோகத்திலிருந்து சொட்டைக்குலம் சேர்ந்தவர் யாரானாலும் வந்தார்களா? என்று எவர் விஷயத்தில் சிஷ்யர்களைக் கேட்டார்?

யாமுநாசார்யர்.

75. வரவரமுனிகள் விஷயமாக கண்ணிநுண் சிறுத்தாம்பு, அமலனாதிபிரான், மாமுனிகள் நூற்றந்தாதி ஆகிய க்ரந்தங்களை இயற்றிய ஆசார்யர்கள் யாவர்?

கண்ணிநுண்சிறுத்தாம்பு – கோயில் கந்தாடை அண்ணன், அமலனாதிபிரான் – ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன், மாமுனிகள் நூற்றந்தாதி – ஸேனைமுதலியார் ஜீயர்.

76. கலியுகத்தில் அவதரிக்கப்போகும் பவிஷ்யத் ஆசார்யர் விஷயமாக "கலியும் கெடும் கண்டுகொண்மின்" என்று நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி பாசுரம் எது?

திருவாய்மொழி 5–2–1 – பொலிக பொலிக பொலிக.

- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.

தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.



அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# அருளாளப்பெருமாள் எம்பெருமானார்

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

**வ**ட வேங்கடம் என்று சொல்லப்படுகிற திருமலை தாழ்வரையில் ஸுவர்ணநதிக் கரையில், விஞ்சை நகரம் என்னும் பிரஸித்தி பெற்ற ஊரில் விளம்பி வருடம் 919இல் கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷ சதுர்த்தசி பரணி நக்ஷத்ரத்தில் கௌசிக கோத்ரத்தில் தோன்றியவர் யஜ்ஞ மூர்த்தி என்னும் பெயரை உடையவராய், எல்லா சாஸ்த்ரங்களிலும் வல்லவராய், அக்காலத்தில் இருந்த அத்வைதிகளுக் கெல்லாம் தலைவராய் இருந்தவர். எம்பெருமானார் இவருடன் 18 நாள் வாதப்போர் செய்து தேவப் பெருமாள் அருளாலே வெற்றி கொண்டதன் காரணத்தால் அருளாளப்பெருமாள் எம்பெருமானார் என்று இவருக்குத் திருநாமமிட்டார்.

திருவாழும் தென்னரங்கம் சிறக்க வந்தோன் வாழியே
தென்னருளாளர் அன்பால் திருந்தினான் வாழியே
தருவாழும் எதிராசன் தாளடைந்தோன் வாழியே
தமிழ் ஞானப்ரமேயஸாரம் தமர்க்குரைப்போன்வாழியே
தெருளாரு மதுரகவி நிலை தெளிந்தோன் வாழியே
தேசுபொலி மடந்தன்னைச் சிதைத்திட்டான் வாழியே
அருளாள மாமுனியாம் ஆரியன் தாள் வாழியே
அருள் கார்த்திகைப் பரணியோன் அனைத்தூழி வாழியே.

## பதவுரை

திருவாழும் – பெரிய பிராட்டியாரான ஸ்ரீரங்க நாச்சியார் வாழ்கின்ற, தென்னரங்கம் – அழகிய திருவரங்கமானது, சிறக்க வந்தோன் – பெருமை பெறத் தோன்றியவர், வாழ்க – வாழவேண்டும்; தென் அருளாளர் அன்பால் – தேவப்பெருமாள் திருவருளால், திருந்தினான் – திருந்தியவர். தருவாழும் – கற்பகம் போல் வாழ்கின்ற, எதிராசன் – இராமாநுசர், தாளடைந்தான் – திருவடியை அடைந்தவர்; தமிழ் ஞான ப்ரமேய ஸாரம் – தமிழ்ப் பாடலாகிய ஞான ஸாரத்தையும் ப்ரமேய ஸாரத்தையும், தமர்க்கு – பாகவதர்களுக்கு, உரைப்போன் – சொன்னவர்; தெருளாரு மதுரகவி நிலை – திவ்ய ஞானம் நிறைந்த மதுரகவியாழ்வார் நிலையான பாகவத நிஷ்டையில், தெளிந்தோன்–தெளிந்தவர்; தேசுபொலி – ஒளி பொருந்திய, மடம் தன்னை – எம்பெருமானார் மடத்தை, சிதைத்திட்டான் – அழியச்செய்தவர்; அருளாள மாமுனியாம் – அருளாளரான பெரிய முனிவரான, ஆரியன் தாள் – ஆசார்யர் திருவடிகள்; அருள் கார்த்திகை – ஒளி அருள்புரியும் கார்த்திகை மாதத்தில், பரணியோன் – பரணியில் பிறந்தவரான அருளாளப் பெருமாள் எம்பெருமானார், அனைத்து ஊழி– எல்லா கல்பத்திலும், வாழியே – வாழவேண்டும்.

## சிறப்புரை

*(திருவாழும் தென்னரங்கம் சிறக்க வந்தோன் வாழியே)* – திரு – பல பொருள் ஒரு சொல். வேறொன்றுக்கில்லாத மேன்மை. இங்கு லக்ஷ்மி என்று பொருள். லக்ஷ்மியான ஸ்ரீரங்கநாச்சியார்

வாழும் தென்னரங்கம். ஸ்ரீரங்க மஹாத்ம்யத்தில் பிரமன் ஸ்ரீரங்க விமானத்தைச் சேவிக்கும்போது ஸ்ரீரங்கநாதனுடைய பரந்த திருமார்பில் கருணையே வடிவான திருவான ஸ்ரீரங்கநாச்சியாருக்கான இருப்பிடம் காணப்பட்டது என்று சொன்னது காண்க. மேலும், அரங்கன் தென்னரங்கத்துக்கு வரும் முன்னமேயே திருவான ஸ்ரீரங்கநாச்சியார் எழுந்தருளி அரங்கன் அமர்ந்தபின் வெளிப்பட்டவள் என்பர். அத்தகைய திருவான ஸ்ரீரங்க நாச்சியார் வாழும் தென்னரங்கத்தில் எம்பெருமானார் திருவருளால் சிறப்பு பெற்றவர் அருளாளப் பெருமாள் எம்பெருமானார். இவ்வாசாரியருக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

*(தென்னருளாளர் அன்பால் திருந்தினான் வாழியே)* தென்னருளாளரான தேவப்பெருமாள் எம்பெருமானார் மூலமாக அன்பு கொண்டு திருந்தினவர் யஜ்ஞமூர்த்தியாவர். யஜ்ஞமூர்த்தி என்னும் பிராம்மணனான மகாவித்வான் கங்கையில் ஸ்நானம் செய்து அங்கேயே வித்யையாலும், சிஷ்ய ஸம்பத்தாலும் மிகுதியை உடையவரானார். அங்கு தென்திசையில் இராமாநுசருடைய வைபவத்தைக் கேட்டு அவருடன் வாதம் புரிய தம்முடைய க்ரந்தங்களை சுமை சுமையாகக் கட்டி எடுத்துக் கொண்டு தன் வித்யா கர்வம் தோற்ற பெரிய மதிப்புடனே உடையவரிடம் தர்க்கிக்க எண்ணி திருவரங்கம் வந்து, அவரை அழைத்தான். உடையவரும் ஒப்புக்கொண்டு நீ தோற்றால் என்ன செய்கிறாய் என்று கேட்டார். அவனும் நான் தோற்றால் உம்முடைய பாதரக்ஷையைச் சுமந்து உம்முடைய பேரையுமிட்டுக்கொண்டு உம்முடைய ஸித்தாந்தத்திலே புகுவேன் என்று சொன்னான். உடையவரும் தாம் தோற்றால் க்ரந்த ஸந்யாஸம் பண்ணித் தோற்றோம் என்கிறோம் இத்தனை என்றார். அவனும் ஒப்புக்கொண்டு பதினெட்டு நாள் எல்லையாகக் கொண்டு வாதத்தைத் தொடங்கினான். இவ்வாறு பதினாறு நாள் ஒருவருக்கொருவர் தோலாமல் தர்க்கித்தனர். அவனை ஜயிக்க முடியாமல் பதினேழாம் நாள் அவனுடைய யுக்தி ப்ரபலமாக எம்பெருமானார் ஒன்றும் தோன்றாமல் இருந்தார். அவனோ வெற்றி தோற்ற இருந்தான். எம்பெருமானார் மிக்க வருத்தத்துடன் தம் மடத்துக்கு எழுந்தருளி, பெருமாளுக்கு திருவாராதனம் முதலானவற்றைச் செய்து, அமுது செய்யப்பண்ணி, அவருடன் பெருமாளே நம்மாழ்வார் தொடங்கி ஆளவந்தார் முடிவாக இத்தனை காலம் ஓராண் வழியாய் நிலைநிறுத்தி வந்த இந்த தர்சனம் அடியேனைத் தோற்றித் தோற்கக் கடவதோ. இந்நாள் வரையில் தேவரீர் ஸ்வரூப, ரூப, குண, விபூதிகள் உண்மை என்று ப்ரமாணத்தை நடத்தி வந்தீர். இப்போது ஒரு பொய்யான மதத்தைப் பின்பற்றுபவர் மூலமாக என்னுடைய காலத்திலேயே எல்லா பிரமாணங்களையும் அழித்து லீலை கொண்டாட எண்ணீனீராகில் அப்படியே செய்தருள்க என்று விண்ணப்பித்து தாம் அமுது செய்யாமல் படுத்துக் கொண்டார். அன்று இரவு தென் அருளாளரான தேவப்பெருமாள் எம்பெருமானார் கனவில் தோன்றி இளையாழ்வீர், நீர் எதற்குக் களைத்தீர். உமக்கு ஸமர்த்தனான ஒரு சீடனை உண்டாக்கி தந்தோம். உம்முடைய பரம ஆசார்யரான ஆளவந்தார் அருளிய மாயாவாத கண்டனத்தைச் சொல்லி அவனை வெற்றி கொள்ளும் என்று அருளினார். உடையவரும் கண் விழித்து கனவில் சொன்னதை செயல்படுத்த எழுந்திருந்து மிக்க மகிழ்ச்சியுடன் தம் பெருமாளுக்கு திருவாராதனம் செய்து கம்பீரமாய் தர்க்க கோஷ்டிக்கு எழுந்தருளினார். அந்த வித்வான் உடையவருடைய காம்பீர்யம் கண்டும், மத்தகஜம் போல் வருவதைக்கண்டும் இவர் மனிதர் அல்லர். அதிமாநுஷசேஷ்டிதமாய் இருக்கிறது என்று நிச்சயித்து அவர் திருவடிகளில் ஸேவித்து தேவரீருக்குத் தோற்றேன் என்று சொன்னான்.

உடையவரும் இது என்ன என்று திகைத்து, உடனே மாயாவாத ஸித்தாந்தத்தை விளக்கினார். அதாவது ஞானரூபமான பர ப்ரஹ்மத்தை அஜ்ஞானமான அவித்யை மறைத்த ஆகில் அந்த வித்யைக்கு அழிவில்லை. ஆகையாலே அது நித்யமாய் விடும். அப்படி ஆனால் அவித்யை என்றும், ப்ரஹ்மம் என்றும் இரண்டு வஸ்து உண்டாகையாலே, அத்வைதம் என்கிற பெரிய யானை த்வைதமாகிற ஆழங்காற் சேற்றிலே அமிழ்ந்தது என்று அருளிச்செய்ய, அவனும் இசைந்து உடையவருக்குத் தோற்று ஏகதண்டத்தை முறித்து எறிந்துவிட்டு எம்பெருமானாருடைய பாத ரக்ஷைகளை தலையில் வைத்துக்கொண்டு தமக்கு அருள்புரிய

வேண்டினான். அவரும் த்ரிதண்ட காஷாயம் முதலானவற்றை தந்து அன்பின் மிகுதியால் திருவிலச்சினை முதலான பஞ்ச ஸம்ஸ்காரங்களை அருளி த்ரிதண்டம், காஷாயம் முதலானவற்றை தரித்திருக்கச் சொன்னார். இதுவன்றோ திருந்தினபடி. தென்னருளாளரான தேவப்பெருமாள் தமக்குக் கனவு மூலமாக அருளின உதவிக்கு நினைவாக அருளாளப்பெருமாள் எம்பெருமானார் என்று திருநாமம் சாத்தி அருளினார். இத்தகைய ஆசார்யருக்குப் பல்லாண்டு.

*(தருவாழும் எதிராசன் தாளடைந்தோன் வாழியே)* – தரு – கற்பக மரம். எல்லா விருப்பங்களையும் அளிப்பவர் எதிராசர் என்றபடி. எதிராசர் – யதிகளுக்கு எல்லாம் தலைவர். யதிகள் யாவரிலும் மேம்பட்டவர். இராமாநுசர் ஸந்யாஸ ஆசிரமம் கொள்ளும்போது தேவப்பெருமாள் இட்ட பெயர் எதிராசர். அந்த எதிராசரையே **''எனை ஆளவந்த கற்பகம்''** (இராமாநுச நூற்றந்தாதி–53) என்பர் அமுதனார். இதற்கு நித்ய விபூதியிலிருந்து லீலாவிபூதிக்கு எழுந்தருளின கல்பகம் என்று மாமுனிகள் உரை. அதாவது அமுதனார் கிடந்த இடம் தேடி வந்து விஷயீகரித்த இது பெரிய வள்ளல் தன்மை அன்றோ என்றபடி. அவ்வாறு இருப்பவரான எதிராஜர் திருவடியை அடைந்தவர் அருளாளப் பெருமாள் எம்பெருமானார் ஆவர். அவருக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

*(தமிழ் ஞானப்ரமேயஸாரம் தமர்க்கு உரைப்போன் வாழியே)* – தமிழ் என்பது தமிழ் பாடலுக்கு ஆகு பெயராகும். அந்த வகையில் அருளாளப்பெருமாள் எம்பெருமானார் அருளிய தமிழ்ப்பாடல் நாற்பது கொண்ட ஞான ஸாரமும், பத்து பாடல்கள் கொண்ட ப்ரமேய ஸாரமும் ஆகும். தமர்கள் – தமக்கு வேண்டியோர், பாகவதர்கள் என்றபடி. ஞானஸாரமாவது – எம்பெருமானாரிடம் நித்ய கைங்கர்யம் பண்ணி சேவித்திருந்த அருளாளப்பெருமாள் எம்பெருமானார் தம்முடைய பரம கருணையாலே இவ்வர்த்த விசேஷங்களை எல்லாரும் அறிந்து உய்வுபெற எண்ணி தத்வம், ஹிதம் – நன்மை, புருஷார்த்த ஞானத்தினுடைய கருத்தை பெண்ணுக்கும் பேதைக்கும் தெரியக்கடவ தமிழ் மொழியிலே இந்தப் பிரபந்தம் வாயிலாக அருளிச் செய்கிறாராகையாலே இதுக்கு ஞான ஸாரம் என்று திருநாமமாயிற்று. ப்ரமேய ஸாரமாவது – எம்பெருமானார் திருவடியில் ஸேவை பண்ணி தத்வம், ஹிதம், புருஷார்த்த விசேஷங்கள் எல்லாம் சரம பருவம் (பாகவதர்கள்) வரையிலாக எம்பெருமானார் அருளிச்செய்யக்கேட்டு, அதில் ஊன்றினவரான இவர் தம்முடைய பரம கருணையாலே எல்லா சாஸ்த்ரங்களிலும் ஓரோரு இடத்திலே கருத்தின் மூலமாகத் தெரிவிக்கையாலே அதனை எல்லாரும் அறியும்படி சுருக்கி ஞானஸாரம் என்னும் ப்ரபந்தம் அருளினார். பின்னர், எல்லா சாஸ்த்ரத்தின் சுருக்கமாகையாலே ப்ரமாணமான வேதத்தின் ஸாரமான திருமந்த்ரத்தில் தெரிவிக்கிற ப்ரமேயங்களின் கருத்தைச் சுருக்கி இந்த ப்ரபந்தம் வாயிலாக அருளினார். ஆகையால் இதுக்கு ப்ரமேய ஸாரம் என்று திருநாமமாயிற்று. இதுவன்றோ தமர்களான பாகவதர்களுக்குச்செய்த உபகாரம். அத்தகையோர்க்குப் பல்லாண்டு பாடுவோமாக.

*(தெருளாரு மதுரகவி நிலை தெளிந்தோன் வாழியே)* தெருள் – திவ்ய ஞானம். அதாவது பரமனைப்பற்றிய ஞானம். அது நிறைந்திருப்பவர் மதுரகவியாழ்வார். திவ்ய ஞானமாவது ஆசார்ய அபிமாநத்தில் ஊற்றமுடையவராய் இருக்குமவர். மதுரகவி – இனிமையாகப் பாடல் பாடுபவர். மற்ற ஆழ்வார்களைப்போல எம்பெருமானுக்கு அடிமைப் படாமல் அப்பெருமானுக்கு அடியவரான நம்மாழ்வாருக்கு அடிமையாயிருப்பவர். மேலும், ஆசார்யனை உடையவனே உண்மைப் பொருளை உணர்வான் என்று சாந்தோக்ய உபநிடதம் கூறிய படியே உலகுக்கெல்லாம் ஆபரண ஸ்தானத்தில் இருப்பவர். அன்பரான நம்மாழ்வார் திருவடிக்கு அன்பரானவர். தேவுமற்றறியேன் என்று நம்மாழ்வாரையே ஆசார்யராகவும் தெய்வமாகவும் கொண்டு வழிபட்டு, ஆழ்வாரைப்பற்றி கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற பதினோரு பாசுரங்களைப் பாடி அவர் அருளால் திவ்யப்ரபந்தங்களைப் பெற்றவர். எல்லோரையும் தம்முடைய ஊற்றத்தை உடையராம்படி பண்ணவல்ல ஆசாரியனுக்கு இட்ட வழக்கான நிறைவை உடையவர். இராமாநுசர் திருவடியில் ஆச்ரயிக்க மேல்நாட்டிலிருந்து வந்த அனந்தாழ்வான், தொண்டனூர் நம்பி, மருதூர் நம்பி ஆகியோரை இராமாநுசர், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் திருவடிகளைக் காட்டிக் கொடுக்க,

அவரும் பயப்பட்டவராய் ஸமாச்ரயணம் செய்து அவர்களைக்குறித்து குருவியின் கழுத்தில் பனங்காயைக் கட்டினாற்போலே எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்று இரும் என்று அருளியது காணலாம். இதுவே மதுரகவி நிலை. மேலும், வேதாந்த தேசிகர் "துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே" என்றது காண்க. இந்த நிலையைக் கேட்டு அறிந்து அதன்படி எம்பெருமானார் திருவடியே தஞ்சம் என்று தெளிந்த ஞானமுடையவராகையாலே அவருக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

*(தேசுபொலி மடந்தன்னைச் சிதைத்திட்டான் வாழியே)* மடம் – அருளாளப் பெருமாள் எம்பெருமானார் மடம். இம்மடத்தை எம்பெருமானார் அமைத்துக் கொடுத்ததாலே தேசு பொலிவுடன் திகழ்ந்தது. ஒரு சமயம் வேறு தேசத்திலிருந்து இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவரங்கம் வந்து திருவீதியில் நின்றவர்களிடம் எம்பெருமானார் மடம் எது? என்று கேட்டனர். அவர்களும் எந்த எம்பெருமானார் மடம்? என்று கேட்க, அருளாளப்பெருமாள் எம்பெருமானாரும் நீங்கள் இரண்டிட்டுச் சொல்லுவானென்? நம் தர்சனத்துக்கு இரண்டு எம்பெருமானார் உண்டோ? என்று கேட்டார். அவர்களும் உண்டு. அருளாளப் பெருமாள் எம்பெருமானாரும் எழுந்தருளி இருக்கையாலே சொன்னோம் என்றனர். நாங்கள் அவரை அறியோம். உடையவர் மடத்தையே கேட்டோம் என்றனர். ஆனால், இராமாநுசர் மடம் ஈது? என்று அவர்கள் காட்ட அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் உடையவர் மடமே சென்று புகுந்தனர்.

இதை எதிர்ப்பாராத விதமாக அருளாளப் பெருமாள் எம்பெருமானார் கேட்டு ஐயோ நாம் உடையவரைப்பிரிந்து வேறு இடத்தில் இருக்கையாலன்றோ லோகத்தார் நம்மை எம்பெருமானார்க்கு எதிர்த்தட்டாகச் சொன்னார்கள். ஆகையாலே நாம் அநர்த்தப்பட்டோம் என்று மிகவும் வருந்தி, அப்போதே தம்முடைய மடத்தை சிதைத்து வந்து உடையவர் திருவடிகளைக் கட்டிக் கொண்டு தாம் அநாதிகாலம் இவ்வாத்மா தேவரீர் திருவடிகளை அகன்று அநர்த்தப்பட்டுப் போந்தது போதாமல் இப்போதும் அகற்றிவிடத் திருவுள்ளமாய் விட்டதோ என்று மிகவும் வருந்தினார் என்று குருபரம்பராப்ரபாவம் கூறும். அதன் பின்னர் உடையவர் நியமனத்தாலே அவர் பக்கலில் பிரியாமல் இருந்தார். அத்தகைய ஆசார்யருக்குப் பல்லாண்டு பாடுவோம்.

*(அருளாள மாமுனியாம் ஆரியன் தாள் வாழியே)* யஜ்ஞமூர்த்தியாய் திருவரங்கம் வந்து எதிராஜருடன் பதினெட்டு நாள் தர்க்கவாதம் கொண்டவரை வெல்ல முடியாது வருந்திய எம்பெருமானாருக்கு அருளாளப்பெருமாளான வரதன் அருளாலே இவரை வெற்றி கொண்ட காரணத்தாலேயே "அருளாள மாமுனி" என்று பெயரிட்டார். அமுதனார் பேரியல் நெஞ்சே.... ஆரியன்.... இராமாநுசன் என்று எம்பெருமானாரைக் குறித்தது இவருக்கும் பொருந்தும். எவ்வாறெனில் இராமாநுசர் யஜ்ஞமூர்த்தியை வெல்லமுடியாத நிலையில் கனவில் தேவப்பெருமாள் வந்து உமக்கு ஸமர்த்தனாயிருப்பான் ஒரு சீடனை உண்டாக்கித் தந்தோம் என்று அருளியது காண்க. ஆரியன் என்ற சொல்லுக்கு "ஸமாதிகத ஸர்வசாஸ்த்ர:" என்கிறபடியே சாஸ்த்ரங்கள் அனைத்தையும் நன்கு அறிந்தவர் என்று உரையிட்டார் மாமுனிகள். அது யஜ்ஞ மூர்த்திக்கும் பொருந்தும். கண்ணன் கீதையில் "அநார்ய ஜுஷ்டமஸ்வர்க்யம்" என்பதற்கு எம்பெருமானார் கீதா பாஷ்யத்தில் ஆர்ய சப்தத்துக்கு வித்வான் என்று வியாக்யானம் செய்தார். அப்படிப்பட்டவரே அருளாளப்பெருமாள் எம்பெருமானார். ஆகையாலே ஆரியன் என்னக் குறையில்லை. அவ்வெம்பெருமானாரின் திருவடி வாழ வேண்டும்.

*(அருள் கார்த்திகைப் பரணியோன் அனைத்தூழி வாழியே)* அருளுதல் – மகிழ்தல். கார்த்திகை மாதத்துக்கு மகிழ்ச்சியாவது ஆழ்வார்களில் திருமங்கையாழ்வாரும், திருப்பாண் ஆழ்வாரும், ஆசார்யர்களில் நம்பிள்ளையும், மற்றும் பரணியில் அருளாளப்பெருமாள் எம்பெருமானாரும், ஈயுண்ணி மாதவப்பெருமாளும் அவதரித்த பெருமை உடையதாகும். மேலும், கார்த்திகை மாதத்தில் விஷ்ணு கோயில்களில் விளக்கு ஏற்றுவது என்று விஷ்ணு தருமம் கூறும். இத்தகைய மகிழ்ச்சி கொண்ட கார்த்திகையில் இவ்வாசாரியர் அவதரித்தமை பற்றி சொல்ல, எல்லாக் கல்பத்திலும் பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாம உரை தொடரும்...

ஆரோக்கியம் காப்போம்

# சூரியனும் ஆரோக்கியமும்

ஆயுர்வேத மருத்துவர்
டாக்டர்.கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை, 89409 91234

சூரிய நாராயணன் என்பது ஒளியையும் உயிரையும் கொண்டு வருவதற்குப் பொறுப்பான பகவான் நாராயணனின் வெளிப்படும் விரிவாக்கமாகக் கருதப்படுகிறது. காயத்ரி மந்திரத்தில் அழைக்கப்படும் தெய்வீகம் சூரிய நாராயணன். அவர் அனைத்து அறிவுக்கும் மூலமாகவும், வாழ்க்கையைத் தூண்டுபவ ராகவும் கருதப்படுகிறார். வேதங்கள், உபநிஷத் மற்றும் ஸ்ரீமத் பாகவதம் போன்றவை சூரிய நாராயணன் என்பது சூரிய கோளத்திற்குள் இருக்கும் உயர்ந்த கடவுளான பகவான் நாராயணன் விஷ்ணுவே ஆவார்.

நரசிம்ம புராணம் மற்றும் பிற நூல்கள் சூரியனின் கோளத்தின் மையத்தில் (சாவித்ரி–மண்டல– மத்ய வர்த்தி) அமர்ந்திருக்கும் பகவான் நாராயணனை தியானிக்க வேண்டும் என்று விவரிக்கின்றன. அவர் தங்க நிற உடலைக் கொண்டவராகவும், கிரீடம் மற்றும் காதணிகளை அணிந்தவராகவும், சங்கு மற்றும் சக்கரத்தை ஏந்தியவராகவும் காட்சிப்படுத்தப்படுகிறார். சூரியனுக்குள் இருக்கும் ஹிரண்மய புருஷனை (தங்க நிறத்தில் இருப்பவர்) இருளுக்கு அப்பாற்பட்டவராக அடையாளம் காட்டுகிறது (*ஆதித்ய வர்ணம் தமச: பராஸ்தத்*) ரிக் வேதம் (புருஷ சூக்தம்). வேதங்களில் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து சடங்கு நடவடிக்கை களுக்கும் மூலாதாரமாக இருப்பவர் சூரியநாராயணர், 12 மாதங்களையும், 6 பருவங்களையும் கட்டுப்படுத்த தனது உடலை பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்தார்.

ஒளிச்சேர்க்கையைச் சாத்தியமாக்கும் ஒளி மற்றும் ஆற்றலின் முதன்மையான மூலமாக அவர் இருக்கிறார், இதன் மூலம் பூமியில் உள்ள அனைத்து உயிர்களையும் நிலைநிறுத்துகிறார். அவர் அனைத்து உயிரினங்களின் நன்மை தீமை செயல்களைக் கவனிக்கும் அனைத்தை யும் காணும் சாட்சி கர்ம சாக்ஷி (செயல்களின் சாட்சி).

ஆயுர்வேதத்தில், வசந்தம் மற்றும் கோடை ஆகியவை அதான காலத்தில் (வடக்கு சங்கிராந்தி) உள்ள பருவங்களாகும், இந்தக் காலகட்டத் தில் சூரியனின் ஒளிக் கதிர்கள் தீவிரமாக இருக் கும். இதனால் உடல் வலிமை குறைந்து வறட்சி அதிகரிக்கும். இந்த இரண்டு பருவங்களும் கபத்தின் திரட்சியில் இருந்து வாதத்தின் திரட்சிக்கு மாறுவதைக் குறிக்கின்றன. வசந்த ருது மற்றும் கிரீஷ்ம ருது பற்றி ஆயுர்வேதம் கூறுவதைக் காண்போம்.

### 1. வசந்த ருது (வசந்த காலம்:

மார்ச் நடுப்பகுதி முதல் மே நடுப்பகுதி வரை வசந்த ருது என்பதாகும். இது புதுப்பித் தல் பருவமாகக் கருதப்படுகிறது, ஆனால் குளிர் காலத்தில் குவிந்த கப தோஷம், லேசான வெப்பத்தால் அதிகரிக்கும் காலமாகும்.

#### தோஷத்தின் தாக்கம்:

கபம் அதிகரிக்கிறது, இது பசியின்மை, சளி, ஒவ்வாமை மற்றும் நெரிசல் போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கிறது.

#### உணவுமுறை பரிந்துரைகள்:

லேசான, எளிதில் ஜீரணமாகும் உணவு களை விரும்புங்கள். கசப்பான, காரமான மற்றும் துவர்ப்புச் சுவைகளை உட்கொள்ளுங் கள். உணவில் பார்லி, கோதுமை மற்றும் தேன் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

### 2. கிரீஷ்ம ருது (கோடை காலம்:

மே மாதத்தின் நடுப்பகுதி முதல் ஜுலை மாதத்தின் நடுப்பகுதி வரை. கிரீஷ்ம ருது என்பது கோடையின் உச்சக்கட்டம் ஆகும். இது அதிக வெப்பநிலை, கடுமையான வெயில் மற்றும் வறண்ட காற்று ஆகியவற்றால்

**திருமலையில்...**

**பக்தர்கள் தரிசனத்திற்கு வரிசையில் செல்லும்போது முன்னால் செல்பவர்களைத் தள்ளிக்கொண்டும், முந்திக் கொண்டும் ஓடாதீர்கள்.**

**வரிசையில் செல்லும் போது வீண் உரையாடல்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கு இடையூறு இன்றி ஸ்வாமியின் திருநாமங்களைத் துதித்தபடி செல்லுங்கள்.**

**இக்கலியுகத்தில் நாம பாராயணம் மோட்சத்தை அளிக்கவல்லது.**

வகைப்படுத்தப்படுகிறது. உடலின் சக்தி மற்றும் செரிமான நெருப்பு (அக்னி) பலவீனமடைகிறது.

### தோஷத்தின் தாக்கம்:

கபம் அமைதியடைகிறது. ஆனால் வறண்ட, வெப்பமான சூழ்நிலைகள் காரணமாக வாத தோஷம் குவியத் தொடங்குகிறது.

### உணவுமுறை பரிந்துரைகள்:

குளிர்ச்சியூட்டும், புத்துணர்ச்சியூட்டும் மற்றும் நீரேற்றம் தரும் உணவுகளை உட்கொள்ளுங்கள். இனிப்பு, லேசான, குளிர்ந்த மற்றும் மெலிந்த உணவுகளை விரும்புங்கள். தர்பூசணி, வெள்ளரி, தேங்காய் தண்ணீர், மோர் மற்றும் அரிசி ஆகியவற்றைச் சேர்க்கவும். கொத்தமல்லி, புதினா போன்ற குளிர்ச்சி தரும் மூலிகைகளைப் பயன்படுத்துங்கள். காரமான, சூடான, உப்பு மற்றும் புளிப்பு உணவுகளைத் தவிர்க்கவும்.

### வாழ்க்கை முறை பரிந்துரைகள்:

பகலில் குளிர்ந்த, நிழலான பகுதிகளில் ஓய்வெடுக்கவும். லேசான பருத்தி ஆடைகளை அணியுங்கள். தேங்காய் அல்லது சந்தனாதி தைலம் போன்ற குளிரூட்டும் எண்ணெய்களைக் கொண்டு அபயங்கா (மசாஜ்) பரிந்துரைக்கப்படுகிறது. கடுமையான உடற்பயிற்சி மற்றும் நேரடி, தீவிர சூரிய ஒளியைத் தவிர்க்கவும்.

### எளிமையான உணவு வகைகள்:

நீர்மோர், பானகம், வெண்பூசணிச் சாறு மோருடன், மாதுளம் பழச்சாறு, தர்பூசணி பழம், வெள்ளரிக்காய், முலாம் பழம்/பழச்சாறு, இளநீர், நன்னாரி சர்பத்/ஜூஸ், நுங்கு, பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு, பாதாம் பிசின் தண்ணீரில் ஊறவைத்து சாப்பிடுதல், பழையசாதம் மோர் விட்டு சாப்பிடுதல், கம்புசாதம் மோர் விட்டு சாப்பிடுதல் மற்றும் அனைத்து வகையான பழங்கள் உட்கொள்ளுதல் உடலுக்கு குளிர்ச்சி கொடுத்து அதிகபடியான உஷ்ணத்திலிருந்து விடுபட்டு ஆரோக்கியமாக இருக்க உதவும்.

### சூரிய ஒளியில் உள்ள நன்மைகள்

சூரியஒளி, உடலுக்குத் தேவையான வைட்டமின் டி3-யை வழங்கி எலும்புகளை வலுப்படுத்துகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. இது செரோடோனின், மெலடோனின் போன்ற ஹார்மோன்களைச் சுரக்கச் செய்து மன அழுத்தத்தைக் குறைத்து, மகிழ்ச்சியான மனநிலையை மேம்படுத்துகிறது. காலை வெயில் சருமத்தில் படுவது இரத்த அழுத்தத்தைக் குறைத்து, சிறந்த தூக்கத்திற்கும் வழிவகுக்கிறது.

சூரிய கதிர்கள் தோலில் படும்போது, உடல் வைட்டமின் டி-யை இயற்கையாக உற்பத்தி செய்கிறது. இது எலும்புகளுக்கு கால்சியம் உறிஞ்சுதலை உறுதி செய்வதோடு வலுவான நோயெதிர்ப்பு அமைப்புக்கு உதவுகிறது. இரத்த அழுத்தத்தைக் குறைத்து, இதய ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும். 5-30 நிமிடங்கள் காலை வெயிலில் இருப்பது உடலுக்குப் புத்துணர்ச்சி அளிக்கிறது.

### சூரிய நமஸ்காரத்தின் பயன்கள்:

சூரிய நமஸ்காரம் உடல் மற்றும் மனதிற்கு பல நன்மைகளைத் தரும் ஒரு முழுமையான யோகா பயிற்சி; இது இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது, தசைகளை வலுப்படுத்தி நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது, செரிமானத்தை சீராக்குகிறது, மன அழுத்தத்தைக் குறைத்து மனதை அமைதிப் படுத்துகிறது, எடை இழப்புக்கு உதவுகிறது. மேலும், நுரையீரல் மற்றும் இதயம் போன்ற முக்கிய உறுப்புகளின் செயல்பாட்டைத் தூண்டி, ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது.

குழந்தைகள் இளம் வெயில் நேரத்தில் ஓடியாடி விளையாடுவதாலும், பெரியோர்கள் காலைப் பொழுதில் நடைப்பயிற்சி செய்வதாலும் பலபல நன்மைகள் கிடைக்கின்றன. தற்காலத்தில் காணப்படும் அதிகப்படியான உடல் உபாதைகளிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ள சூரிய நாராயணன் அருளைப் பிரார்த்திப்போமாக.



# ஏப்ரல் 2026
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். குழந்தைகள் ஆரோக்கியம் மேம்படும். செலவிற்கு ஏற்ற வருமானம்,தம்பதி இடையே அன்னியோன்யம், ஆரோக்கியம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். வாகனம், வீடு, மனை வாங்கும் யோகம், உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. சுப காரியங்கள் நடக்கும். தைரியமாகக் காரியங்கள் செய்து வெற்றி பெறும் மாதம்.

**ரிஷபம்**

தொழிலில் எதிர்பார்த்த தனலாபம் உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். நண்பர்கள், உறவினர்களால் இருந்த பிரச்சனைகள் தீரும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. தந்தையின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சகல துறைகளிலும் வெற்றி பெற்று சந்தோஷமடையும் இனிய மாதம் இது.

**மிதுனம்**

தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். புதிய முயற்சிகளில் தாமதமாக வெற்றி கிடைக்கும். பெற்றோர்களால் நல்ல அனுகூலம் உண்டு. பூர்வீகச் சொத்துக்களைப் பற்றி பேசலாம். உடல் உஷ்ணம் காரணமாக வயிறு உபாதை ஏற்படும். கோபத்தைத் தவிர்க்கவும். மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தெய்வ பலத்தினால் எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதம் இது.

**கடகம்**

குடும்பத்தில் சுபச் செலவுகள் அதிகமாகும். குடும்பத்தில் மற்றவர்களுடன் பேசும் போது விவாதத்தைத் தவிர்க்கவும். குடும்ப ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை. தம்பதியிடையே சிறு ஊடல்கள் ஏற்பட்டு சரியாகும். வீட்டின் மின் சாதனப் பெட்டிகள் பழுதடையும். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெறுவர். எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதம்.

**சிம்மம்**

பழைய பாக்கிகள் வசூலாகும்.தம்பதியிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். கடும் முயற்சியின் பேரில் சுப காரியங்கள் நடக்கும். மூட்டுவலிக்குத் தக்க மருத்துவம் கிடைக்கும். உடல் உஷ்ணம் அடையும். கடன் வாங்கி வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. கடும் முயற்சியின் பேரில் மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நிதானமாக முன்னேறும் மாதம் இது.

**கன்னி**

புதிய முயற்சிகளுக்குத் தாமதமாக வெற்றி கிடைக்கும். உடல் உஷ்ணம், அஜீரணக் கோளாறு உண்டாகும். தொழில் போட்டி கடுமையாக இருக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். திருஷ்டியினால் வேலைகளும் தாமதமாகும். செலவுகளுக்கு ஏற்ற வருமானம் பெறுவதில் சிக்கல் இருக்கும். மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம் இது.

**துலாம்**

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். குழந்தைகளின் ஆரோக்கியம் மேம்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். தொழில் போட்டியில் வெற்றி கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். கடன் வாங்கி வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. மகிழ்ச்சியால் வெற்றி பெறும் மாதம் இது.

**விருச்சிகம்**

பண விஷயத்தில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். வயிறு உபாதை உண்டு. தொழிலில் கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் தவிர்க்கவும். தொழிலில் அலைச்சல் உண்டாகும். உஷ்ணம் காரணமாக உடல் நலிவு உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு இட மாற்றம் உண்டு. மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய மாதம் இது.

**தனுசு**

வீடு, நிலம், புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் விரைவில் சுப காரியங்கள் நடக்கும். சகோதரர்களுக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். பெற்றோரின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தம்பதியிடையே இருந்த பிரச்சனைகள் நீங்கும். திட தேக ஆரோக்கியம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தெய்வ அருளால் முன்னேறும் மாதம் இது.

**மகரம்**

தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் உண்டு. உடல் உஷ்ணம் காரணமாக மருத்துவ செலவு உண்டாகும். புதிய முயற்சிகளுக்குத் தாமதமாக வெற்றி கிடைக்கும். மாணவர்கள் கஷ்டப்பட்டு படித்து சுமாரான மதிப்பெண் பெறுவர். தொழில் அலைச்சலினால் தூக்கம் குறையும். மிகுந்த எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதம்.

**கும்பம்**

திடீர் தன வரவு உண்டு. பழைய பாக்கிகள் வசூல் ஆகும். குடும்பத்தில் விரைவில் சுப காரியங்கள் நடக்கும். செலவிற்கு ஏற்ற வருமானம் உண்டு. குடும்ப ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உத்தியோகத் தில் பதவி உயர்வு உண்டு. மனச்சஞ்சலங்கள் உண்டு. தொழில் அலைச்சல் காரணமாக தூக்கம் குறையும். படித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும் மாதம்.

**மீனம்**

வேலைப்பளு காரணமாக உடல் வலிகள் உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் உதவி கிடைக்கும். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. ஜாதகத்தில் உள்ள தோஷங்களுக்குப் பரிகாரம் செய்ய வேண்டிய மாதம் இது. பழைய பாக்கிகள் வசூல் ஆகும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் உண்டு. பலவிதங்களிலும் நன்கு முன்னேறும் மாதம் இது.




# போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து!

ஒரு காட்டில் காகம் ஒன்று மிகவும் திருப்தியான மனதுடன் வாழ்ந்து வந்தது. ஒருநாள், அக்காகம் அன்னப் பறவை ஒன்றைக் கண்டது. “இந்த அன்னம் வெள்ளையாக உள்ளதே! நானோ கருப்பாக உள்ளேனே” என்று எண்ணியது.

‘அன்னமே, வெண்ணிறத்தில் இருக்கும் நீயே இவ்வுலகில் மிகவும் மகிழ்ச்சியானப் பறவை என்று எண்ணுகின்றேன்’ என்றது காகம். ‘இல்லை. இரண்டு வர்ணம் கொண்ட கிளியைக் காணும் வரை நானும் அப்படித்தான் நினைத் திருந்தேன்’ என்று அன்னப்பறவை கூறியது.

இதைக் கேட்ட காகம், ஒரு கிளியைத் தேடிச் சென்று அதனிடம் வினவியது. ‘கிளியே, நீ கருப்பாகவோ வெள்ளையாகவோ அல்லா மல், அழகிய இரண்டு வர்ணங்களைக் கொண்டு இருக்கிறாய். ஆகவே, நீயே இவ்வுலகில் மிகவும் மகிழ்ச்சியானப் பறவை என்று எண்ணு கின்றேன்’ என்றது.

‘இல்லை. பல வர்ணம் கொண்ட மயிலைக் காணும் வரை நானும் அப்படித்தான் நினைத்து இருந்தேன்’ என்று கிளி சொன்னது.

இதைக் கேட்ட காகம் மயிலைத் தேடிச் சென்றது. உயிரியல் பூங்கா ஒன்றில் நூற்றுக்கணக்கான மக்கள், கூண்டில் அடைக்கப்பட்டிருந்த மயிலை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். மயிலைக் கண்ட காகம் கூட்டம் கலையும் வரை காத்திருந்தது.

கூட்டம் கலைந்த பின், ‘மயிலே, உன் அழகை ரசிக்க தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் கூடுகின்றனர். பல வர்ணங்களுடன் மிகவும் அழகாக இருக்கும் நீயே இவ்வுலகில் மிகவும் ஆனந்தமான பறவை என்று நம்புகிறேன்’ என்றது காகம். இல்லை. ஒரு காலத்தில் நானும் அப்படித்தான் எண்ணி வாழ்ந்தேன். ஆனால், இக்கூண்டினுள் அடைக்கப்படுவதற்கு இந்த அழகே காரணமாகிவிட்டது.

ஆனால், உன்னை ஒருவரும் கூண்டில் அடைக்க மாட்டார்கள். ஆகையால் நீயே இவ்வுலகிலுள்ள எல்லா பறவைகளிலும் மிகவும் ஆனந்தமான பறவை என்று எண்ணுகிறேன் என்று மயில் தன்னுடைய கவலையை எடுத்துரைத்தது.

காகம் ‘அன்னம் மகிழ்ச்சியாக உள்ளது’ என்றும், அன்னம் ‘கிளி மகிழ்ச்சியாக உள்ளது’ என்றும், கிளி ‘மயில் மகிழ்ச்சியாக உள்ளது’ என்றும் கூறின. இறுதியில், ‘காகமே மகிழ்ச்சியான பறவை’ என்று மயில் கூறியது.

அதுபோலவே, மனிதனும் மற்றவர்கள் தன்னைக் காட்டிலும் மகிழ்ச்சியாக இருப்பதாக எண்ணுகிறான். செல்வம், அழகு முதலிய எதுவும் அவனுக்கு நிறைவைக் கொடுப்பதில்லை. இருப்பவற்றைக் கொண்டு அவன் திருப்தியடைவதில்லை.

உண்மையை உணர்ந்தவன் போதும் என்ற மனதுடன் இன்பமாக வாழ்கிறான்.

**நீதி:** நாமும் இத்தகு மனதுடன் பௌதிக ஆசைகளிலிருந்து விலகி ஆன்மீகத் தளத்தில் திருப்தி அடைவோம்.

– திரு.இரா. அருண்குமார்,
புதுச்சேரி,
9944802769



சிறுவர் உலகம்




எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



சித்திரத்தைப் பாருங்கள் !!




வண்ணம் தீட்டுங்கள் !!






சித்திரை முதல் நாள் அன்று ஆலயத்திற்குச் செல்லும் இக்குடும்பத்தினற்குப் பாதையைக் காட்டுங்கள்!



பாதையைக் கண்டுபிடி!



பூங்கொத்துக்களில் ஒரு சில வித்தியாசமாக உள்ளன. அவற்றை கண்டுபிடியுங்கள்!

விடைகள் :

3,6,9






திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-45

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. கத்யத்ரயத்தை அருளிச் செய்தவர்.........................................
2. அட்சய திருதியை அன்று 12 கருட சேவை நடைபெறும் நகரம்.........................................
3. ஞான ஸாரம், ப்ரமேயஸாரம் பாடல்களை இயற்றியவர்.........................................
4. இராமாநுஜ சதுஸ்லோகீ ஸ்தோத்திரம் அருளிச் செய்தவர்.........................................
5. மதுரை வைகை நதியில் கள்ளழகரால் விமோசனம் பெற்ற மகரிஷி .........................................
6. தன் தாயாருக்காக மாத்ரு பஞ்சகம் அருளியவர்.........................................
7. கருடனின் சிறகசைவில் சாம வேதத்தின் தொனி வருவதாகக் கூறியவர்.........................................
8. இக்ஷ்வாகு குலத்தின் குல தெய்வம்.........................................
9. அகோபிலம் திவ்யதேசத்தில் அருள்புரியும் தாயாரின் திருநாமம்.........................................
10. பாண்டவர்களில் ஜோதிடத்தில் வல்லவனாகத் திகழ்ந்தவன்.........................................
11. அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அவதரித்த மாதம், நட்சத்திரம் .........................................
12. எதிராசரை எனை ஆளவந்த கற்பகம் என்று கூறியவர்.........................................
13. வைகுண்டஸ்தவம் அருளிச் செய்த இராமாநுஜரின் சீடன்.........................................
14. ஒளிச்சேர்க்கைக்கு முதன்மையானதாக இருப்பது.........................................
15. வேதஸ்வரூபி என்றழைக்கப்படும் பெரிய திருவடி.........................................





## போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.04.2026.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| | |
|---|---|
| ஆதி சங்கரர் அவதரித்த திருத்தலம் | |
| ஆதிசங்கரரின் அன்னையின் பெயர் | |
| ஆதிசங்கரர் அன்னைக்காக அருளிய சுலோகம் | |
| பஜ கோவிந்தம் என்னும் சுலோகத்தை அருளியவர் | |
| கனகதாரா ஸ்தோத்திரம் பாடுவதற்கு காரணமான கனி | |
| ஆதிசங்கரர் அருளிய சிவஸ்துதி | |
| நரசிம்மரின் அருளுக்காக சங்கரர் இயற்றிய ஸ்துதி | |
| திருச்செந்தூர் முருகன் மீது சங்கரர் அருளிய ஸ்துதி | |

சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!



**விடைகள்**

1) கேரளா, காலடி, 2)ஆர்யாம்பாள், 3) மாத்ரு பஞ்சகம், 4) ஆதிசங்கரர், 5) நெல்லிக்கனி, 6) சிவபஞ்சாக்ஷரம், 7) ஸ்ரீநரசிம்ம கராவலம்ப ஸ்தோத்ரம், 8) சுப்ரமண்ய புஜங்கம்.

## கணித விளையாட்டு

இங்கு வில்லில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான அம்பின் மேல் உள்ள விடையைப் பொருத்துக

| வில் | வினா |
|---|---|
| 1 | 11+7 |
| 2 | 32+6 |
| 3 | 23-4 |
| 4 | 50-9 |
| 5 | 41+3 |

| அம்பு | விடை |
|---|---|
| i | 18 |
| ii | 44 |
| iii | 41 |
| iv | 38 |
| v | 19 |
| vi | 11 |

**விடைகள்**

1) i, 2) iv, 3) v, 4) iii, 5) ii



*மங்கலகரமான சின்னங்களில் முதன்மையானதாக விளங்குகிறேன். ஒரு சொம்பில் வாசனை திரவியங்களுடன், தீர்த்தம், மஞ்சள், குங்குமம், மலர்கள் எனவும், அரிசி, மங்கலப் பொருட்கள் சேர்த்தும் மாவிலைகளுடன் தேங்காய் (அ) பழங்கள் வைத்து என்னை முறைப்படி அலங்கரிப்பர். மங்கல நிகழ்வுகளில், கோவில் விசேஷங்களில் நான் தான் முதன்மையாகக் காணப்படுவேன். என்னுள் தேவதா மூர்த்திகளை ஆவாஹனம் செய்வதும் உண்டு. முக்கிய நிகழ்வுகளில் மரியாதை நிமித்தம் என்னை பயன்படுத்துவர்.*

*மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...*


விடை : பூரண கும்பம்/கலசம்


சித்திரக் கதை

## திட்டமிட்ட வாழ்க்கை

கதை
திருமதி ஸ்ரீநிதி,
சென்னை.
சித்திரம்
திரு. கமலக்கண்ணன்,
சென்னை.





மதியம் குரு சற்று நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டார்.
பின்னர் பயணத்திற்கு ஆயத்தமானார்.
குருவே! எங்களை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து செல்லப் போகிறீர்களா?
போவதற்கு முன் எங்களுக்கு ஏதாவது நல் அறிவுரை கூறுங்கள்!
குரு சிரித்தப்படி சொன்னார்.
அறிவுரையாக உங்களுக்குச் சொல்ல வேண்டியதைத்தான் இன்று நாள் முழுவதும் நான் செய்து காட்டினேன்.
எப்போதும் சீரான திட்டமிட்ட கட்டுப்பாடான வாழ்க்கை முறையால் தான் நாம் மிகப் பெரிய வெற்றிகளை சாதிக்க முடியும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
   (பெரிய எழுத்துக்களில்) ________________
   ________________
   ________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

### தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-2233333 2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.

## ஸ்ரீபூ சமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் - ஜம்மலமடுகு

**30-04-2026 முதல் 09-05-2026 வரை**

30-04-2026 வியாழன்
சேனாதிபதி உத்ஸவம்
அங்குரார்ப்பணம்

01-05-2026, வெள்ளி
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரியசேஷ வாகனம்

02-05-2026, சனி
பகல் : சிறியசேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

03-05-2026, ஞாயிறு
பகல் : முத்துப் பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

04-05-2026, திங்கள்
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத் வாகனம்

05-05-2026, செவ்வாய்
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட சேவை

06-05-2026, புதன்
பகல் : சர்வ பூபால வாகனம்
இரவு : திருக்கல்யாணம், யானை வாகனம்

07-05-2026, வியாழன்
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

08-05-2026, வெள்ளி
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

09-05-2026, சனி
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துஜாவரோஹணம்



## ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம் - திருப்பதி

**22-05-2026 முதல் 31-05-2026 வரை**



22-05-2026, வெள்ளி
சேனாதிபதி உத்ஸவம்
அங்குரார்ப்பணம்

23-05-2026, சனி
காலை : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

24-05-2026, ஞாயிறு
காலை:சிறிய சேஷ வாகனம்
இரவு:ஹம்ஸ வாகனம்

25-05-2026, திங்கள்
காலை:சிம்ம வாகனம்
இரவு:முத்துப்பந்தல் வாகனம்

26-05-2026, செவ்வாய்
காலை:கல்ப விருக்ஷ வாகனம்
இரவு:சர்வ பூபால வாகனம்

27-05-2026, புதன்
காலை:மோகினி அவதாரம்
இரவு:கருட சேவை

28-05-2026, வியாழன்
காலை:ஹனுமத் வாகனம்
இரவு:யானை வாகனம்
மாலை வஸந்தோத்ஸவம்

29-05-2026, வெள்ளி
காலை:சூரியப்பிரபை வாகனம்
இரவு:சந்திரப்பிரபை வாகனம்

30-05-2026, சனி
காலை:திருத்தேர்
இரவு:குதிரை வாகனம்

31-05-2026, ஞாயிறு
காலை:சக்கர ஸ்நானம்
இரவு:துவஜாவரோஹணம்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-03-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.

